உ

# கோப்பாய், பலானை கண்ணகை அம்மன் கோயில்



# மஹா கும்பாபிஷேக விழா மலர்

குரோதன௵ தைமீ 18உ (31-1-86)

உ
சிவமயம்

# கோப்பாய்
# பலாளை கண்ணகை அம்மன் கோயில்

## புனராவர்த்தன
# மஹா கும்பாபிஷேக மலர்

ஆலய பரிபாலனசபை வெளியீடு

19 - 3 - 1986


உ

# கோப்பாய், பலானை கண்ணகை அம்மன் கோயில்
# மஹாகும்பாபிஷேக விழா மலர்

## மலர்க்குழுவினர்

திரு க. இ. குமாரசாமி
திரு. பொ. கந்தையா
திரு. க. மார்க்கண்டு
திரு. அ. வி. மயில்வாகனம்
திரு. பெ. க. கனகலிங்கம்
திரு. மா. நடராசா
திரு. அ. பஞ்சாட்சரம்

கோப்பாய் பலானை, கண்ணகை அம்மன் கோயில்



மூலஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் கண்ணகை அம்மன்

உ

# கோப்பாய் பலானை, கண்ணகை அம்மன் கோயில்



திருவீதி எழுந்தருளும் கண்ணகை அம்மன்

# வெளியீட்டுரை

நமது நாட்டில் அமைந்திருக்கும் பழைமை வாய்ந்த கண்ணகை அம்மன் கோயில்களில் கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோயிலும் ஒன்றாகும். இத்திருக்கோயில் என்றும் சிறப்பாக நடைபெறத்தக்கவகையில் உபவிதிகள் ஆக்கப்பட்டுள்ளன. இதுவரை ஏழு இலட்சம் ரூபா பெறுமதியான திருப்பணி வேலைகள் நடைபெற்றுள்ளன. முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் கும்பாபிஷேகம் இடம்பெறும்நிலை உருவானது. 31-1-86இல் மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் தக்க வகையில் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. பெருஞ்சாந்தி என்று விதந்தோதப்படும் மஹா கும்பாபிஷேகத்தின் போது, என்றும் நிலைத்து நின்று உபயோகப்படக்கூடிய வகையில் மஹா கும்பாபிஷேக மலர் ஒன்றினை வெளியிடுவதென்றும் பரிபாலனசபை தீர்மானித்தது. நாட்டின் சூழ்நிலை காரணமாக மணம்வீசும் மலர் ஒன்றினை அப்பொழுது வெளியிடமுடியாமற் போய் விட்டது. 19-3-86 புதன்கிழமை மண்டலாபிஷேகப் பூர்த்தி நாளில் குறித்த மலர் வெளி வருதற்குப் பெருங்கருணை புரிந்த கண்ணகை அம்பாளை வழிபடுவோமாக.

இம்மலரில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளிற் பெரும்பாலானவை கண்ணகி வரலாற் றோடு பின்னிப்பிணைந்தவை. துர்க்காதுரந்தரி பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ப. சந்திரசேகரம், பண்டிதர் சபா. ஆனந்தர், கோவைவாணன் முதலானவர்கள் தங்கள் கட்டுரைகள் மூலம் சுவையான செய்திகள் பலவற்றைக் கூறியுள்ளனர்.

பழைய அறிக்கைகளில் இருந்தும் சஞ்சிகைகளிலிருந்தும் சம்பந்தப்பட்ட சில பகுதிகள் அநுவதிக்கப்பட்டுள்ளன.

கும்பாபிஷேகம், சிவசக்தி வழிபாடு என்னும் இருகட்டுரைகளும் பொதுவானவை. நாவலர் பெருமான் அவர்களால் எழுதப்பட்ட கடவுள் வழிபாடு பற்றிய கட்டுரை யிலும் சில பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

திருவாளர்கள் க. இ. சரவணமுத்து, ச. வேலாயுதம்பிள்ளை என்பவர்களது துதிப் பாடல்களும், கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் மீது இருபாலைச் சேனாதிராச முதலியாராற் பாடப்பெற்ற ஊஞ்சற் பாக்களும் இம்மலரில் ஆங்காங்கே அமைந்து சிறப்பிக்கின்றன.

சம்ஸ்கிருத பண்டிதரும் கோவையூர்ப்பிரமுகர்களுள் ஒருவருமான ஸ்ரீ. ச. பஞ்சாட்சர சர்மா அவர்கள் தூபிகளில் அமைந்துள்ள சிற்பங்களுக்குத் தகுந்த விளக்கக் குறிப்புக் களையும், சமயக் கட்டுரைகளிலிருந்து முக்கியமான பந்திகளையும் கொடுத்துதவி, குறித்த மலரை மேலும் மணம் வீசச் செய்துள்ளார்கள்.

சபையின் முன்னைநாள் ஆணையாளர் சட்டத்தரணி சி. பொன்னையா, சித்தாந்தபானு சோ. சுப்பிரமணியக் குருக்கள், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் பூ. க. இராச ரத்தினம், கோப்பாய் வடக்கு சமாதான சபைத் தலைவர் திரு. இ. இராசரத்தினம் முதலான பெருமக்களின் ஆசியுரைகள் சிறப்பாக இடம்பெற்றுள்ளன. பெரியவர்கள் சிலரது ஆசிச் செய்திகளையும் பெற முயன்றும் அவர்களது செய்திகள் உரிய காலத்திற் கிடைக்காமற் போயின. கட்டுரைகளையும் கவிதைகளையும் ஆசிச்செய்திகளையும் தந்துதவிய பெரியார்கள் அனைவருக்கும் எமது நன்றி உரியது.

''கண்ணகை அம்மனின் மஹா கும்பாபிஷேகத்தை என்றென்றும் நினைவுகூரத்தக்க வகையில், எப்படியும் கும்பாபிஷேகமலர் ஒன்றினை ஆலய பரிபாலனசபை வெளியிட வேண்டும். அதற்கு வேண்டிய சகல உதவிகளையும் செய்வதற்கு யான் எப்பொழுதும் தயாராக உள்ளேன்'' என்று கூறி எம்மை இத்துறையில் மிகவும் ஈடுபடுத்தியவர் திரு. இ. இராசரத்தினம் அவர்கள் (கோப்பாய் வடக்கு சமாதான சபைத் தலைவர்) என்பதை நன்றியறிதலுடன் தெரிவிக்கின்றோம்.

கோயில் திருப்பணிக் கருமங்கள் திருத்தொண்டுகள் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டதுடன் இவ்வெளியீட்டின் பொருட்டுப் பல பெரியார்களிடம் பலமுறை சென்று கட்டுரைகள் கவிதைகளைப் பெற்று உதவிய பெருமை ஆலய பரிபாலன சபையின் செயலாளர் ஆசிரியர் திரு. பொ. கந்தையா அவர்களையே சாரும்.

இம்மலர் வெளியீட்டின் பொருட்டு உழைத்த முக்கியஸ்தர்கள் மூவர் உளர்.

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களது பல நூல்களையும், தரம்வாய்ந்த சஞ்சிகைகளையும், மலர்களையும் அச்சிட்டு வெளிப்படுத்திய அநுபவஸ்தரும், உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் பிரதி அதிபருமான திரு. அ. பஞ்சாட்சரம் அவர்கள் ஒருவர்.

இக்கும்பாபிஷேகமலர் மிக மிகச் சிறப்பாயமைவதற்கு இரவும் பகலும் திரிகரண சுத்தியுடன் உழைத்தவர் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை அதிபர் திரு. மு. நல்லையா அவர்கள் என்பது ஈண்டு விசேடமாகக் குறிப்பிடத்தக்கது. அவரது சேவையின் சிறப்பு வார்த்தைகளில் அடங்காது.

அச்சுவேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தஞான்று, கட்டுரைகளை மூலப்பிரதிகளுடன் ஒத்துப்பார்த்து வேண்டிய திருத்தங்கள் செய்து உதவியவர் இளைப்பாறிய தபால் அதிபர் திரு. மு. வைத்தியலிங்கம் அவர்கள். காலத்தினாற் செய்த நன்றி.

இம்மலருக்கு வேண்டிய படங்களை அழகுபடுத்திக் கொடுத்த கொக்குவில் கணேசன் ஆர்ட் ஸ்ரூடியோவினருக்கும், மிகவும் சகாயமான முறையில் புளக்குகளை விரைவாகவும் அழகாகவும் செய்து உதவிய ''ஞானம்ஸ்'' படப்பிடிப்பு நிலையத்தினருக்கும் விசேட நன்றி.

நூல்களையும் மலர்களையும் திறம்பட அச்சிட்டு உதவுவதில் நீண்ட காலமாகவே தமக்கு என்று ஒரு இடத்தைப் பிடித்துக்கொண்டவர்கள் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தினர். இம்மலரின் கவர்ச்சிகரமான அமைப்புக்கு அவர்களே மூலகாரணர்களாவார்கள்.

இன்னும் மலர்க்குழுவினரும் மற்றும் சிலரும் இவ்வெளியீட்டின் பொருட்டு நன்கு உழைத்துள்ளனர்.

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோயில் மஹா கும்பாபிஷேக விழா மலர்க் குழுவினரும், பரிபாலன சபையினரும் சம்பந்தப்பட்ட சகலருக்கும் மீண்டும் மீண்டும் தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றார்கள்.

வணக்கம்

பலானை கண்ணகை அம்மன் கோயில்
கோப்பாய்
*19-3-1986*

**பரிபாலன சபையினர்**

# மனப்பூர்வமான நன்றி

சிவன் கையில் மழு, விநாயகர் கையில் கொம்பு, முருகன் கையில் வேல், வயிரவர் கையில் திரிசூலம், விஷ்ணு கையில் சக்கராயுதம் போன்று எமது மூலஸ்தான விக்கிரகமான கண்ணகை அம்பாள் கையிலும் சிலம்பு அமைந்துள்ளதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இந்த விக்கிரகம் சுமார் 1800 வருடங்களுக்கு முன்னர் இவ்வாலயத்தின் தல விருட்சமான கூழாமரத்தடியில் ஸ்தாபிக்கப்பட்டதென அறியக்கிடக்கின்றது,

இன்று காணப்படும் மூலஸ்தானத்தில் 1956ஆம் ஆண்டிற்குப் பிறகு, சுமார் 30 வருடங்களுக்குப் பின் மிகுந்த பிரயாசத்தின்பேரில் 1986 தை 31 வெள்ளி காலை அத்த நட்சத்திரத்தில் திருவருள் துணைகொண்டு மீண்டும் குடமுழுக்கு நிறைவேறியுள்ளது. அம்பாள் அடியார்களாகிய எமக்கெல்லாம் இந்நிகழ்ச்சி பேருவகை யளிப்பதாகவுள்ளது.

எமது கிராமத்தவரான ஸாகித்திய சிரோமணி கலைமாணி வித்தியா கல்பநிதி சிவஸ்ரீ ப. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் பிரதம குருவாயிருந்து, அவரது தந்தையார் பிரதிஷ்டா கிரியாகலாபமணி வை. மு. பரமசாமிக் குருக்கள், சித்தாந்தபானு சோ. சுப்பிரமணியக் குருக்கள் ஆகியோர் நெறிப்படுத்தல்களுடன், அவர் செய்யும் முதல் குடமுழுக்காகிய இதனை மிகவும் திறம்பட நடத்திமுடித்தமை அடியார்களின் உள்ளத்தே பெருங் குளிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

எமது ஆலய குருவான ப. சண்முகராசக் குருக்கள், ஊரெழு பா. வைத்திய நாதக் குருக்கள், சுன்னாகம் நா. சர்வேஸ்வரக் குருக்கள், விடத்தற்பளை இ. ஸ்ரீரங்கநாதக் குருக்கள், ஆவரங்கால் வே. நடராசக் குருக்கள், மருதனுமடம் எஸ். நித்தியானந்தக் குருக்கள், குப்பிளான் ச. ப. பஞ்சாட்சரக் குருக்கள், கோப்பாய் ச. பஞ்சாட்சரக் குருக்கள், கோப்பாய் சு. சோமசுந்தரக் குருக்கள், ஆவரங்கால் சரண்ய புரீஸ்வரன் முதலான சிவப்பிராமணோத்தமர்கள் உதவியுடன் அம்பாள் அடியார்கள் பேருவகை கொள்ளும்வகையில் இக்கும்பாபிஷேகத்தினை பிரதம குருக்கள் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்கள். இவர்கட்கெல்லாம் எமது மனப்பூர்வமான நன்றி உரியது. எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியிலும் இன்றைய இக்கட்டான காலச் சூழ்நிலையிலும் எவ்வித விக்கினமுமின்றிக் குறித்த குடமுழுக்கு அம்பாள் திருவருள் துணைகொண்டு நடந்தேறியுள்ளது. இவ்வாறு இக் குடமுழுக்கு நிறைவேற அம்பாள் அடியார்களும் நமது பரிபாலன சபையினரோடு சேர்ந்து மேலும் பல உப சபையினர்களும் இணைப்புக் குழுவினரும் தமது பங்களிப்பைத் திருவருள் துணைகொண்டு பூரண மனதோடு செய்து தந்துள்ளனர்.

இவர்கள் எல்லோருக்கும், அம்பாள் அநுக்கிரகம் மென்மேலும் கிடைத்துச் சீரும் சிறப்பும் பெற்று இனிதுவாழப் பிரார்த்திக்கின்றோம்.

" மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம் "

**பரிபாலன சபையினர்**
அருள்மிகு பலாளை கண்ணகையம்பாள் தேவஸ்தானம்
கோப்பாய்

உ

# வாழ்த்துரை

கடல் சூழிலங்கைக் கயவாகுவேந்தன் காலந்தொடக்கம் கண்டிமா நகரிலும், கதிர்காமத்திலும், ஈழநாட்டின் பல்வேறு இடங்களிலும் கோயில் கொண்டிருக்கும் கண்ணகை அம்மன், கோவை மாநகரிலும் கூழாமரத்தடியி லிருந்து அருள் பாலிக்கின்றாள். கண்ணகை அம்மன் கோவை மக்களுக்கு மட்டுமன்றிச் சூழவுள்ள ஊர்களிலிருந்து வந்து தரிசிப்பவர்களுக்கும் நல் வரங்கள் தந்தருளும் தேவியாக விளங்கி வருகின்றாள். கண்ணகை அம்மனை வழிபடுவோர் இம்மையில் பிணிகளினின்றும் விடுபட்டு, வேண்டிய வரங்கள் பெற்று, விவசாய விருத்தி, வியாபார விருத்தி, வித்தியா விருத்தி, சந்ததி விருத்தி முதலாய பல்வேறு பேறுகளையும் பெற்று வாழ்ந்து வருகின்றார்கள்.

இத்தகைய பெருமை வாய்ந்த பலாலைக் கண்ணகை அம்மனின் திருக் கோயில் புதுப்பொலிவோடும் பேரழகோடும் விளங்கவேண்டுமென விரும்பிய ஆலய பரிபாலன சபையினர், மூலாலயத்தின்மேல் இருதள விமானமும், மணிக்கோபுரமும், உட்பிராகார மண்டபங்களும் சித்திரப் பொலிவோடு சிறப்புறச் செய்துள்ளனர். ஆலயத்தின் புனராவர்த்தன சம்புரோட்சணை என்னும் ''பெருஞ் சாந்தி'' யான மஹா கும்பாபிஷேகத்தை நிகழும் குரோதன ஆண்டு தைத்திங்கள் பதினெட்டாம் நாள் வெள்ளி அன்று சிறப்போடு நிகழ்த்தவும், கண்ணகை அம்மனின் திருவருள் விலாசம் மேன் மேலும் அதிகரிக்கவும், உலகினர் அனைவரும் இன்புற்று வாழவும் திருவருளை நினைந்து வாழ்த்துகின்றோம்.

கண்ணகைத் தேவியார் திருக்குட முழுக்கு திருவருட்பொலிவோடு சிறப்புற நிகழுக.

இலங்கை வாழ் மக்களிடையே சாந்தமும் அமைதியும் நட்பும் நிலவுக.

**சித்தாந்தபானு**
**சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள்**
வடகோவை ஸ்ரீசித்திர வேலாயுத சுவாமி கோயில்

# தேவியின் பேரருள் கிடைப்பதாக

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தால் ஆணையாளராக நியமிக்கப்பட்ட பின்பு 7-7-80இல் நான் இக்கோயில் பரிபாலனப் பொறுப்பை ஏற்றேன். பரிபாலன சபையினருக்கும் பூசகரின் ஆதரவாளருக்குமிடையே பலத்த தகராறு இருக்கிற தென்றும், ஆதலின் கோயிலைத் தொடர்ந்து பூட்டிவைப்பது விரும்பத்தக்கதென்றும் சிலர் எமக்குக் கூறினர். கோயிலைப் பூட்டிவைப்பது சமயவிதிகளுக்கு முரணானதென்றும் வழிபாட்டுக்குத் திறந்து வைத்துப் பரிபாலனம் செய்வதற்கே ஆணையாளராகப் பொறுப்பேற்றேன் என்றும் நாம் விடையளித்தோம். உடனடியாகச் செய்யவேண்டிய திருப்பணி வேலைகளைச் செய்வித்து 16-7-80இல் வழிபாட்டுக்குக் கோலாகலமாக விதிப்படி திறந்து வைத்த பாக்கியம் எமக்குக் கிட்டியதைப்பற்றி நாம் பெரிதும் மகிழ்கின்றோம். 28-2-1981இல் பரிபாலனத்தை முறைப்படி தெரிவு செய்த சபையிடம் ஒப்படைத்தோம்.

கோயில் கட்டிடவேலைகள் முற்றுப்பெறாத நிலையைக் கண்டு திருப்பணி வேலைகளை உடனே தொடங்குமாறு நாம் வலியுறுத்தினோம். அதன்பிரகாரம் திருப்பணிகள் இன்று ஒருவாறு முற்றுப்பெற்றுள்ளதைக்கண்டு நாமும் களிப்படைகின்றோம். இக்கோயிலின் இன்றைய வளர்ச்சிக்கும் பரிபாலனத்திற்கும் பொதுமக்களும் வழிபடுவோர்களும் பரிபாலனசபையினரும் அரிய தொண்டாற்றியுள்ளனர். அவர்களுக்கும் மற்றும் அடியார்களுக்கும் இக்கோயிலில் எழுந்தருளியுள்ள தேவியின் பேரருள் கிடைப்பதாக என்று வேண்டுகிறோம்.

**சி. பொன்னையா**
சட்டத்தரணி
முன்னைய விசேட ஆணையாளர்

# கண்ணகைஅம்மன் திருவடிகளை இறைஞ்சுவோமாக

''கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்''. இது ஆன்றோர் வாக்கு. மக்கள் வாழ்வின் மையமாக விளங்குவன கோயில்கள். அவை ஆன்மாக்களை நெறிப்படுத்துவதால் ஆலயங்கள் எனப்படுகின்றன. ஆலயங்களே மக்களின் உயர்ந்த பண்பாட்டையும் கலாசாரத்தையும் எடுத்து இயம்பிநிற்பன. இவ்வகையில் கோப்பாய் மக்களின் உயர்ந்த பண்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக இங்குள்ள ஆலயங்கள் விளங்குகின்றன. சிறந்தமுறையில் ஆலயங்களைப் பேணுபவர்கள் கோப்பாய் மக்கள். அவர்களின் அளப்பரிய தொண்டின் சிகரமாக அமைந்த கண்ணகை அம்மன் ஆலயமும் அங்கு எடுக்கப் கப்படும் மகா கும்பாபிஷேக விழாவும் இக் கிராமத்துக்குப் பெருமை தருவனவாம்.

சமய நம்பிக்கைகளே நலிவுற்று வரும் இவ்வேளையில் கோப்பாய் மக்கள் இப்பெரிய கைங்கரியத்தைப் பேண முடிந்தமை பலானைக் கண்ணகை அம்மனின் அருளேயாம். இன்னல்களுக்கிடையே நிகழ்ந்துள்ள இவ்வாலய முயற்சிகள் போற்றுதற்குரியன. வேதனையுறும் மக்கள் கண்ணகை அம்மனுடைய அருள்பெற்றுய்ய இச்சந்தர்ப்பத்தில் இம் மகா கும்பாபிஷேகம் நிகழ்வது சாலப்பொருத்தமுடையதாகும். பரந்த அடிப்படையில் நமது சமய நெறிகள் மக்கள் மனதில் வேரூன்றி வளரவும் இறை நம்பிக்கையுடன் சமுதாயம் செயற்பட்டு மேலோங்கவும் இம்மகா கும்பாபிஷேக விழா வித்திட வேண்டும். நாடும் சமுதாயமும் சிறந்து வளர்ந்திட கண்ணகை அம்மனின் திருவடிகளை இறைஞ்சுவோமாக.

**பூ. க. இராசரத்தினம்**
அதிபர்
கிறிஸ்தவ கல்லூரி, கோப்பாய்

உ

# அன்பும் இன்பமும் மலரட்டும்

கோப்பாய் பலாலே கண்ணகை அம்பாளின் திருவருள் மலர்ச்சியினல் உண்மை, நேர்மை, இரக்கம் என்பன சுடர் ஒளிவிட்டுப் பிரகாசிக்கட்டும்.

சாந்தம், சாத்துவிகம், அமைதி, சமாதானம் என்பன மக்களிடையே வளர, அடியார்கள் அன்புடன் அம்பாளை வழிபடுவார்களாக.

மக்களின் இதய வீடுகளில் சீதேவி இருந்தருளுவாளாக. விவசாய நிலங்களில் இலக்குமியின் பொன் எழில் பரவட்டும். பஞ்சம், பசி, பிணி, பட்டினி அடியோடு மறையட்டும். அன்பும் இன்பமும் மலரட்டும்.

மெய் அடியார்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் மஹா கும்பாபிஷேக விழா திருவருட் பொலிவுடன் நடைபெற, கண்ணகை அம்பாளின் திருவடிகளை மனசில் இருத்தித் தியானிப்போமாக.

அம்பாளின் நல்லாசிகளை நாம் அனைவரும் பெற்று மனித குலத்தின் மாண்பினை நிலைநிறுத்துவோமாக.

**இ. இராசரத்தினம்**
தலைவர்
சமாதான சபை, கோப்பாய் வடக்கு

# பலாலினக் கண்ணகை அம்மன் கோயில் பரிபாலனசபை, கோப்பாய்

## 27–07–80க்குப் பின்

யாழ் மாவட்ட நீதிமன்றத் தீர்ப்புக்கமைய நீதிமன்றத்தால் நியமனமான ஆணையாளர், சட்டத்தரணி திரு. சி. பொன்னையா அவர்கள் தலைமையின் கீழ் 27-7-80இல் இப் பரிபாலன சபை ஆரம்பித்து வைக்கப்பெற்றது. 05-04-81இல் விதிகளுக்கமைய 15 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பெற்றது. பிரதி வருடமும் மாசி முடிய கணக்குகள் முடிக்கப்பட்டு நிர்வாகசபையும் புதுப்பிக்கப்பெற்று வருகின்றது. சென்ற நான்கு ஆண்டுகளில் சுமார் ரூபா ஏழு லட்சம் மதிப்புள்ள திருப்பணிவேலைகள் நிறைவேறியுள்ளன. சாஸ்திர ரீதியாகவும் பொறியியலாளர்களின் அறிவுரைப்படியும் மண்டபங்களில் திருத்தங்கள், பிராகாரக் கோயில்கள், மற்றும் சிற்பங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. திருவருள் கூட்டப்பெற்று 31-1-86இல் மஹா கும்பாபிஷேகமும் மிகச் சிறப்பாக நிறைவேறியுள்ளது.

கோயில் தூபிகள் அமைப்பு வேலைகள் அராலி திரு. ந. நடராசாவின் மேற்பார்வையிலும், சிற்பவேலைகள் அல்வாய் திரு. எஸ். வரதராசா, நல்லூர் திரு. சி. யோகநாதன் ஆகியோரின் கைவண்ணங்களாலும், ஏகவர்ணம் தீட்டல் திரு. எஸ். நடராசாவினுலும், பிராகார மூர்த்திகள், விக்கிரகங்கள், எழுந்தருளிகள் யாழ் பிறவுண்வீதி சிற்பாசாரி திரு. ந. பாஸ்கரன் என்பவராலும் உருவாக்கப்பட்டன. கண்ணகி வரலாற்றுடன் கூடிய சிற்பங்களே மூலஸ்தானத் தூபியில் மிகுந்த பொலிவுடன் அமைக்கப்பெற்றுள்ளன.

27-7-80ல் பரிபாலன சபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பெற்றுச் சேவையாற்றிய திரு. மு. பரமலிங்கம் அவர்கள் 18-11-85இல் இறைபதம் எய்தினர். அவர் நீதிமன்றுகள் விசாரணைச் சபைகளின் நடவடிக்கைகளுக்கு ஆலோசனைகள் நல்கி வழிநடத்திவந்தவராவார்; இவை தொடர்பான செலவினங்கட்கு அன்பர்கள் விரும்பி உதவிய நிதியுடன் தாமே பெரும்பங்கினை ஏற்று நடத்தியவராவார். விதிகளுக்கமைவாக என்றும் தளர்ச்சியில்லாமல் செயலுறத்தக்க ஒரு பரிபாலனசபையை உருவாக்க மூலகர்த்தாவாக உழைத்த பெரியாராவர்.

03-05-68 தொடக்கம் பொருளாளர் பதவி வகித்து வந்த அதிபர் திரு. பொ. கந்தையா அவர்கள் 26–3–84இல் சிவபதம் சேர்ந்தார். ஓய்வு பெற்ற பின்னர் கண்ணகை அம்மன் தொண்டில் முழுநேர ஊழியராகத் தொண்டாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

1974 நீதிமன்ற விசாரணைக்குட்பட்ட காலம்முதல் இலவச சட்டத்தரணியாகச் சேவைசெய்து உபதலைவராக இருந்து வழிநடத்தி 05–07–83இல் விண்ணுலகு சென்ற பெரியார் திரு. வ, முத்துக்குமாரசாமி அவர்களின் சேவை மிகவும் நினைவு கூரத்தக்கது.

நிர்வாக அங்கத்தவராக இருந்து எதற்கும் தயங்காது ஆலோசனைகள் கூறியும், இயலுமான அளவு நிதியுதவி பெற்று உதவி வந்தவருமான திரு. வ. சோமசுந்தரம் அவர்களும் 15–5–84இல் அரனடி அடைந்து விட்டார். அவரின் சேவை அளப்பரியது.

யாழ் நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைவாக எமது பரிபாலன சபையின் விதிகள் ஆக்கப்பெற்று 30-5-82இல் பொதுக்கூட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டு வேண்டிய திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்விதிகளுக்கு அமைவாகவே இப்பரிபாலன சபை தொழிற்பட்டு வருகிறது.

திட்டமிட்டவாறு உட்பிராகார, தெற்கு மண்டப கூரை வேலைகளை முடித்துள்ளோம். தளவேலைக்கு வேண்டிய ஒழுங்குகள் செய்து வருகின்றோம். எமது ஊர் விவசாயிகளின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமையால் கோயில் வருவாய் குறைந்துள்ளபோதிலும் மீதி வேலைகள் பூர்த்தியாக கண்ணகை அம்மன் அருளுடன் ஆவன செய்கின்றோம்.

**நன்றி**

அம்மன் அடியார்கள் இயன்றளவு நிதியும், பொருளும் உதவியுள்ளனர். பனை மரங்களை இலவசமாக உதவியவர்கட்கும், குறைந்த கூலியுடன் தெற்கு மண்டப கோப்புச வேலைகளைச் செய்து உதவிய ஆசாரிமார்கட்கும், கோப்புச வேலைக் கூலியின் ஒருபகுதியைத் திருப்பணிக்கு உதவியவர்கட்கும், ஓடுகள் உதவிய அன்பர்கட்கும், நிரந்தர மாகவே கோயில் உபயோகத்துக்கென பாதுகாப்பு ஒழுங்குடன் தைப்பொங்கல் நாளன்று ஓர் ஒலிபெருக்கியை உதவிய அன்பருக்கும், வெள்ளை அடிப்புச் செலவினைப் பொறுத்துக் கொண்ட அன்பருக்கும், மகாமண்டப முகப்புவாயில் மேற்பகுதியில் செய்யப்பெற்றுள்ள சிற்பவேலைகளுக்கும், அவைகளுக்கு வர்ணம் தீட்டலுக்குமான செலவினை ஏற்றுக்கொண்ட சகோதரர்கள் இருவருக்கும், வரவு செலவுகளைச் சரிபார்த்து உதவிய எண் பார்வையாளர் கட்கும், ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள பணிகளைச் சிரமதானமூலம் செய்து உதவிய இளைஞர்கட்கும்,

பிள்ளையார், வைரவர், சுப்பிரமணியர் ஆகிய மூலவிக்கிரகங்கள், அவற்றின் பீடங் களுக்குரிய அலங்காரத் தட்டுகள், வள்ளி தெய்வானை விக்கிரகங்கள், கண்ணகை அம்மன் எழுந்தருளி ஆகியவற்றுக்கான முழு நிதியையும் தாமாகவே முன்வந்து உதவிய அன்பர்கட்கும்,

வெளிநாடுகளில் தொழில் புரிந்துகொண்டு நிதி திரட்டி அனுப்பிய அம்மன் அடியார் கள் செல்வன் வ. பாலசுப்பிரமணியம், சிங்கப்பூர், செல்வன் ந. தவக்குமார், கனடா, செல்வன் ஆ. ஜெயக்குமார், மேற்கு ஜெர்மனி, மு. சத்தியராஜன், பொ. தர்மலிங்கம், எஸ். றமண காந்தன் குழுவினர் ஆகியோர்க்கும் நிர்வாக சபையினதும், அடியார்களினதும் நன்றி என்றும் உரியது. இவர்கட்கெல்லாம் அம்மன் அருள்பாலிக்க வேண்டுகின்றோம்.

மேலும் கோயிற் பூசைகளைச் செவ்வனே செய்துவரும் பூசகர் சிவஸ்ரீ ப. சண்முக ராசாக் குருக்கள் அவர்களுக்கும் கும்பாபிஷேகத்தை மிகவும் நல்லமுறையிற் செய்து உதவிய பிரதம பிரதிஷ்டா குரு சிவஸ்ரீ ப. முத்துக்குமாரசாமிக் குருக்கள் அவர்களுக்கும் ஏனைய சிவாசாரியர்கட்கும் எமது நன்றி உரியதாகும்.

குறித்த மஹா கும்பாபிஷேகம் வேதாகம விதிப்படி சிறப்புடன் நடைபெற வழி காட்டிகளாயமைந்தவர்களான சிவஸ்ரீ மு. பரமசாமிக் குருக்கள் அவர்களுக்கும், சித்தாந்த பானு சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள் அவர்களுக்கும் எமது விசேட நன்றியைச் செலுத்துகின்றோம்.

கோயிற் கருமங்களுக்கு முழுநேர உதவியாளர்களாகச் சேவை செய்யும் திருவாளர்கள் தம்பு சுப்பிரமணியம், அம்பலம் சங்கரப்பிள்ளை, தம்பு கந்தையா, மார்க்கண்டு நடராசா ஆகிய பரிபாலனசபை அங்கத்தவர்கட்கும், கும்பாபிஷேக ஒழுங்குகள் சுமுக மாக நடைபெற உதவிய உப குழுவினர்க்கும், மற்றும் உதவியாக உள்ள அன்பர்கட்கும், பலவகையாலும் உதவிகள் நல்கும் எல்லா அன்பர்கட்கும் நன்றி கூறி, அவர்கள் தொடர்ந் தும் சேவை செய்ய அம்மன் அருளை வேண்டுகின்றோம். கண்ணகை அம்மன் கோயிற் பரிபாலனம் சிறப்பொடு வளரவும் அடியார்களின் ஒத்துழைப்புப் பெருகவும் அம்மனின் திருவருள் கிட்டும் என்ற நம்பிக்கையுடையோம்.

வணக்கம்

**பொ. கந்தையா**
செயலாளர்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | வெளியீட்டுரை | iii |
| | மனப்பூர்வமான நன்றி | v |
| | வாழ்த்துரைகள் | vi |
| | பரிபாலன சபை அறிக்கை | x |
| 1. | கண்ணகை போற்றி அகவல் | 1 |
| 2. | வடகோவைக் கண்ணகையம்மன் ஆலயமும் கண்ணகை வழிபாடு இலங்கையில் பரம்பிய வரலாறும் | 2 |
| 3. | கும்பாபிஷேகம் | 6 |
| 4. | எக்காலத்தும் கண்ணகையம்மன் கோயிலாகவே இருக்க | 9 |
| 5. | நல்வரம் நல்குவாயே | 12 |
| 6. | சிலம்புச் செல்வி கண்ணகையம்மன் | 14 |
| 7. | கற்புக்கடம்பூண்ட பொற்புடைத் தெய்வம் | 19 |
| 8. | கண்ணகித் தெய்வம் | 21 |
| 9. | கோப்பாய் | 23 |
| 10. | கண்ணகி தேவியின் முதற் சமையல் | 26 |
| 11. | சிவசக்தி வழிபாடு | 28 |
| 12. | புகழ்பெற்ற தலம் இது | 32 |
| 13. | கிழக்கிலங்கையில் கண்ணகை வழிபாடு | 33 |
| 14. | வாய்மொழிமூலம் பெற்ற பழைய பாடலொன்று | 34 |
| 15. | சிலப்பதிகாரம் துன்பமாலை 47-53 | 35 |
| 16. | கண்ணகையம்மன் தனிப்பாடல்கள் | 37 |
| 17. | கோப்பாய் பலாலீ கண்ணகையம்மன் கோயில் தூபிகளில் காணப்படும் சிற்பங்கள் | 39 |
| 18. | கண்ணகை பேரிலூஞ்சல் | 41 |
| | கடவுள் | 45 |

உ

# கண்ணகை போற்றி அகவல்

கற்பின் கொழுந்தே கண்ணகைத் தாயே
பொற்பின் செல்வீ நின்பாதம் போற்றி
கண்ணே கற்பாம் கண்ணகை போற்றி
ஆண்பெண் யார்க்கும் அருளுவை போற்றி
பண்புடைத் தமிழர் பரம்பரை காத்த
எண்பிறங் கழகி எழிலுடைத் தாயே
மண்மிசைத் தோன்றி மாந்தர்க் கருளினை
மாநாய்க்கன் மகளே நின்பாதம் போற்றி
கோவலனர் தேவியரே நின்பாதம் போற்றி
மன்னவன் முன்னின்று மாணிக்கப் பரல்காட்டி
தென்னவன் பிழையினைத் தீதெனக் காட்டிய
அன்னைநின் பாத அணிமலர் போற்றி
அங்கி வானவன் அளித்திடு வரமதால்
தங்குமா மதுரை தகித்தாய் போற்றி
மதுராபுரித் தெய்வம் மலர்ந்திடு வாக்கொடு
சேர நாட்டுச் செங்கோட்டு மலையேறி
பதினன் காம்நாள் பதியுடன் புக்க
பத்தினித் தெய்வமே நின்பாதம் போற்றி
சித்திகள் பலதரும் தெய்வமே போற்றி
முத்தியைத் தந்திடும் முதலே போற்றி
குன்றச் செல்வி நின்பாதம் போற்றி
குடமலை யாட்டி நின்பாதம் போற்றி
வைகாசி விசாகத்தாளே நின்பாதம் போற்றி
பங்குனித் திங்களாளே நின்பாதம் போற்றி
எம்மைஎன்றும் காக்கும் தாயே போற்றி
கண்மலர்த் தாயே கண்ணகை போற்றி
பெண்களுள் தெய்வமே பேணினம் போற்றி
சேரன்செங் குட்டுவன் செய்குட முழுக்கில்
கலந்துறு கஜபனுக்குக் கொடுத்திடு வரமதால்
கோவைப் பதியினில் கோயில்கொண்டாய் போற்றி
ஊர்க்குறு வரட்சி உலர்வெப்பு நோயிவற்றல்
உனைவணங்கும் அடியரைக் காப்பாய் போற்றி
காலவெள் ளத்தில் கதியின்றிச் செல்லாமல்
காட்டு மலர்போல் கருகிவீழ்ந்து படாமல்
பூவும் பொட்டும் அணிந்துபுதுப் பொலிவுடனே
கட்டுண்டு வாழக் கருதினேம் தாயே
கருதித் தொழுமெமைக் காப்பாய் போற்றி
வாழா தோரையும் வாழ்விப்பாய் போற்றி
கண்கண்ட தெய்வமே கண்ணகைத்தாயே போற்றி
கூழா மரத்தாளே போற்றி போற்றி.

# வடகோவைக் கண்ணகையம்மன் ஆலயமும் கண்ணகை வழிபாடு இலங்கையில் பரம்பிய வரலாறும்

கோப்பாய் வடக்கில் குளமும் சோலையும் சூழ்ந்த பலானை யென்னும் காணியில் எழுந்தருளியிருக்கும் கண்ணகையம்மன் ஆலயம் மிகப் புரதானமானதும் புதுமையானது மாகும். மருது, கூழா, ஆல், அரசு, வேம்பு முதலியன வானளாவி வளர்ந்த மரச் சோலைகளின் மத்தியில் மருதநிலத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் உட்பிரகாரத்தில் முப்பதடிவரை சுற்றுள்ள மிகப் பெரிய உயர்ந்த விசாலமான கூழா மரமொன்றுண்டு. இம்மரத்திலுள்ள மரப் பொந்துகளில் வெண்மைநிறமுடைய நாக பாம்புகளிருக்கின்றன. அவை சில காலங்களில் வெளிப்படும். யாரையும் தீண்டியதில்லை. பூசைக் காலங்களில் இக்கூழாமரத்தடியில் விசேட பிரார்த்தனைகள் நடந்துவருகின்றன. ஆதியில் இம்மரத்தடியிலேயே கண்ணகை விக்கிரகம் வைக்கப்பட்டு வழிபாடு செய்யப் பட்டிருக்கவேண்டும். மூலஸ்தான கண்ணகை விக்கிரகம் கருங்கல்லினாலானது. பங்குனி மாதம் திங்கட்கிழமைகளில் பெருந்தொகையான மக்கள் பொங்கல் வழிபாடு செய்து தேவியை வழிபட்டு இஷ்டசித்திகளைப் பெறுவர். ஊர் மக்கள் வெப்பு நோய்களால் மிக நலியப்பெற்றபோதும், மழைவளங் குன்றியபோதும் கண்ணகையம்மனை ஊர்வலங் கொண்டு பெருவிழா வெடுத்து மறுநாள் விசேட அபிஷேக ஆராதனைகள் செய்து குளிர்த்தி செய்து, தேவியை வழிபட்டு நன்மைகளடைவர்.

பண்டுதொட்டு, பங்குனித் திங்கட்கிழமைகள் தோறும் இவ்வூரிலுள்ள சைவ வள்ளுவர் மக்களால் படிக்கப்பட்டு வந்த கோவலனார் கதை சென்ற சில வருடங்களாகக் கைவிடப் பட்ட நிலையுண்டு. அவர்கள் படித்த ஏட்டினைப் பெற்று பலர்க்கும் பயன்தரத்தக்கதாக அச்சிட்டு வெளிப்படுத்த எடுத்த முயற்சி கைகூடவில்லை. இது விஷயமாய்த் தொடர்ந் தும் முயற்சிக்கப் பெறுகிறது.

இவ்வாலயத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் கண்ணகிதேவி இவ்வூர் மக்களின் உயர் நீதிபதி. யான், எனது என்று ஆலய நடவடிக்கைகளில் அகந்தை, மமதை கொண்டவர்கள், ஆலயப் பொருட்களைக் கையாட முயன்றவர்கள், ஆலயப் பாம்புகளைத் துன்புறுத்த முயன்றோர், ஆலயமுன்றலில் பொய்வாக்குப் பண்ணியோர் தேவியின் கோபத்துக்குள்ளாகி உடனுக்குடன் கஷ்டமடைந்த சம்பவங்கள் நிறையவுண்டு. ஊர் மக்களெல்லோரும் தேவியில் மிகுந்த பயபக்தியுடையோராயுளர். கமக்காரர்முதல் யாவ ரும் தமது உழைப்பின் முதல் வருமானத்தைத் தேவிக்குக் காணிக்கையாகக் கொடுக்கும் வழக்கம் இன்றும் நிலவுகிறது. இப்புராதன ஆலயமமைக்கப்பட்ட வரலாற்றினை யாராய் தல் நல்லது.

## 1ஆம் கஜபாகு

சரித்திரகாலத்தில் இலங்கைமீது எட்டு முறை தமிழர் படையெழுச்சிகள் நடந்துள்ளன. அனுராதபுரியைத் தலைநகராகக்கொண்டு வங்கநாசிகன் என்னும் சிங்கள மன்னன் ஆண்ட போது கி. பி. 113ஆம் ஆண்டில் தமிழரின் மூன்றுவது படையெழுச்சி நடைபெற்றது.

படையெடுத்து வந்த சோழ மன்னன் இந்நாட்டை வென்று பன்னீராயிரம் சிங்களரைச் சிறைப்படுத்திச் சென்றதாகவும், பின்னுல் கி. பி. 113 — 135 வரையாண்ட வங்கநாசிக மன்னன் மகன் முதலாம் கஜபாகு மன்னன், இங்கிருந்து பெரும் படையுடன் சோழநாடு சென்று பெரும் போர்செய்து வெற்றிகொண்டதன்றிச் சிறைப்பட்ட பன்னீராயிரம் சிங்களரையும் சிறைமீட்டு பதில் பன்னீராயிரம் சோழியரைச் சிறைப்படுத்தி வந்தானென வும், இச்சோழியர் அழுத்தூர்க் கோறளை, அரிஸ்பற்று, தும்பளை என்னும் இடங்களில் குடியேற்றப்பட்டதாகவும் இலங்கைச் சரித்திரம் கூறுகின்றது.

## கண்ணகி வழிபாடு

கோவலன் கொலையுண்டது கேட்ட கண்ணகி மதுரையையடைந்து தன் கணவன் கள்வனல்லன்; என்பதனைப் பாண்டிய அரசன்முன் நிலைநாட்டி மதுரையை எரித்து வையையாற்றுக் கரைவழியே சென்று பதினுன்காம் நாள் சேர நாட்டின் மலைப்பகுதியி லுள்ள நெடுவேள் குன்றினையடைந்ததாகவும், அங்கு வேங்கை மரத்தின் நிழலில் நின்ற கண்ணகிக்கு, வானவர் வந்து கோவலனைக் காண்பித்து இருவரையும் வானுலகத்திற்கு அழைத்துச் சென்றதாகவும், இப்புதுமையைத் தங்கண்ணுற் கண்ட குன்றக் குரவர் அச் செய்தியை மலைவளங் காணவேண்டிவந்த சேரன் செங்குட்டுவ மன்னற்குக் கூறியதாக வும் சிலப்பதிகாரப் பதிக வரலாற்றிற் கூறப்பட்டுள்ளது.

பின்னர் "செங்குட்டுவன் பத்தினிக்குக் கோட்டம் இயற்றி விழாக் கொண்டாடிய காலத்து இலங்கையரசனுகிய கஜபாகு என்பவன் அக்கால் சோழநாட்டில் இருந்தமை யால் அவனுக்கும் ஓலை போக்கியபோது குறித்த விழாவுக்கு அக் கஜபாகுவும் சமுகமளித் தான்" எனவும் அப்பொழுது,

"வலமுற மும்முறை வந்தனன் வணங்கி
உலக மன்னன் நின்றேன் முன்னர்
அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்
பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்
குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்
கடல்சூ ழிலங்கைக் கஜபாகு வேந்தனும்
எந்நாட் டாங்கண் இமய வரம்பனிந்
நன்னுட் செய்த நாளணி வேள்வியில்
வந்தீ கென்றே வணங்கினர் வேண்டத்
தந்தேன் வரமென் றெழுந்த தொருகுரல்"

எனவும் சிலப்பதிகாரம் வரந்தரு காதையிற் கூறப்பட்டுள்ளது.

"அதுகேட்ட கடல்சூழிலங்கைக் கஜபாகு வென்பவன் தன்னுட்டில் நங்கைக்கு நாடோறும் பலிகொள்ளும் பலிபீடத்தை முற்படச்செய்து, பின்பு கோட்டமும் அமைத்து, துன்பங்களைக் கெடுத்து நமக்கு வேண்டும் வரங்களை இவள் தருமென்று துணிந்து ஆடித் திங்களிலே தன்னகரின் கண்ணே விழாச் செய்தலை ஆண்டு தோறும் நிகழ்த்தாநிற்க மழை குறைவின்றி நிலைபெறுதலானே அவனது நாடு பல வளங்களும் நிறைந்து பொய் யாத விளைவினையுடைய நாடாயிற்று" என்று சிலப்பதிகாரம் உரைபெறு கட்டுரையிற் கூறப்பட்டுள்ளது.

## கண்ணகி வழிபாடு இலங்கைக்கு வந்த வரலாறு

கஜபாகு சோழநாட்டினின்றும் கண்ணகி சிலை பலவுங் கொண்டு மாதகலுக்கணித்தா யுள்ள சம்புகோளா அல்லது சம்புத்துறை யெனும் திருவடிநிலையிலிறங்கி அனுரத

புரிக்கு வழிகொண்டு செல்லும்போது அவனும் அவன் சேனைகளும் தங்கிய மரமடர் சோலைகளில் பொருத்தமான இடங்களில் தேவிசிலை வைத்துக் கோயிலமைத்து, தொடர்ந்து பொங்கல்விழா வழிபாடுகளியற்ற பூசாரிகளையும் நியமித்துச் சென்றான்; எனச் செங்குட்டுவன் வரலாறு கூறுகின்றது.

அங்ஙனம் அமைத்த முதலாங்கோயில் திருவடிநிலைக்கண்மையில் பருளாய் விநாயகர் ஆலயத்துக்குக் கிழக்கே ஆறுமுக வித்தியாசாலைக்கு மேற்குப் புறமாய் அமைந்து இன்றும் உள்ளது. தொடர்ந்து அவன் வழிகொண்டு செல்லும்போது கோப்பாயிலுள்ள இம் மருத நிலத்தில் தங்கியபோதமைத்த கோயிலே பலானை கண்ணகையம்மன் ஆலயமாகும். இவ்வாலயத்தின் முன்புறமாய் பூசாரிக்கு நிவந்தமாகக் கொடுக்கப்பட்ட காணி இன்றும் பண்டாரப் பாத்தி என அழைக்கப்படுகின்றது. அப்பாலுள்ள மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயமும் இவ்வாறமைக்கப்பட்டதே. அவன் அமைத்த பத்தாவது ஆலயமே பத்துப்பளை—வற்றாப்பளையாகும். கடைசியாக அவன் சிலைநாட்டிய இடம் அனுரதபுரியில் இசிறுமுனி விகாரைக்கருகில் உள்ள தடாகத்தின் முன்னால் அமைக்கப்பட்டு இன்றுமுள்ளது. அக்கோயிலின் முன் வாசலில் இருபுறமும் உள்ள கற்றூண்களில் கஜலட்சுமி செதுக்கப்பட்டு அழகாயமைந்துள்ளதனை இன்றும் காணலாம்.

இதன் பின்னர் தொடர்ந்து கண்ணகி வழிபாடு படிப்படியாய் இலங்கையின் வடக்கிலும், கிழக்கிலும், கண்டிப்பிரதேசங்களிலும் பரம்பியுள்ளது. கண்ணகியாலயங்களில் பொங்கல் வழிபாடே விசேடமாக இன்றும் நடைபெற்று வருகிறது. சிங்கள மக்கள் மத்தியில் பல விகாரைகள் சமாதிகட்கு அருகில் பத்தினித் தெய்யோ வழிபாட்டிற்குரிய ஸ்தலங்கள் அமைக்கப்பட்டிருப்பதனை பலவிடங்களிலும் காணக்கூடியதாயுள்ளது. கஜபாகு வெற்றிகொண்டு மீண்டதன் ஞாபகமாக ஆடல்பாடல்களோடு நடைபெறும் சுற்றுலாத் திருவிழாவான பெரஹரா அனுரதபுரியில் வருடாவருடம் கொண்டாடப்பட்டு வரலாயிற்று. பல்லாயிரக்கணக்கான மக்களும் நன்கு அலங்கரிக்கப்பட்ட நூற்றுக் கணக்கான யானைகளும் பங்குகொள்ளும் இந்த ஊர்வல விழாவானது கண்ணுக்கும் மனதுக்கும் உவகை தரும் விழாவாக வருடந்தோறும் கண்டியில் எசலா பெரஹரா எனும் பெயரோடு இன்று நடைபெறுகிறது.

கோப்பாய்—பலானை கண்ணகையம்மன் உற்சவம் வருடா வருடம் ஆரம்பமாகி தேரோட்டத்தின் மறுநாள் — ஆடிப்பூரத்தில் தீர்த்தோற்சவத்துடன் முடிவடைகின்றது,

## கண்ணகி குளுத்திப்பாடல்

எல்லை படும்பழிக்கு எண்ணவொண்ணப் பழிவாங்கிச்
சொல்லரிய மாமதுரை சுட்டாய் குளுந்தருள்வாய். *(72ஆம் பாடல்)*

மதுரா புரித்தெய்வம் வாய்மாற்றந் தான்கேட்டுச்
சதுராக வேகம் தணிந்தாய் குளுந்தருள்வாய். *(73ஆம் பாடல்)*

## கண்ணகி வழக்குரை காவியம்

கண்டனளே நெஞ்சகத்தே கடுங்கோபங் கனலெழவே
தொண்டையது பதைபதைக்கத் துடியிடையா ளிதுரைப்பாள்

கொண்டலெனக் கொடைபடைத்த கோவலரைக் கள்வனென்று
விண்டுரையால் வெட்டுவித்த மீனவன்றன் வாசலிதோ. *(33ஆம் பாடல்)*

மீனநெடுங் கொடிவிளங்க வென்றிமன்னர் புடைசூழச்
சோனைமத கரிபரியும் துங்கமணித் தேர்படையும்
தேனமருந் தொடைபுனைந்து செங்கனக முடியிலங்க
மானபங்கம் பாராத வழுதிதிரு வாசலிதோ. *(34ஆம் பாடல்)*

## சிலப்பதிகாரம்

தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்!
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்;
தெய்வந் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்;
பொய்யுரை அஞ்சுமின்; புறஞ்சொற் போற்றுமின்;
ஊனூண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்;
தானஞ் செய்மின்; தவம்பல தாங்குமின்;
செய்ந்நன்றி கொல்லன்மின்; தீநட் பிகழ்மின்;
பொய்க்கரி போகன்மின்; பொருண்மொழி நீங்கன்மின்;
அறவோ ரவைக்களம் அகலா தணுகுமின்;
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்;
பிறர்மனை யஞ்சுமின்; பிழையுயிர் ஓம்புமின்;
அறமனை காமின்; அல்லவை கடிமின்;
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்.

*(வரந்தருகாதை 185—198)*

*கண்ணகியின் தன்மைகளை விளக்கிய தகுதிமிக்க நல்லுரையை விளக்கக் கேட்ட அழகுதக்க நன்மையுடையீர்! பிறருக்குக் கவலையும் துன்பமும் விளைத்தலை முறைமையில் விட்டொழிமின்; கடவுள் உண்டென்று உணர்மின்; அங்ஙனம் கடவுளை உணர்ந்தோரை விரும்புமின்; பொய்கூறுதற்கு அஞ்சுமின்; புறங்கூறுதலை விட்டொழிமின்; உயிர்களைக் கொலைசெய்தலை ஒழிமின்; தானத்தினை மேற்கொண்டு செய்மின்; தவம் பலவற்றையும் மேற்கொண்மின்; பிறர்செய்த உதவிகளை மறவன்மின்; தீயோருடைய தொடர்பினை எள்ளி ஒதுக்குமின்; பொய்ச்சாட்சி சொல்லாதீர்; உண்மை பேசுங்கள்; அறநெறிச் செல்லும் சான்றோர் அவையினைத் தவறாது சேருங்கள்; மறநெறிச் செல்லும் தீயோர் அவைக்களத்தினின்றும் தப்பிச் செல்லுங்கள்; பிறர் மனைவியை விரும்புதலை அஞ்சுமின்; துன்பமுற்ற உயிர்களைக் காப்பாற்றுங்கள்; இல்லறத்தைப் போற்றுங்கள்; பாவச் செயல்களை நீக்குமின்; கள்ளும் களவும் காமமும் பொய்யும் பயனில சொல்லும் கூட்டமும் என்னும் இவற்றை ஒழிக்கும் உபாயத்தால் ஒழித்திடுமின்.*

*இவ்வாறு நீதியைக் கூறுகின்றது சிலப்பதிகாரம். சிலப்பதிகாரக் காவியத்தின் தலைவியாகிய தெய்வக் கண்ணகிக்குக் கோயில் எடுத்த கோவையம்பதி மக்கள் பாக்கியசாலிகளே.*

*(ஷை. கோயில் அறிக்கையில் இருந்து எடுக்கப்பட்டது)*

# கும்பாபிஷேகம்

கும்பாபிஷேகம் என்பதன் பொருள், ஆசாரியர் அக்கினியிலும் கும்பத்திலும் ஆவாஹனஞ் செய்து வழிபட்ட தெய்வத்தைக் கோயிலினுள்ளிருக்கும் பிம்பத்தில் ஆவாஹனஞ் செய்து கும்பநீரால் அபிஷேகம் செய்தல் என்ற அளவில் அமையாமல், சிவாசாரியர் பலர் பல நாட்கள் தொடர்ந்து செய்கின்ற அங்கக் கிரிகைகள் பலவற்றை உள்ளடக்கி விரிந்த பொருள் கொண்ட சிறப்புப் பெயரால் வழங்கி வருகின்றது. பிரதிஷ்டை என்ற பெயரும் இத்தகையதே.

கும்பாபிஷேகம் பல ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழுவதாகையால், இதனைத் தரிசித்தல் கிடைத்தற்கரிய பெரும் புண்ணியப் பேருகும். நன்முகூர்த்தத்தில் அபிஷேகம் செய்கின்ற அருங்காட்சியை ஆயிரக்கணக்கில் அடியவர் கூடிநின்று தரிசிப்பது வழக்கமாயினும், கர்மாரம்பம் என்னுந் தொடக்கக் கிரியையிலிருந்து கும்பாபிஷேகத்தின் பின் நிகழும் மகாபிஷேகம் வரையுள்ள பல வேறு வகையான ஐம்பதுக்கு மேற்பட்ட அங்கக் கிரியைகளைக் கண்டனுபவிக்கும் வாய்ப்பை அவற்றின் அருமை தெரியாமையால் பலர் இழந்து விடுகின்றனர். கும்பாபிஷேகம் நிகழுகின்ற ஆலயத்திற்கு அண்மையில் இருப்பவராவது தங்கள் லௌகிக காரியங்களைச் சில நாட்களுக்கு ஒதுக்கிவிட்டுக் காலையிலும் மாலையிலும் ஆலயத்தில் அமைதியாயிருந்து அங்கு நிகழும் கிரியைகளை அவதானிப்பதோடு அவற்றின் பெயரையும் பொருளையும் அறிந்துகொள்ள முயலவேண்டும். யாக தரிசனம் செய்தலும், ஓமப்புகையைச் சுவாசித்தலும், அங்கே எழுகின்ற மந்திர ஒலியைக் கேட்டலும் பெரும் புண்ணியமாவதோடு உடல் நலத்தையும் ஒருங்கே தருவனவாகும்.

ஆன்மாக்கள் இறைவனை எளிதிற் சென்றடைவதற்காகச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு வழிகளைச் சிவாகமங்கள் வகுத்துரைக்கின்றன. இவை முறையே அரும்பு, மலர், காய், கனி என்பவற்றைப் போன்றவை என்று தாயுமான சுவாமிகள் ஒப்புமை காட்டுகின்ருர். சமயக் கிரியைகள் சமய தத்துவங்களை உணர்த்துவனவாயும் சாதாரண மக்களைப் பக்தியின் வசமாக்குவனவாயும் இருப்பதனல் கிரியா மார்க்கத்தில் மக்கள் அதிக ஈடுபாடு கொள்ளுகிருர்கள்.

கோயிற் கிரியைகள் நித்தியம், நைமித்திகம், காமியம் என மூவகையானவை. நைமித்திகக் கிரியைகளுள் பிரதிஷ்டை என வழங்கும் கும்பாபிஷேகம் மிகச் சிறந்ததென்றும், அது அநாவர்த்தனம், ஆவர்த்தனம், புனராவர்த்தனம், அந்தரிதம் என நால்வகைப்படுமென்றும் சிவாகமம் வகுத்திருக்கின்றது. ஆலயமில்லாத இடத்தில் புதிதாக ஆலயம் அமைப்பது அநாவர்த்தனப் பிரதிஷ்டை என்றும், முன்பிருந்த ஆலயம் முற்றுயழிந்துவிட அங்கு ஓர் ஆலயம் அமைப்பது ஆவர்த்தனப் பிரதிஷ்டை என்றும், பூசை வழிபாடு நிகழ்ந்துவரும் ஆலயத்தில் திருத்த வேலைகள் செய்வதற்காகப் பாலஸ்தானம் செய்து செய்யும் பிரதிஷ்டை புனராவர்த்தன பிரதிஷ்டை என்றும், ஆலயத்துள் மரணம் நிகழுதல் கள்வர் புகுதல் முதலிய குற்றச் செயல் காரணமாக உடனே செய்யப்படும் பிரதிஷ்டை அந்தரிதப் பிரதிஷ்டையென்றும் விளக்கம் கூறப்படும். இவற்றின் கிரியைகளிலும் வேறுபாடுகளுண்டு.

திருக்கோயிலில் மூலஸ்தானம் விமானம் முதலியவற்றில் திருத்தஞ் செய்யவேண்டியிருந்தால், விக்கிரகத்தை வேறிடத்தில் வைத்து வழிபடுவதற்காக ''பாலாலயம்'' எனப்படும் சிறு மண்டபம் அமைத்து அங்கு மூர்த்தியைத்தாபித்துவழிபாடுநடைபெறும். இவ்வாறு பாலஆலயத்தில் (இளங்கோயிலில், சிறுகோயிலில்) மூர்த்தியை ஸ்தாபனம் செய்தல் பாலஸ்தாபனம் எனப்படும். பாலஸ்தாபனம் செய்யும் சிவாசாரியர் அக்கிரியையின்

போது மூர்த்தியை நோக்கி ''பெருமானே, மூன்றுண்டு முதல் பன்னீராண்டு வரையுள்ள காலத்துள் ஜீர்ணோத்தாரணப் பணிகளை நிறைவேற்றி மீண்டும் உனதிடத்தில் உன்னைத் தாபிப்பேன். அதுவரையில் இங்கிருந்து அருள்பாலிப்பாயாக'' என்ற பொருளமையப் பிரார்த்திப்பது வழக்கமாகும். இப் பிரார்த்தனையில் ஆசாரியர் அளிக்கும் வாக்குறுதியைப் பாதுகாக்கவும், மூர்த்தியில் தெய்வீக சக்தியை அதிகரிக்கச் செய்து, அடியார்கள் இறையருள் பெற்றுய்வதற்காகவும் பன்னிரண்டு ஆண்டு என்ற கால எல்லையுள் கும்பாபிஷேகம் செய்யவேண்டுமென்று விதி அமைக்கப்பட்டிருக்கின்றது. இக்கால எல்லைக்குள் ஏதாவது காரணத்தால் பிரதிஷ்டை நிகழாமல் காலங் கடந்துவிட்டால், அந்தப் பாலாலயத்தையே மூலாலயமாகக் கொள்ளவேண்டுமென்ற விதிமுறையும் முற்காலத்திற் பேணப்பட்டு வந்திருக்கிறது. தமிழகத்தில் தேவாரப் பாடல் பெற்ற சில சிவத்தலங்கள் இளங்கோயில் என்ற பெயரோடு விளங்குவது இவ்வுண்மையை உணர்த்துகிறது. பிற்காலத்தில் இக்கட்டுப்பாடு முன்போல் கடைப்பிடிக்கப்படாமல் விடப்பட்டிருக்கிறது.

எமது உடலில் வந்த நோயை நீக்குவதற்காக நாம் மருந்துண்கிறோம். மருந்து அதிற் சேர்ந்துள்ள மூலிகைகள், உலோக வகைகள், உப்புவகைகள், பாஷாணங்கள் என்பவற்றின் ஆற்றலால் உடல் நோயை நீக்கி வலிவூட்ட வல்லதாகிறது. இவ்வாறே ஆலயத்தில் தாபிக்கப்படும் மூர்த்தியானது மூர்த்தி தலம் தீர்த்தம் என்ற மூன்றின் மகிமையினலும், பிரதிஷ்டை செய்த சிவாசாரியரின் சிறப்பு, அவர் பிரயோகித்த மந்திரங்களின் வலிமை, அவர் செய்த கிரியைகளின் செப்பம், தரிசிக்கின்ற அடியாரின் மன நம்பிக்கை ஆகிய இவற்றினல் பேராற்றல் பெற்றுத் தன்னை வழிபடும் அடியார்களின் உடல்நோய் உளநோய்களை மாத்திரமன்றி உயிர் நோயான பாசத்தையும் வலிகெடுத்து அருள்புரிகிறது. சக்தி மிகுந்த மருந்தும் காலஞ் செல்லச்செல்ல நோய் நீக்குமாற்றலைச் சிறிது சிறிதாய் இழந்துவிடுதல் போலவே, தெய்வீக அருள் நிறைந்திருந்த தெய்வத் திருமேனியும், கும்பாபிஷேகம் நீண்டகாலம் நிகழவில்லையெனில், தனக்குரிய அருட்பெருக்குக் குறையப் பெறுதல் இயல்பேயாம். இக்குறைபாட்டை நீக்கித் தெய்வசாந்நித்தியத்தை— திருவருள் வெளிப்பாட்டை அதிகரிக்கச் செய்வதற்காகவே கும்பாபிஷேகம் என்னும் பெருஞ் சாந்திக் கிரியை உரிய காலத்தில் செய்யப்படுவது அவசியமாகிறது.

சில இடங்களில் ஆண்டு தோறும் ஆலயத் திருவிழாக்களில் பேர் புகழுக்காகப் பெருந்தொகைப் பணமும் மனித முயற்சியும் தேவையற்ற காரியங்களுக்காகவும் தவறுன காரியங்களுக்காகவும் வீணே செலவிடப்படுகிறது. இவற்றைக் குறைத்துக் கொண்டால் குறித்த காலத்துள் விதிமுறை தவருமற் கும்பாபிஷேகம் செய்வது இயலாத காரியமன்று.

திருக்கோயிலில் புனருத்தாரணப் பணிகள் நிறைவெய்தி விதிப்படி கும்பாபிஷேகம் நிகழ்ந்து, நித்திய நைமித்திகங்கள் தொடர்ந்து நடைபெறுமாளுல், இதன் பெறுபேருக சு அக்கோயிலமைந்துள்ள ஊரிலும் அயலூர்களிலும் சுபீட்சம் என்னும் செல்வச் செழிப்பும் நோய் நிவாரணமும் உண்டாகுமென்றும், அந்நாட்டு மன்னனுடைய ஆயுளும் ஆரோக்கியமும் வளருமென்றும் காரணுகமம் கூறுகிறது. மேலும் ''இப் பணியில் எவ்வெவர் ஈடுபடுகிருர்களோ அவர்களெல்லோரும் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபடுவார்கள். செல்வத்தை விரும்புவோர் செல்வராவர்; புத்திரனை விரும்புவோர் புத்திரனைப் பெறுவர்; ஞானத்தை விரும்புவோர் ஞானிகளாவர்; மோட்சத்தை விரும்புவோர் மோட்சம் பெறுவர். இம்மையிலே பல்வகைப் பேறுகள் பெற்று நல்வாழ்வு வாழ்ந்து, இறுதியில் சிவசாயுச்சியப் பெரும் பேறும் பெறுவார்கள்'' என்றும் மேற்கூறிய சிவகாமம் அறுதியிட்டுரைக்கின்றது. நாவலர் பெருமான், நூற் பிரமாணத்தோடு எடுத்துரைத்த அறிவுரையொன்று இங்கு நினைவுகூரத்தக்கது. அது பின்வருமாறு:

''திருக்கோயில் முதலியவை அழிந்தால், அவைகளை முன்போலச் செய்த

வர் பெறும் பயன், அவைகளை முன் செய்தவர் பெற்ற பயனிலும் ஆயிர மடங்கு அதிகமாகும். திருக்கோயில் முதலியவைகளிலே ஒருறுப்புக் கிலமாயின், அதனை முன்போலச் செய்தவர் பெறும் பயன், முன் செய்தவர் பெற்ற பயனிலும் நூறுமடங்கு அதிகமாகும்.

இதற்குப் பிரமாணம்;

'' மாதவர் மடங்க ளாதி
வரதன்மந் திரங்க ளாதி
நாதமாம் இலிங்க மாதி
நளினபுட் கரிணி யாதி
சேதமுற் றிடின்முன் போலச்
செய்கின்றோர்க் குறுபலந் தான்
ஓதுமுன் செய்தோர் தம்மில்
ஆயிரங் குணித மோங்கும்.

உரைத்திடு மடங்க ளாதி
உறுப்பினிற் சிதையின் நூலிற்
தெரித்திடு முறையே நன்றுத்
தெளிவுறச் செய்கின் றோர்க்கு
வரைத்திடின் முன்னஞ் செய்தோர்
மருவிடும் பலத்தின் மேலாய்
விரித்திடும் பலமும் நூறு
மடங்கென விளம்பும் மாதோ ''

—சிவபுண்ணியத் தெளிவு

தெய்வமும், தெய்வீக மந்திரங்களும், யந்திரங்களும், தந்திரமெனும் ஆகமங்களும், குருவருளும், பிறவும் உண்மையானவை யென்றும் பயனுள்ளவை யென்றும் நம்புகின்ற ஆஸ்திக புத்தியுள்ளவர்களுக்கே இவை பயனளிக்குமென்று கூறுகின்ற ஆன்றோர் அனுபவ வாக்கையும் நினைந்துய்வோமாக.

'' மந்திரமுந் தேவும் மருந்துங் குருவருளுந்
தந்திரமும் ஞானந் தருமுறையும்
—எந்திரமும்
மெய்யென்னில் மெய்யாய் விளங்குமே
மேதினியிற்
பொய்யென்னிற் பொய்யாகிப் போம்.''

**பண்டிதர் ச. பஞ்சாட்சரசர்மா**

✳

'' 800 அடி நீளமும் 400 அடி அகலமுமுள்ள பரந்த வெளியிலே அர்த்த மண்டபம், மகாமண்டபம், நர்த்தன மண்டபம், ஏழு வாயில்கள் எல்லாம் அமைத்து, மிக விசாலமான கருவறை ஒன்றையும் கட்டி, அதற்குமேல் 216 அடி உயரத்தில் 'தட்சிணமேரு' என்னும் விமானத்தை (பண்டிகையை) 13 மாடியுள்ளதாய்க் கட்டியெழுப்பி, அந்த விமானத்தின் மேல் 80 டன் நிறையுள்ள 25 அடிச் சதுரமான பிரமரந்திரக் கல்லை ஏற்றி வைத்து, அதன்மேலே பொன்போர்த்த தூபியையும் நிறுவிக் கோயில் கட்டி முடித்தான் சோழப் பேரரசன் ராஜராஜன். அக் கோயிலிலே 54 அடி சுற்றளவுடைய ஆவுடையாரில் 18 அடி உயரமுள்ள லிங்கத் திருவுருவைப் பிரதிஷ்டை செய்தான். பிருகதீஸ்வரர் (பெருவுடையார்) என்று பெயரிட்டு வணங்கினன்.


— தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

உ

# கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோயில்




பிள்ளையார் கோயில் ஸ்தூபியில்
“விநாயகர்”



சுப்பிரமணியர் கோயில் ஸ்தூபியில்
“பாலசுப்பிரமணியர்”



கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோயில் மஹாகும்பாபிஷேகக் கிரிகைகளில் ஒரு நிகழ்ச்சி “தீபஸ்தாபனம்”



மஹா கும்பாபிஷேகக் கிரியைகளில் அடியார்களும், பிரதிஷ்டா குருமார்களும்.

# எக்காலத்தும் கண்ணகையம்மன் கோயிலாகவே இருக்க

என் சிறுபராயத்தில் கோபால ஐயர் சுப்பையர் கோயிற் பூசகராயிருந்தார். கோயிற் பிராகாரங்கள் யாவும் செங்கற்களாலான கட்டிடங்களாயமைந்திருந்தன. தலவிருட்சமான கூழாமரத்தடியில் பூசகர், ஒரு சிறுகிண்ணத்தில் பாலும் பழமும் பாம்புக்கு வைப்பதும் கூழாமரத்தடியைச் சுற்றி மண்ணுலான சிவலிங்கங்கள் வரிசையாக அடுக்கப்பட்டிருப்பதும் என் ஞாபகத்திலுண்டு. கோயிற் பிராகாரத்துக்கருகே தென்கிழக்குப் பக்கமாக அமைந்திருந்த மடத்தின் நடுவேயுள்ள பீடத்தில் சுமார் மூன்றடிவரை உயரமுடைய வெள்ளிவேல் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததனையும் மடத்தின் கிழக்குத் தாழ்வாரத்தில் பழைய தேர் ஒன்றின் சில்லுகளும் கட்டுத் தேருக்கான மரங்களும் அடுக்கப்பட்டிருந்ததனையும் யான் பார்த்துள்ளேன். கோயில் மடைப்பள்ளியின் தெற்குப்புறமாக 40 அடி வரை ஆழமான செங்கற்களால் கட்டப்பட்ட மிக ஒடுக்கமான கிணறு ஒன்றிருந்ததும், சுமார் 65 வருடங்கட்குமுன்னர் குறித்த கிணறு புனரமைக்கப்பட்டு வைரக் கற்களால் கட்டப்பட்டதும், 1965 அளவில் அது மூடப்பட்டு மடைப்பள்ளியின் வடபுறமாய் உட்பிராகாரத்தில் கோயில் உட்பாவிப்பிற்காக கிணறு ஒன்று புதிதாகத் தோண்டப்பட்டிருப்பதும் தெரிந்ததே.

எமது கோயில் கீழ்க்கற்கண்டமில்லாத இடத்திலமைந்திருந்ததால் மண்டபங்களில் அடிக்கடி வெடிப்பேற்படுவதுண்டு. நமதூரைச் சேர்ந்த பொறியியலாளர்கள் நா. சிவபாதசுந்தரம் சி. கனகராசா என்போர்களது ஆலோசனைகளைப் பெற்றே தற்போதைய மண்டபங்களில் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அர்த்த மண்டபத்திற்காக ஆறு அடிக்கு மேலாக ஆழமாக அத்திவாரம் வெட்டப்பட்டபோது ஒன்றன் கீழ் ஒன்றாக மூன்று கட்டிடங்களின் தளவரிசைகள் காணப்பட்டபோது கோயிலின் புராதனத்தையிட்டு நேரில் அறிந்தோம்.

இக்கோயிலுக்கு இருபாலைச் சேனாதிராச முதலியாரின் உறவினர்களான பழையவீட்டார் மேற்பார்வையாளர்களாக 1926ஆம் ஆண்டளவில் இருந்தனர். மார்கழி, திருவெம்பாவை ஊஞ்சலின்போது பழைய வீட்டார் குடும்பமாக வருவதையும் அவர்களுள் (பழவீட்டுத்தம்பி) சேனாதிராயர் என்பவர் சேனாதிராயமுதலியாரால் யாக்கப்பட்ட திருவூஞ்சற்பாக்களை பக்திசிரத்தையாகப் பாடுவதையும் யான் பார்த்தும் கேட்டும் உள்ளேன்.

1926ஆம் ஆண்டு கோப்பாய் கிராமச் சங்கத் தேர்தல் காலம். மக்கள் கையுயர்த்தி அங்கத்தவரைத் தெரிவு செய்த காலம், இருபாலைப் பழையவீட்டைப் புக்ககமாகக் கொண்ட நியாயதுரந்தரர் இரத்தினசிங்கம் அவர்கள் கிராமச்சங்கத் தலைவராகப் போட்டியிட முன்வந்து கோப்பாய் வடக்கில் தெரிவான அங்கத்தவர்கள் உதவியை நாடினர். குறித்த அங்கத்தவரது கோரிக்கைப்படி 2321ஆம் இலக்க உறுதி முடித்துக் கோயில் ஊர்ப் பொதுவாக்கப்பட்டது. ஊர்மக்கள் திரண்ட பொதுக்கூட்டத்தில் 12-5-1926இல் கோப்பாய் கிராமச்சங்க எல்லைக்குள் பரவலாக 28 பேர் கொண்ட நிர்வாக சபையும் அதற்குள் ஓர் பஞ்சாயமும் தெரிவுசெய்யப்பெற்றுக் குறித்த கோயில் முகாமை நிர்வாக சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. கோப்பாய் தெற்கு முருகேசு பொன்னம்பலம், வைத்திலிங்கம் சுப்பிரமணியம், ஆறுமுகம் கதிரேசு, கோப்பாய் வடக்கு முருகேசு வயிரமுத்து, கணபதியார் கந்தையா என்போர் பஞ்சாயத்தாராவர்.

1926—31 முருகேசு பொன்னம்பலம் அவர்கள்,

31—42 முருகேசு வயிரமுத்து அவர்கள்,

42—67 கணபதியார் கந்தையா அவர்கள் என்போர் முறையே கோயில் முகாமையாளர்களாகக் கடமையாற்றினர். கணபதியார் கந்தையா அவர்கள் 1967இல் காலமானபோது குறித்த நிர்வாகசபையில் ஜீவந்தர்களாகவிருந்த திருவாளர்கள்

சண்முகம் சுப்பிரமணியம், கதிரேசு வைத்திலிங்கம், கார்த்திகேசு சதாசிவம், சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை என்போர் கூடி சமுகமளிக்க முடியாதிருந்த சின்னத் தம்பி முருகேசு அவர்கள் சம்மதமும்பெற்று 3-5-68இல் தற்காலிக முகாமையாளராக தம்பு சுப்பிரமணியம் அவர்களையும் உதவி யாளர்களாக பொன்னையா கந்தையா, தம்பு கந்தையா என்போரையும் தெரிவு செய்தனர். தொடர்ந்து தேர்த்திருப்பணி வேலைகளுட்பட ஆலய நிர்வாகம் சீராக நடைபெற்றது. குறித்த காலத்தில் திருவா ளர்கள் க. வேலுப்பிள்ளை, தி. சுப்பிரமணி யம், பொ. கந்தையா என்போரைப் பிர தான நிர்வாகிகளாகக் கொண்ட தேர்த் திருப்பணிச் சபையினரால் புதிய தேர் அமைக்கப்பட்டது. 14-7-72இல் மீண்டும் ச. சுப்பிரமணியம் நியாயதுரந்தரர் தலைமை யில் கூடிய பொதுக்கூட்டத்தில் 28 பேர் கொண்டதொரு நிலையான நிர்வாகசபை தெரிவாகித் தொடர்ந்து பரிபானவேலைகள் சீராக நடைபெற்று வந்தன. 28-6-74இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுத் திருப்பணி வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்றன.

1974இல் புத்தூர் நீதவான் மன்று தொடக்கம் மேல்நீதிமன்று வரை விசா ரணைகள் நடைபெற்றன. சீனிவாசகம் விசாரணை, மூர்த்தி விசாரணைச் சபைகளி னூடாகவும் நீண்ட சமாதான விசாரணைக ளும் நடைபெற்றன. மேற்கொண்டு யாழ். மாவட்ட நீதிமன்றத்தார் சட்டத்தரணி திரு சி. பொன்னையா அவர்களை ஆணையாளராக 17-7-80இல் நியமித்ததும், கோயிற் பூசை கள் அவரது சிறந்த நிர்வாகத்தால் ஒழுங்காக நடைபெற்றன. பின்னர் குறித்த நீதிமன்றத் தீர்ப்பின்படி சி. பொன்னையா அவர்கள் தலைமையில் 5-4-81இல் தெரிவான 15 பேர் கொண்ட நிர்வாக சபையைத் தொடர்ந்து பரிபாலனம் ஒழுங் காக நடைபெற்று வருகின்றது.

கோயிற் பூசகராகவிருந்த கோ. சுப்பையா ஐயர் அவர்கள் 1938இல் கால மானூர். தொடர்ந்து குருமூர்த்திக் குருக்கள் அவர்களும், 1941இல் மு. பரமசாமிக் குருக் கள் அவர்களும் 1943இல் பொன். குமார சாமிக் குருக்கள் அவர்களும், 1944இல் மீண்டும் மு. பரமசாமிக் குருக்கள் அவர் களும், 28-8-80 வரையும் கோயிற்பூசகர்க ளாக இருந்து வந்துள்ளனர். 1-9-80இல் ப. சண்முகராசக் குருக்கள் அவர்கள் நிய மனமாகித் தொடர்ந்து பூசகராகவிருந்து வருகிறூர்.

1924இல் மூலமூர்த்தி கண்ணகைக்கு இயந் திரம் வைத்துக் கும்பாபிஷேகம் செய்யப் பட்டதாகவும் பின்னூல் ஏற்பட்ட சில தீய விளைவுகள் காரணமாக 1926இல் மீண்டும் இயந்திரம் வையாது கும்பாபிஷேகம் செய் வித்ததாகவும் நமது முதியவர்கள் சொல்லக் கேள்விப்பட்டுள்ளேன். 1956இல் செய்யப் பெற்ற கும்பாபிஷேக இடைவேளையின் போது மீண்டும் இயந்திரம் வைப்பது சம் பந்தமாக எழுந்த தகராறில் சில மணி நேரம் தாமதமாகிய பின் முதியவர்கள் விருப்பப்படி மூலவிக்கிரகத்துக்கு இயந்திரம் வையாதே கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

எக்காலத்தும் எமது கோயில் கண்ணகை யம்மன் கோயிலாகவே இருக்கவேண்டுமென் றும், மூலவிக்கிரகமாகிய கண்ணகைக்கு எக்காரணம் கொண்டும் இயந்திரம் வைக் கப்படாதென்றும் நமது முன்னோரது கொள்கையாக விருந்துவந்ததனையே 1956 கும்பாபிஷேக வேளையிலும் வற்புறுத்தப் பட்டது. 1926ஆம் ஆண்டு நிர்வாகசபையில் கடைசி ஜீவந்தரான வீரவாகு கந்தையா அவர்கள் காலமாவதற்குச் சிலமாதங்கட்கு முன்னர் என்னையழைத்து "யாழ்ப்பாணத் திலுள்ள கண்ணகையம்மன் கோயில்களில் பல, வேறு கோயில்களாக மாற்றமடைந் துள்ளன. நமது கோயில் எமது மூதாதை யரின் தீர்மானப்படி எக்காலத்தும் கண்ண கையம்மன்கோயிலாகவே நடைபெற ஆவன செய்யவேண்டும்" என்று கட்டளையிட்டுச் சென்றுள்ளார்கள். குறித்த எமது முன்னோர் கொள்கைகளை அடியொற்றியே தற்போது பரிபாலனசபை தொழிற்படுகிறது. 10-7-83 தொடக்கம் மூன்று தினங்களாக யாழ்ப் பாணக் குடாநாட்டிலுள்ள கண்ணகையம்

மன் கோயில்களையெல்லாம் பரிபாலனசபைப் பிரதான நிர்வாகிகள் பார்வையிட்டும் பெரியார்களிடம் வேண்டியன விசாரித்தறிந்தும் வந்தனர். மேலும் இதுசம்பந்தமான சாஸ்திரரீதியான விசேட ஆலோசனைகளும் பெறப்பட்டன. யாழ்ப்பாணத்திலுள்ள சிற்பக்கலை ஆச்சாரி ந. பாலகிருஷ்ணன் அவர்களைக் கோயிலுக்கு வரவழைத்தோம். உட்பிராகாரங்களைச் சுற்றிப் பார்வையிட்டு வரும்போது பாலஸ்தாபனம் செய்யப்பட்டிருந்த மூலவிக்கிரகம், இடைக்காலத்தில் செய்யப்பட்டு வசந்தமண்டபத்திலிருந்த எழுந்தருளிகள் என்பனவற்றையும் பார்வையிட்டுப் பின்வரும் ஆலோசனைகளைத் தெரிவித்தார்.

(1) மூலவிக்கிரகமில்லாது விநாயகர் சுப்பிரமணியர் எழுந்தருளிகள் இருப்பது பொருத்தமில்லை. குறித்த இருமூர்த்தங்கட்கும் பிராகாரக் கோயில்கள் அமைக்கப்பட வேண்டும்.

(2) பாலமுருகன், பழனியாண்டி விக்கிரகங்களே சக்திகளில்லாது செய்யப்படலாம். இங்கிருக்கும் சுப்பிரமணியர் விக்கிரகத்திற்கு உடனிரு சக்திகளும் செய்யப்படல் வேண்டும்.

(3) ''கண்ணகையம்மனுக்கு இயந்திரம் வைக்கப்படாது''; என்ற உங்கள் முன்னோரது கொள்கை சரி. கொடியேற்றுக்குப் பதில் அலங்காரத் திருவிழாவே செய்ய வேண்டும்.

அவர் கூறியனவற்றை அடியொற்றியே பிராகாரக் கோயில்களமைக்கப்பட்டு மூல விக்கிரகங்களும் செய்யப்பெற்று எழுந்தருளியும் பூர்த்தியாக்கப்பட்டடுள்ளன. முன்னர் மூலஸ்தானத் தூபியில் காற்சிலம்பைக் கையிலேந்திய கண்ணகையின் சிற்பமும், மகாமண்டப முகப்பு மேற்புறத்தில், பாண்டியன் கொலுமண்டபத்தில் ஒற்றைச்சிலம்பைக் கையிலேந்திய கண்ணகை, ஆவேசமுற்ற நிலையில் நீதிகேட்கும் மாதிரியான சித்திரமும் இருந்தன. இவற்றையொட்டி பண்டிதர் கே. எஸ். ஆனந்தர் எழுதிய குறிப்புகளை அடியொற்றி பண்டிதர் கே. எஸ். நடராசா, வித்துவான் சி. ஆறுமுகம், அ. பஞ்சாட்சரம் அதிபர், நமதூர் அன்பர் அ. வி. மயில்வாகனம் என்போரது ஆலோசனைகளையும் பெற்று மூலஸ்தான தூபியில் கண்ணகை கதை வரலாற்றையொட்டிய 50 சிற்பங்கள்வரை செய்யப்பெற்று ஏகவர்ணமும் தீட்டப்பட்டு மிக அழகாகக் காட்சியளிக்கின்றன. மகாமண்டப முகப்பில் முன்னரமைந்திருந்த சித்திரங்கட்குப் பதில் சிற்பங்கள் அழகாகச் செய்யப்பட்டுள்ளன. மகாமண்டப முன்புற வாயிலில் துவார பாலகிளிருவரும் செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**க. இ. குமாரசாமி**
தலைவர், ஷெ பரிபாலனசபை

**சிவாலயத்தில் கோபுரம், கொடித்தம்பம், பலிபீடம், தூபி, மூலஸ்தான லிங்கம் ஆகிய ஐந்தும் பஞ்சலிங்கங்களாகும். இவற்றுள் கோபுரம், கொடித்தம்பம், தூபி என்னும் மூன்றும் தூல லிங்கங்கள். பலிபீடம் பத்திரலிங்கம், சிவலிங்கம், சூட்சுமலிங்கம். மற்றைய ஆலயங்களுக்கும் இது பொருந்தும்.**

— சிவாகமம்

# நல்வரம் நல்குவாயே

(1) காத்தருள் செய்வா யம்மா, கண்ணகை யம்மா ளென்னும்
பேர்த்திறங் கொண்டு கோவைப் பெரும்பதி தன்னில் வந்தே,
ஊர்க்குல தெய்வ மாக உவந்தருள் செய்யுந் தேவி
காத்திர மாக வாழக் கருணைசெய் திடுக தாயே.

(2) சிங்களக் கசப மன்னன் சேரனின் சிலை யெடுப்பிற்
பங்குகொண் டிலங்கை மீண்டு பண்ணிய கோவில் பலவில்
ஒன்றென வந்து றைந்தே ஊர்க்கருள் சுரக்குந் தாயே,
நன்றுநம் மவர்கள் வாழ நலமெலாம் நல்கு வாயே.

## வடகோவைக் கண்ணகையம்மன் வரம்வேண்டல்

(3) உத்தமக் கற்பி னுக்கோர்
உதாரண மாக வாழ்ந்து
"பத்தினித் தெய்வ" மென்றே
பாரெலாந் துதிக்கச் செய்தோய்
"நித்திய கன்னி" என்ற
நிலைமையிற் கோவை மன்னு
சத்திய தேவி, எங்கள்
சஞ்சலந் தவிர்த்த ருள்வாய்!

(4) அன்னைநின் ஆணை யாலே
அக்கினி தேவன் தானும்
தென்னவன் மதுரை மூதூர்
தீயெழச் செய்தா னன்றோ;
மன்னிய கோவை யூரார்
வழிபடக் கோயில் கொண்ட
பொன்மணிச் சிலம்புச் செல்வீ
புத்தியில் உறைந்த ருள்வாய்!

(5) அரசியல் பிறழ்ந்தோர்க் கெல்லாம்
அறமதே கூற்று மென்ற
மரபுணர்ந் தந்நாட் சாந்தி
மருவிடப் பூசித் தாரே ;
திருமுறு கோவை யூரில்
திருத்தலங் கொண்ட தேவி
வரபலந் தந்து வாழி,
மங்களக் குடநீ ராடி !

## மானுடம் வாழச் செய்வாய்

(6) பத்தினித் தெய்வ மென்றே
பாரெலாம் போற்றச் சேரன்
உத்தம விழாவெ டுத்த
ஓரையிற் கலந்து மீண்ட
அத்தினங் கசப மன்னன்
ஆதர வாய்க்கொ ணர்ந்த
கற்சிலை யொன்றி லுற்ற
கண்ணகைத் தாயே போற்றி.

(7) கோவையூர்ப் பலாலை யென்னுங்
குறிச்சியிற் கோயில் கொண்ட
பாவைநின் திருத்த லத்தைப்
பரிவுடன் புதுக்கிக் கட்டிச்
சேவையின் நிறைவாய்த் தொண்டர்
திருக்குட முழுக்குஞ் செய்தார்;
காவியச் சிலம்பு கொண்ட
கண்ணகைத் தாயே போற்றி.

க. இ. சரவணமுத்து

# சிலம்புச் செல்வி கண்ணகையம்மன்

தண்டமிழ் மொழியிலுள்ள சிறந்த காப்பியம் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம். அறிஞர்கள் இதனைக் கண்ணகி காப்பியமெனவும் கூறுவார்கள். இது சோழ நாட்டிற் பிறந்து பாண்டிநாட்டிற் புகுந்து துணைவனை இழந்து சேரநாட்டில் நுழைந்து இறைவியான தவக்கொழுந்தை, கற்பின் செல்வியையிட்டு, வண்ணமுறப் பாடுவது, சோழ, பாண்டிய, சேரநாடுகளை இணைத்துப் பாடப்பட்டது. இந்நூல் இயல், இசை, நாடகம் ஆகியவற்றின் களஞ்சியமாகும். பிறசமயங்களை வெறுக்காது சமரச மனப் பான்மையையும் இந்நூல் கொண்டு விளங்குகின்றது. இளங்கோவடிகள் அளித்த இந்நூல் சைவர்கள், வைணவர்கள், சக்திவழிபாடு செய்வோர் எல்லோருக்கும் இடமளிக்கின்றது. இது இசைக்கலை, நடனக்கலை ஆகியவற்றின் உறைவிடமாகவும் விளங்குவதைக் காணலாம்,

கண்ணகி கதை தமிழ்நாட்டில் வழங்கி வந்த கதை. சோழநாட்டில் காவேரி ஆறு கடலோடு சங்கமிக்கும் இடத்தில் காவிரிப் பூம்பட்டினம் உண்டு. இளங்கோ காவிரியையிட்டு வர்ணிக்கும்பொழுது,

''வாழி அவன்தன் வளநாடு
மகவாய் வளர்க்கும் தாயாகி
ஊழி உய்க்கும் பேருதவி
ஒளியாய் வாழி காவேரி''

எனக் கூறி விளக்குவார். தவக்கொழுந்து கண்ணகை காவிரிப்பூம் பட்டினத்தின் மாநாய்கன் என்பவரின் செல்வி,

''போதிலார் திருவினுள்
புகழுடை வடிவு என்றும்
தீதிலார் வடமீனின் திறம்
இவள் திறம் என்றும்
மாதரார் தொழுது ஏத்த
வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர் மன்னும்
கண்ணகி என்பாள் மன்னோ''

எனச் சிலப்பதிகாம் தேவியை வர்ணிக்கும். அதே பட்டினத்தில் வாழ்ந்த மாசாத்துவான் மகனே கோவலன்.

''மண்தோய்ந்த புகழினுன்
மதிமுக மடவார்தம்
பண்தோய்ந்த மொழியினர்
ஆயத்துப் பாராட்டிக்
கண்டேத்தும் செவ்வேள்என்று
இசைபோக்கிக் காதலால்
கொண்டேத்தும் கிழமையான்
கோவலன் என்பான் மன்னோ''

என்று கோவலன் வர்ணிக்கப்படுகின்றான்.

கண்ணகிக்குப் பன்னிரண்டு வயதாக இருந்தபொழுது பதினறு வயதுடைய கோவலனை மணந்தார் எனக் கொள்ளப்படுகின்றது. ஏறக்குறைய எட்டு ஆண்டுகள் அவர்கள் இல்லற வாழ்க்கை பொலிந்து விளங்கியது.

கோவலன் கலைஞர். யாழ் வாசிக்க நன்கு கற்றவர். அழகினை இரசிப்பவர். கண்ணகி அடக்கமுடையவர். அறவோர்க்கு அளித்து துறவிகளைப் போற்றி விருந்தோம்பலை விரும்பி வாழ்ந்தவர். கற்புக்கரசி. கோவலன் துணைவியின் ஒப்புயர்வற்ற பண்புமீது மதிப்புக்கொண்டவர். ஆனல் கலையார்வம் எதிர்மறைத் தன்மையை அவருக்கு உண்டாக்கிவிட்டது.

கோவலனும் கண்ணகியும் வாழ்ந்த பட்டினத்திலேயே மாதவி எனும் கலைச் செல்வி வாழ்ந்துவந்தார். ஐந்தாம் வயதிலிருந்து ஏழாண்டுகள்வரையிலும் நடனக் கலையை நன்கு பயின்று கலைத்திறன் மிக்கவளாய் விளங்கினர். பன்னிரண்டு வயதிலே சோழ மன்னன் அவைக்களத்தில் நடனமாடி ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் மாலையும் தலைக்கோல என்ற பட்டமும் பெற்ருர். மாதவியின் தாய் பெயர் சித்திராபதி. இம்மாலையை ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் கொடுத்து வாங்குவோன் மாதவிக்குரியவன் என்று முரசறையப்பட்டது. கோவலன் மாதவியின்பால் ஈர்க்கப்பட்டு

நடனக்கலையால் மூழ்கப்பட்டவர். எனவே அம்மாலையை வாங்கினர். துணைவியை மறந்தார்.

இருபத்து நான்காவது வயதில் மாதவியோடு சேர்ந்து கோவலன் ஏறக்குறைய பதின்மூன்று ஆண்டுகள் நல்வாழ்வு நடத்தியதாகச் சொல்லப்படுகிறது. மணிமேகலை எனும் அரும் செல்வி பிறந்ததும் பெயர் சூட்டுவிழா சிறப்பாக நடைபெற்றது. மணிமேகலை ஒழுக்கத்தால் விழுப்பமுற்ற அறச் செல்வி. ஆனுற் கோவலன் மாதவி வாழ்க்கை நீடிக்கவில்லை.

காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திரவிழா சித்திரைத்திங்களில் முழுமதி நாளில் தொடங்கிக் கொண்டாடப்படுவதுண்டு. விழாவின் இறுதிநாளில் மக்கள் கடற்கரையில் கூடி நீராடி உண்டு மகிழ்வது வழக்கம். இன்றும் இம்மரபு பேணப்படுகின்றது. இவ்விழாவிற் பங்குபற்ற துணைவனும் துணைவியுமான கோவலனும் மாதவியும் சென்றிருந்தார்கள். புன்னைமரத்தடியில் அமர்ந்தார்கள். கோவலன் யாழை எடுத்து வேடிக்கையாக வேருெரு பெண்ணின் மீது காதல்கொண்டிருப்பதுபோலப் பாட்டுப் பாடினன்.

'' திரைவிரி தருதுறையே
    திருமணல் விரிவிடமே
விரைவிரி நறுமலரே
    மிடைதரு பொழில்இடமே
மருவிரி புரிகுழலே
    மதிபுரை திருமுகமே
இருஇயல் இணைவிழியே
    எனைஇடர் செய்தவையே''

என்பது ஒரு பாட்டு.

துணைவியும் யாழைக் கையில் வாங்கி வேடிக்கையாக வேருெருவர்மீது அன்பு கொண்டிருப்பதுபோலப் பாடல்களைப் பாடினர்.

'' தம்முடைய தண்ணளியும்
    தம்மான் நேரம்
எம்மை நினையாது
    விட்டாரோ விட்டகல்க
அம்மென் இணர
    அரும்புகான் அன்னங்காள்
நம்மை மறந்தோரை
    நாம் மறக்க மாட்டாமல் ''

கோவலனுக்கு இமை பொங்கி எழுந்தது. உடனே அவர் அவ்விடத்தைவிட்டு தன் அருமைத் துணைவியாம் கண்ணகியிடம் வந்து சேர்ந்தார்.

தலைவன் பிரிந்திருந்த அத்தனை ஆண்டுகளும் கண்ணுக்கு மையிடவில்லை. காலுக்குச் சிலம்பணியவில்லை. மங்கல அணியைத் தவிர மற்று அணிகளொன்றும் அணியவில்லை.

தலைவனைக் கண்டதும் அகமும் முகமும் மலர்ந்தன. வறுமை எட்டிவிட்டது எனக் கோவலன் கூற, அம்மை சிலம்புகள் இருக்கின்றன; கொண்டு செல்லுங்கள் என்று ஒரு கணமும் யோசியாது சொல்ல சிலம்பை விற்று மதுரையில் வாணிகம் செய்து பொருளைத் தேடவேண்டுமென்று கூறி நாளை விடியற்காலை தன்னுேடு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அம்மையும் இணங்கி மறுநாட் காலை பொழுதுபுலர்வதற்கு முன்னர் ஒருவருக்கும் தெரியாது வீட்டைவிட்டுப் புறப்பட்டனர். வழியில் கவுந்தி அடிகள் எனும் சமணப் பெண்துறவியைச் சந்தித்தனர். துறவியாரும் மதுரைக்குப் புறப்படவே இருவரும் அம்மையாரோடு கூட நடந்து சென்றனர்.

கவுந்தியடிகளும் கோவலனும் கண்ணகியும் நாள் ஒன்றிற்கு பத்துமைல் நடந்தார்கள். பகலில் வெப்பம் மிகுதியாக இருந்ததால் சிலநாட்கள் இரவில் நிலாவெளிச்சத்தில் நடந்தார்கள். மூவரும் வையை ஆற்றைத் தோணியாற் கடந்து மதுரைப் புறஞ்சோலையைச் சென்றடைந்தனர்.

காலையில் கோவலன் மதுரை நகரைப் பார்க்கச் சென்ருர். கவுந்தியடிகளும் கண்ணகியும் சோலையில் இருந்தார்கள். கோவலன் மதுரையைச் சுற்றிப்பார்க்கச் சென்றிருந்தார். பின்னர் கவுந்தியடிகள் ஆயர்குல மாதரியிடம் கோவலனையும் கண்ணகியை

யும் அடைக்கலமாக ஒப்படைத்து அவர்களுக்கு வேண்டிய உதவிகள் புரியுமாறு வேண்டினர்கள். மாதரி அவர்களுக்குத் தனி விடுதி அளித்து உணவுப் பொருட்கள் அளித்து தனது மகள் ஐயையையும் உதவி செய்யுமாறு விடுத்தார். கண்ணகித்தேவி தனது கைகளால் உணவு சமைத்து, கணவனுக்கு அளித்து அன்போடு அவரை மதுரை அனுப்பி வைத்தாள்.

கோவலனும் கண்ணகியும் வாழ்ந்த ஆயர் குல மக்கள் சேரி மதுரைக்குப் பத்துமைல் தொலைவிலுள்ள கூடலூரர் என அங்கு வாழும் மக்கள் இன்றும் கொள்ளுகின்ருர்கள்.

மதுரைக்குச் செல்லும்பொழுது மனைவியின் சிலம்புகளில் ஒன்றை விற்கும் நோக்கத்தோடு எடுத்துச் சென்ருர்.

கோவலன் வீரமும் ஈரமும் பண்பும் அன்பும் கொண்டு விளங்கியவர்.

இதே வேளையிலே மதுரை மன்னன் நெடுஞ்செழியன் தலைவி அரசி கோப்பெருந்தேவியின் சிலம்பு ஒன்று அரண்மனையிலிருந்து களவாடப்பட்டுவிட்டது. இது அங்கு பணிபுரிந்த பணியாட்களுள் ஒருவரால் களவாடப்பட்டிருந்தது.

கோவலன் மதுரைமாநகரில் அப்பணியாளனையே சந்தித்தார். சிலம்பைக் காட்டினர். பணியாளன் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசனிடம் சென்று '' காணமற்போன சிலம்பைக் களவாடிய கள்வன் அகப்பட்டான். என் மனையில் உள்ளான் '' எனக் கூற அரசனே, கூறப்பட்டது மெய் என்று நம்பி 'கள்வனைக் கொன்று சிலம்பைக் கொணர்க' எனக் கட்டளையிட்டான்.

இதற்கு விமர்சனம் கூறும் ஆசிரியர்கள் 'அவனைக் கொண்டு சிலம்பைக் கொணர்க' என்று சொல்ல நினைத்த அரசன் விதியினல் மதியிழந்து 'கொண்டு' எனும் சொல்லுக்குப் பதிலாக 'கொன்று' எனும் சொல்லைப் பயன்படுத்தினர் எனக் கொள்கின்ருர்கள்.

எனினும் கோவலன் கொல்லப்பட்டார்.

கொலையுண்டபோது கோவலனுக்கு முப்பத்தேழு வயதிருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளர்கள் துணிபு. ஏறக்குறைய எட்டு ஆண்டுகள் இல்லறம் நடாத்தி மாதவியோடு வாழ்ந்தார்.

கோவலன் கொலையுண்டது கேட்டு கண்ணகி கலங்கினர், கதறினர். கொலைக்களம் சென்று கணவன் உடல் புழுதியில் கிடந்ததைப் பார்த்து தழுவி அழுதாள். கோவலன் 'கண்ணே இரு' என்று சொல்லி மறைந்தார்.

கண்ணகித்தேவி சீற்றம் கொண்டு நெடுஞ்செழியன் அரண்மனை சென்று உண்மையை விளம்பி தன் கணவர் கொண்டு வந்த சிலம்பு மாணிக்கத்தை உள்ளீடாகக் கொண்டுள்ளது என்றும் முத்து அல்ல என்றும் சிலம்பினை உடைத்து நிரூபித்தார். தன் துணைவனின் உண்மை நிலையை நாட்டிக் கற்புக்கரசியானர். வேந்தனும் உள்ளம் உடைந்து 'யானே கள்வன்' எனக் கூறியவாறு சாய்ந்து மாய்ந்தார். கோப்பெருந்தேவியும் உயிர் நீத்தார்.

கற்புக்கரசி கண்ணகி அரண்மனையில் நடந்த நிகழ்ச்சிகளைக் காணது அவ்விடத்தை விட்டகன்று மதுரை நகரை மும்முறை வலமாகச் சுற்றிவந்து 'யான் அமர் காதலன் தன்னைத் தவறு இழைத்த கோநகர் சீறினேன்' என்று கூறியதும் ஆடித்திங்களில் அட்டமி ஞான்று மதுரை எரிந்தது.

'கீழ்த்திசைவாயிற் கணவனேடு புகுந்தேன் மேற்றிசைவாயில் வறியேன் பெயர்கிறேன்' எனக் கூறி இரவுபகலாக வையைக் கரைவழியே மேற்குநோக்கி மலைநாடு அடைந்து திருச்செங்குன்று ஏறி வேங்கை மரநிழலில் நின்ருர். தேவர்களோடு கோவலன் வானவூர்தியோடு வந்ததும் கண்ணகியும் அதில் ஏறிச் சென்ருர்.

ஏறக்குறைய முப்பத்துநான்கு வயதில் எத்திசையும் வணங்கும் பத்தினித் தெய்வமானர்.

கண்ணகி தேவி விண்ணகம் அடைந்த செய்தி சேரவேந்தன் செங்குட்டுவனுக்கும், சேரன் அரசிக்கும் மலைநாட்டுமக்களால் அறிவிக்கப்பட்டது. சேரமான்தேவி பத்தினித் தெய்வத்துக்குக் கோயில் கட்டி வழிபட விரும்பினுர். செங்குட்டுவன் இதற்கிணங்கி இமயமலையிலிருந்து கல் கொணர்ந்து கண்ணகிபடிவம் செய்து முப்பத்திரண்டு திங்களுக்குப்பின் கண்ணகிக்கு விழாநடத்தி வழிபட்டான்.

கண்ணகித் தெய்வத்துக்கு விழா எடுத்ததும், 'அரந்தை கெடுத்து வரம்தரும் இவளென, ஆடித் திங்கள் அகவையின் ஆங்கோர், பாடி விழாக்கோள் பன்முறை எடுப்ப, மழைவீற் றிருந்து வளம்பல பெருகி பிழையா விளையுள் நாடாயிற்று' எனச் சிலப்பதிகார உரைபெறு கட்டுரை உரைக்கின்றது.

'கடல்சூழ் இலங்கைக் கயவாகு மன்னனும்' இவ்விழாவிற் கலந்துகொண்டார்; என்பது சிலப்பதிகாரம் தரும் செய்தியாகும்.

சேரன் செங்குட்டுவனுல் எழுப்பப்பட்ட கண்ணகி கோயில் மங்கலதேவி பள்ளிகொண்டிருக்கும் கோயிலாக இன்று விளங்குகின்றது. இப்பதி செம்மையாகப் பேணப்படவில்லை என்பது துன்பம்தரும் செய்தியாகும். கேரளப் பிரதேசத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் உள்ள எல்லையில் இக் கோயில் அமைந்திருக்கின்றது. இரு மா நிலங்களும் மூன்று அரசுகளையும் ஒன்றிணைத்த சிலப்பதிகாரத் தேவியை இணைந்து செங்குட்டுவன் காலநிலைக்குக் கொண்டுவருதல் முக்கியமாகும்.

கண்ணகி வழிபாட்டை நமக்கு அளித்த நாடு பாரதம். இந்நாட்டில் கண்ணகி எனும் நாமத்தோடு சக்தியை வழிபடுவதில்லை. பாரத அறிஞர்கள் கண்ணகியே மாரியம்மன்; எனக் கொள்கின்றுர்கள். இன்றும் மாரியம்மன் கோயிலில் சிலம்பு கொண்டு ஆடும் ஆட்டம் நிகழ்கின்றது.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் சிங்கள பௌத்த மக்களுக்கிடையே கண்ணகித்தேவி பத்தினித் தெய்வமாக வழிபடப்படுகின்றுர்.

யாழ்ப்பாணம் வவனியா முல்லைத் தீவு ஆகிய மாவட்டங்களில் சீரும் சிறப்பு மிக்க கண்ணகி கோயில்கள் உள. ஆனுல் கிழக்கிலங்கையில் விசேடமாக தென் கிழக்கு இலங்கையில் இவ் வழிபாடு ஓங்கி வளர்ந்திருப்பதைக் காண்கின்றேம்.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம், புங்குடுதீவு கண்ணகி ஆலயம், கோப்பாய் பலாலை கண்ணகை அம்மன் ஆலயம், சண்டிலிப்பாய் அங்கணுக்கடவை கண்ணகி கோயில், சுட்டிபுரம் கண்ணகி கோயில் என்பன கண்ணகி வழிபாட்டின் நிலைக்களன்களாக இன்றும் திகழ்கின்றன. புங்குடுதீவு கண்ணகி அம்மன் ஆலய முன்றிலில் சிலப்பதிகார விழா உன்னதமான முறையில் சில ஆண்டுகளுக்குமுன் நடந்த வரலாறு ஞாபகத்துக்கு வருகின்றது. புங்குடு தீவு முன்னெருபோது கண்ணகித்தீவு என வழங்கப்பட்டதாக வரலாறு உண்டு.

சைவசமயத்தின் எல்லாப் பிரிவுகளும் பரம்பொருளிடம் சீவனைச் சேர்ப்பதற்கே வழிசெய்கின்றன. இதில் வேறுபாடு இல்லாத காரணத்தினுல் பல பிரிவினர்கள் பல மூர்த்திகளை இஷ்ட தெய்வங்களாக வழிபடுகின்றுர்கள். மட்டக்களப்பில் மிகப் பழமையான சைவசமயத் தெய்வம் முருகனுகும். முருகனேடு வள்ளிநாயகியையும் சேர்த்து வழிபட்டனர். முருகனேடு வள்ளிநாயகியையும் சேர்த்து வழிபட்டமுறை காலப்போக்கில் வெவ்வேறு பெயராலமைந்த வழிபாடாக மாறிவந்துள்ளது. இந்த வழிபாட்டுமுறை வெளித் தொடர்புகளாலும் மக்களின் விரிந்த சமய நூற் பயிற்சிகளாலும் சிவ வழிபாடாகவும் சக்தி வழிபாடாகவும் பிரிந்தும் வளர்ந்திருக்கின்றது. எனினும் தென்கிழக்கு இலங்கையைப் பொறுத்தவரையில் சக்தி வழிபாடே பெரிதும் கால்கொண்டு வளர்ந்து வந்திருக்கின்றது.

விபுலானந்த அடிகள் தனது இளம் பராயந்தொட்டே அவரது கிராமமாகிய காரைதீவில் எழுந்தருளியிருக்கும் கண்ணகை அம்மன் கோயிலுக்குத் தனது தந்தையாரோடு செல்வது வழக்கம். அடிகளாரின் பிற்

கால இராமகிருஷ்ண சங்கத் தவவாழ்க்கை கண்ணகி கோயிலில் ஊற்றெடுத்த சக்தி வழி பாட்டின் அடிப்படையில் எழுந்தது என்று கூடக் கொள்ளலாம்.

கண்ணகி வழிபாட்டின்வழி அடிகளாருக்குச் சிலம்புச் செல்வத்தினை ஐயம் திரிபறக் கற்கும் ஆர்வம் பிறந்தது. இந்த ஆர்வத்தின் பிறப்பே முத்தமிழ் வித்தகர் தந்த யாழ் நூலாகும்.

தேவார இசைத்திரட்டும் இசைநாடகச் சூத்திரங்களும் புறவுறுப்பாக அமைந்ததே யாழ் நூலாகும். இந்நூல் பாயிரவியல் முதலாக ஒழிபியல் ஈறாக ஏழு இயல்களைக் கொண்டது. சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையில் யாழாசிரியன் அமைதி கூறும் இருபத்தைந்து அடிகளுக்கு இயைந்ததாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலில் அடிகளார் வழக்கொழிந்துபோன இசை நூலிலக்கணத்தையும் முளரியாழ் ஆயிர நரம்புயாழ் போன்ற வழக்கொழிந்த யாழ்களையும் பற்றிக் கூறுகின்றார்.

இயல் இசை நாடகம் எனும் முத்தமிழ் ஆகியன ஒன்றோடொன்று தொடர்புபட்டவை; எனவே எல்லோரும் அவற்றினை அறிந்திருக்கவேண்டுமென்பது அவர் துணிபு. குவலயம் போற்றும் திருக்கொற்றம்பூதூர் நாச்சியார் சேவடியில் யாழ் நூல் அரங்கேற்றப்பட்டது.

மூதறிஞராம் மதுரை காமராசர் பல்கலைக்கழக முன்னைநாள் துணைவேந்தர் பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் சிலப்பதிகாரத்தையிட்டுக் கூறும்பொழுது இதனைக் குடிமக்கள் காப்பியமென வர்ணிப்பார்.

பொதுவாகக் காப்பியங்கள் இறைவனையோ அல்லது வேந்தனையோ பாட்டுடைத் தலைவனாக வைத்துப் பாடும் மரபிலிருந்து விலகி குடிமக்களை அடிப்படையாக வைத்து எழுந்தது சிலப்பதிகாரம் என்பது அவர் கருத்தாகும். எனவே இது குடிமக்கள் காப்பியம் என அவர் கொண்டார்.

கண்ணகி வழிபாட்டோடு கொம்பு முறித்தல் என்னும் விழாவும் இணைந்து வளர்ந்திருக்கின்றது. ஒரு கிராமத்திலுள்ளவர்கள் வடசேரி தென்சேரி என இரு குழுக்களாகப் பிரிக்கப்படுவார்கள். வடசேரியோர் கோவலன் பக்கத்தினர். தென் சேரியோர் கண்ணகி பக்கத்தினர். இக்கொம்பு முறித்தல் விழாக்காலத்தில் கண்ணகி கட்சியாளரும் கோவலன் கட்சியாளரும் தங்கள் தெய்வங்களை வெவ்வேறாக அலங்கரித்து தேரில் ஏற்றிப் பவனி வருவார்கள். இவையெல்லாம் போட்டிமனப்பான்மையில்லாது ஒத்துணர்வோடேயே நடைபெறும்.


பலநாட்கள் கொம்பு முறித்தலுக்குப் பின்னர் சம்பிரதாயபூர்வமாக தென்சேரிக் கண்ணகிதேவி சார்பினரே வெற்றிபெறுவர்.

கண்ணகி வழிபாடு பாமரமக்கள் வழிபாடாக நமது நாட்டில் வளர்ந்துவந்துள்ளது, என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.


கண்ணகிகாப்பியமான சிலம்புச் செல்வம் நமக்கு அளிக்கும் தத்துவம்,

'தெய்வம் தெளிமின்
தெளிந்தோர்ப் பேணுமின்; ......
தானம் செய்ம்மின்
தவம்பல தாங்குமின் .........
அறவோர் அவைக்களம்
அகலாது அணுகுமின்; ........
அறமனை காமின்
அல்லவை கடிமின்; .........
இளமையும் செல்வமும்
யாக்கையும் நிலையா; .........
மல்லன்மா ஞாலத்து
வாழ்வீர் ஈங்கென்.'

**பேராசிரியர் ப. சந்திரசேகரம்**
கல்வித்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



1. பிரதான கும்பங்களை வீதிவலமாகக் கொணர்தல்.
2. வழிபாடியற்றும் பெண் அடியார்கள்.
3. மஹா கும்பாபிஷேகத்தில் பங்குபற்றிய சிவாசாரியர்கள்.



மஹாகும்பாபிஷேகம் பூர்த்தியடைந்ததும் பிரதம சிவாசாரியர் தீர்த்தம்வழங்குகின்ருர். மஹா கும்பாபிஷேக மகிமை பற்றிய உரைகள்.

# கற்புக்கடம் பூண்ட பொற்புடைத் தெய்வம்

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனுந்
திண்மையுண் டாகப் பெறின்"

என்பது வள்ளுவர் வாக்கு. இத் திண்மையின் காரணத்தால் தெய்வமெனும் நிலைக்குப் பெண்கள் உயர்த்தப்படுகிறார்கள். "நற்பெருந் தெய்வம்" என்று போற்றப்படும் நிலையைக் காரைக்கால் அம்மையார் பெற்றார். "மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்" என்று போற்றப்பட்டவர் மங்கையர்க்கரசியார். கற்பெனும் திண்மையால் நம் நாட்டிலும் தாய்நாட்டிலும் கண்ணகி வழிபாடு இடம்பெற்றுள்ளது. சோழநாட்டில் மனிதப்பிறவி எடுத்து, வணிகனின் செல்லப்பிள்ளையாக வளர்ந்து, பாண்டி நாட்டில் பல இன்னல்களுக்காளாகிப் பின்பு சேரநாட்டில் தெய்வமென்னும் நிலையை எய்திய பெருமை கண்ணகிக்குண்டு. இதனை நேரிலே கண்டறிந்த சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு விழா வெடுத்துத் தெய்வமாகப் போற்றினன். இவ் விழாவிற் கலந்து கொண்ட கஜபாகு மன்னன் இலங்கையிலும் கண்ணகிக்குக் கோயில் அமைத்து வழிபாட்டை நடாத்தினன் என்பதை வரலாறு காட்டுகின்றது. இதனால் ஈழநாட்டில் பரவலாகக் கண்ணகி அம்பாள் கோயில்கள் காட்சிதருகின்றன. கிழக்கு மாகாணம் இவ் வழிபாட்டில் மிகச் சிறப்புப்பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்திலும், தீவுப்பகுதிகளிலும், வன்னிநாட்டிலும் கண்ணகி கோயில்கள் விளங்குவதைக் காணுகிறோம். பருத்தித்துறை, கோப்பாய், கந்தரோடை, மட்டுவில், வயாவிளான் ஆகிய இடங்களிலும் மிகப் பழமைவாய்ந்த கண்ணகி கோயில்கள் காட்சி தருகின்றன.

சைவமக்கள் இரண்டுவகையில் வழிபாடுகளை ஆற்றக்கூடிய கோயில்களை அமைத்துள்ளனர். முதலாவது, அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த இறைவனுக்குத் திருவுருவம் அமைத்துக் கோயில் கட்டி வழிபடுவது. இரண்டாவது, தூய வாழ்வினாலும் ஆன்மீக வழிநடத்தலினாலும் அற்புதங்கள் பல ஆற்றியமையினாலும் அத்தகையோரைக் கண்கண்ட தெய்வமாகப் போற்றி அவர்களுடைய திருவுருவங்களைச் சமைத்து அல்லது அவர்கள் சமாதியின் மேல் சிவலிங்கத் திருமேனியை எழுந்தருளச் செய்து வழிபாடுசெய்வர். நாயன்மார் கோயில், மற்றும் ஞானிகளின் சமாதிக் கோயில், கண்ணகி கோயில் ஆகியவை இந்த இரண்டாவது வகையைச் சார்ந்தவைகளாகும். இவற்றிற்கு அபரிமிதமான சக்தியுண்டு. கண்ணகி வழிபாடு என்பது ஒரு வீர வழிபாடு ஆகும். இதனால் நாட்டிற்கு எழுச்சியும் மலர்ச்சியும் நல்ல கருமங்களை ஆற்றுவதில் துணிவும் இயற்கையின் சீற்றங்களைத் தணித்துக் கொள்ளும் தன்மையும் ஏற்படுமென்பர்.

உண்மையும் தூய்மையும் ஓம்பிக் கணவனை வழிபடும் மனைவியின் நெறியே கற்பு நெறி. அதனாலேயே பெண்மை உயர்வடைகிறது. பெண்ணினம் போற்றப்படுகிறது. உயர்ந்தஒருவரைமதித்து நம்பிக்கைகொண்டு வழிபட்டால் அவர் பெற்ற உயர்வை எளிதில் பெறமுடியும். அவரிடம் குறை இருப்பினும் வழிபடுவோர் அந்தக் குறையும் நீங்கி உயர்வடைவர். இதுவே சமயத் துறையில் குருவழிபாடு எனவும், அரசியல் துறையில் வீர வழிபாடு எனவும், குடும்பத் துறையில் கற்பு வழிபாடு எனவும் பெயர் பெற்றது. குறிக்கோள் தவறாமல் இருப்பதற்காகவே கொள்கைத்திண்மை வேண்டுமென்று வற்புறுத்தப்படுகின்றது. அந்தத் திண்மைக்கே குடும்பவாழ்வில் கற்பு என்னும் பெயர். கற்புள்ள பெண்களின் வாழ்க்கை வெற்றி அன்புநெறி நல்கும் வெற்றியாகும். கற்புள்ள பெண் தெய்வமாக மதிக்கப்படுகிறாள். கண்ணகிக்கு விழாவெடுத்தான் சேரன் செங்குட்டுவன் என்பதும் வெற்றியேயாகும். கற்புள்ள பெண்களுக்குப் பஞ்சபூதங்களும் குற்றேவல்செய்யத் தயாராய் உள்ளன என்பதை "பெய்யெனப் பெய்யும் மழை" என்பதால் வள்ளுவர் காட்டுகிறார். இன்னும் கண்ணகியின் கற்பு மதுரையை எரித்தது என்று சிலப்பதிகாரம் காட்டுகிறது.

கவுந்தியடிகள் பெருந் துறவியாக விளங்கியவர். அவருடைய கூற்றுக்கு ஒரு தனி

மதிப்புண்டு. அந்தச் சாதுவின் வாயிலிருந்து பின்வரும் வாக்குகள் வெளிவருவதைக் காணுகிறோம்.

'' இன்துணை மகளிர்க்கு இன்றி யமையாக்
கற்புக்கடம் பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால் ''

இவ் வார்த்தைகள் கண்ணகியைத் தெய்வ மாகப் போற்றுகின்றவர்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டுகிறது. மேலும் பத்தினிப் பெண்டிர் வாழுகின்ற இந்த நாட்டிலே வானம் பொய்யாது; வளங் குறையாது; வேந்தர் கொற்றம் சிதையாது என்பது ஆன்றோர் நம்பிக்கை. இல்லறத்தில் ஈடுபட்ட நேரத்திலும் கணவனின் பிரிவைத் தாங்கிக் கொண்டு, அறவோர்க்களித்தலும் அந்தணர் ஓம்பலும் துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் ஆகியவற்றின் இழப்பையே எண்ணி மனங் கவல்வது உயரிய இலட்சியப் பெண்ணின் கடமையன்றோ. இதனாலேயே சிலப்பதிகாரத்தின் தொடக்கத்திலேயே இலக்குமியின் வடிவு இவள் வடிவு ஒக்குமென்றும் அருந்ததியின் கற்பு அவள் கற்பை ஒக்குமென்றும் நூலாசிரியர் அறிமுகஞ்செய்து வைக்கின்றார். மேலும் கண்ணகியின் கற்பைப் பெருங் கற்பு என்று தனிப் பெருமை கொடுத்துப் போற்றுகிறார். அதனைப் பின்வரும் பாடல் உணர்த்துகின்றது.

'' திங்கள்மாலை வெண்குடையான் சென்னி
செங்கோலது வோச்சிக்
கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவாய்
வாழிகாவேரி கயற்கண்ணாய்
மங்கைமாதர் பெருங்கற்பென் றறிந்தேன்
வாழி காவேரி ''

இங்கே பெருங் கற்பு என்ற சொல் குறிப்பிடத்தக்கது. கோவலனைப் பிரிந்திருந்த காலத்தில் கண்ணகியின் கோலம் எப்படி அமைந்திருந்தது என்பதையும் கற்புடைய பெண்மையில் வைத்து இளங்கோ அடிகள் பின்வருமாறு காட்டுகிறார்.

அஞ்செஞ் சீறடி அணிசிலம் பொழிய
மென்துகில் அல்குல் மேகலை நீங்க
கொங்கை முன்றிற் குங்கும மெழுதாள்
மங்கல வணியிற் பிறிதணி மகிழாள்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப்
பவள வாணுதல் திலகம் இழப்ப
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி ''

இவ்வாறு உலகியலிலும் தெய்வீக நிலையிலும் இளமைதொட்டே போற்றப்பட்ட கண்ணகிக்கு மதுரைப் பயணம் பெரும் துன்பத்தைக் கொடுத்தது. மாதவியிடமிருந்து நீங்கி கண்ணகியிடம் நாணிக் கோணி வந்த கோவலனுக்குப் பாராட்டத் தக்க வரவேற்புக் கிடைத்தது. '' சலம்புணர் கொள்கைச் சலதியோ டாடி குலந்தரு வான் பொருள் குன்றந் தொலைந்த இலம்பாடு நாணுத் தருமென்று '' கோவலன் கூசிக் கூசிக் கூறியபொழுது புன்முறுவல் பூத்து இன்முகங் காட்டி ''சிலம்பிருக்கிறது கவலைப்படாதே'' என்று ஆறுதலளிக்கிறாள் கண்ணகி. அதுவுமன்றி மண்மகளறியாத வண்ணச் சீறடியை வைத்துக் கோவலனோடு மதுரை நோக்கி நடந்து சென்றாள். சிலம்பு இழைத்த வினையினால் கோவலன் பாண்டிய மன்னனின் தண்டனைக்கு ஆளாகிறான். கொலைக்களப்பட்ட கோவலனின் மனைவியாகிய கண்ணகி '' ஐயோவென அழுது அரற்றி'', 'தெய்வமும் உண்டுகொல் சான்றோரும் உண்டுகொல்' என முறைப்பட்டுக் கொண்டு மன்னன் முன்னிலையிற் சென்று வாதிட்டுத் தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை நிரூபித்துப் பொங்கி எழுந்து மதுரையை எரித்து அப்பாற் சேரநாட்டை வந்தடைகிறாள். இங்குதான் தெய்வம் என்ற நிலைக்கு ஏற்றப்படுவதைக் காண்கிறோம். வெட்டுண்டிருந்த தன் கணவனுடைய உருவெளித் தோற்றத்தில் ஒன்றுபட்ட கண்ணகி மலைமீதேறி மறைந்த செய்தியைக் கண்டவர் கூறச் சேரன் செங்குட்டுவன் அதனைக் கேட்டுப் போற்றிக் கோயில் எடுப்பித்ததுமன்றி இளங்கோமூலம் சிறந்த இலக்கியத்தையும் படைப்பித்தனன் என்பது வரலாறு. இந்த வரலாறு பத்தினித் தெய்வ வழிபாட்டை எங்கும் பரப்பியது என்று கூறினால் மிகையாகாது.

கோப்பாய்ப்பதியில் வரலாற்றுச் சிறப்புமிக்க கண்ணகியம்மன் கோயிலில் கும்பாபிஷேகம் நடைபெறுவது குறித்துப் பேருமையடைகிறோம். பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள் நிறைந்த நாடு நம் நாடு. இறைவன் மனித வடிவில் வந்து அற்புதங்களை விளக்கி ஆன்மாக்களை ஆட்கொள்கிறார் என்பதில் அசையா நம்பிக்கைகொண்டவர்கள் சைவ மக்கள். இந்த நம்பிக்கையின் அடிப்படையில் கண்ணகிதேவியை அம்பாள் சொரூபமாக, வீரமாகாளியாக, மகாமாரியாக வைத்துப் போற்றும் சிறப்பு நமக்கே உரித்தானது. ஆகவே இவ்வாலயக் கும்பாபிஷேகம் சிறப்புற அமையவேண்டுமென்று எம்பெருமாட்டியை இறைஞ்சுகிறேன்.

சிவத்தமிழ்ச் செல்வி

**பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி**

# கண்ணகித் தெய்வம்

சோழவள நாட்டிலே காவிரிப்பூம் பட்டினத்திலே பெருங்குடியர் என்னும் வணிகர் குலத்திலே மாநாய்க்கன் மகளாகக் கண்ணகி அவதரித்தாள். இக் குடியிலே மாசாத்துவான் மகனுகக் கோவலன் பிறந்தான். இவ்விருவருக்கும் உரிய காலத்திலே விவாகம் நடந்தது. இவர்களுக்குப் புது மனேயும் கட்டிப் புறம்பாக வாழவைத்தார்கள்.

முன்செய் தீவினைகளின் கர்மபலன்வழி இங்கே இருவரும் உரிய வாழ்க்கையை அனுபவிக்கவேண்டி நேர்ந்தது. நாடகக் கணிகையர் குடும்பத்து மாதவி என்பாளிடம் கோவலன் செல்லத்தொடங்கித் தன் பொருள் முழுவதையும் இழந்தான். மணிமேகலை என்றெரு குழந்தையே எஞ்சுகின்றது. தாயும் மகளும் பின்னர் தவக் கோலம் பூணுகின்றனர்.

கோவலன் நல்வினைகூட்டத் திரும்பக் கண்ணகியிடம் வருகின்ருன். அவள் தான் பிரிவாற்ருமையால் உள்ளத்தே துன்புற்ருலும் அதை வெளிக்காட்டாதிருந்தமையைக் கூறினுள். என்ருலும் பெற்ரேரும் மற்ரேரும் துன்புற்ருர்கள். இதற்காகவே அவள் சொல்லுகிருள் —'' அவர் உள்ளம் வருந்தப் போற்ரு ஒழுக்கம் புரிந்தீர் '' என்றும், தானே '' மாற்ரு உள்ள வாழ்க்கை '' உடையாள் என்றும் கூறி இன்னும் கணவனின் மனம் விரும்பியவாறு இனி இருக்கும் சிலம்பையுமே விற்கலாம் ; என்று கொடுக்கின்ருள்.

அவன் மனந்திரும்புகின்ருன். ஆனுல் உள்ளூரில் வசிக்க வெட்கமுற்று மதுரைக்குப் புறப்படுகிருன். அங்கு சிலம்பு முதலாகக்கொண்டு மறுபடியும் பொருளீட்டி வாழ முனைகின்ருன். இங்கே இடைச்சியர் தலைவி மாதரிக்குக் கவுந்தியடிகள் கண்ணகியைப்பற்றிக் கூறுவதை நாம் கவனிக்க வேண்டும். முக்காலமும் உணர்ந்த முனிவர் கண்ணகியைப் பத்தினி என்கின்ருர்; தெய்வமாக வழிபடத் தகுந்தவர் என்கிருர். இதனைக் கேட்ட கண்ணகி நாணி ஒருபுறம் தலைகுனிந்திருந்தாள்.

ஆனுல் உண்மையை நாம் மறக்கலாகாது. இவர்களுடைய குடும்ப வாழ்க்கை போன்று உலகில் எத்தனையோ குடும்பங்களைக் காணலாம். அக் குடும்பப் பெண்களைப் பத்தினித் தெய்வங்களாகச் சமூகம் வழிபடவில்லை. கண்ணகிக்கு மட்டும் இப் பெருமை இருந்தவாறு.

தன் கணவன் கொலையுண்டான் என்பதைக் கேள்வியுற்றதும் பிழை பொறுக்க முடியாளாகி வெகுண்டு எழுகின்ருள் கண்ணகி. அரசவைக்குச் செல்லும் வழியில் தன் கணவனுடன் தான் கதைக்கப்போவதாகச் சூழ் உரைத்துச் சொல்லுகிருள். அவ்வளவு திடசித்தம் அப்பத்தினித் தெய்வத்திடம் இருந்தது. இவளால் இது முடியுமோ என்று யாருமே அப்போது ஐயுற்றதில்லை, சாவித்திரி மரபுவழிவந்த பெண்களுக்கு இவை இயலும்; என்ற கொள்கையால்.

இனி, கண்ணகி சூரியனையுமே தனக்குச் சாட்சியாகக் கூப்பிட்டுக் கேட்கிருள். அசரீரிவிடைபகருகின்றது. இவை எல்லாம் தெய்வச்செம்மை சான்றவர்க்கும் இயலாதன என்று நாம் கருதினுல் கண்ணகியை இளங்கோஅடிகள் பிழைபடக் கருதியுள்ளார்; என்னலாம். ஆனுல் தெய்வத் தன்மைவாய்ந்த புனிதவதியார் போன்ருர்க்குச் சாமானியப் பெண்களிலும் பார்க்க ஆற்றல் வியக்குமளவிற்கு இருக்கும். அப்படியே கண்ணகிக்கு இருந்த ஆற்றல் உண்மையை நிலைநாட்டித் தர்மத்தைக் காப்பதற்கு முயல்வதை நாம் காணலாம். இங்கு அக்கினிதேவன் கண்ணகியைத் தரிசிப்பதும் தனக்கு ஏலவே இடப்பட்ட கட்டளையையும் கூறுகின்ருர். இதற்குக் கண்ணகி பாத்திரமாகமாட்டாள். ஊழ்வினை கூட்டக் கண்ணகியின் சூழலில் நிகழ்ந்தவை அரசனுடைய முடிபும் எரியூட்டலும் ஆகும். மேலும் கண்ணகித் தெய்வம் துர்க்கையின் கலை கொண்டு வீரபத்தினி உருவத்தில் '' முதிரா முலை குறைத்தாள் '' என்று கொள்ளல் வேண்டும். இந்தக் கண்ணகி வேறு; கற்புக் கடம் பூண்ட ( பேசாமடந்தை ) கண்ணகி வேறு. இப்போது நிற்கின்ற கண்ணகித் தெய்வம் தேவர் போற்றும் தெய்வமாகும்.

'' வானவர் போற்ற மன்னெடுங் கூடி
வானவர் போற்ற வானகம் பெற்றனள் '

என்று கூறப்படும் பத்தினித் தெய்வமாகும் இத் தெய்வத்தைச் சாமானியப் பெண்ணுக வைத்துக்கொண்டு இவருடைய பண்புகளை நாம் ஆராய்தல் பிழையாகும். இதனை இளங்கோ அடிகள் நன்ருக அறிந்திருந்தார். அவர்,

'' கொங்கச் செல்வி குடமலை யாட்டி
மங்கல மடந்தை ஆயிழை கோட்டம்''

என்று பயபக்தியோடு '' தீண்டாத கற்பினுளை'' ச் சீரிய சொற்களால் தீண்டுகின்ருர். அவர் சிலப்பதிகாரம் பாடி முடிக்குமுன்னரே இச் செழுந்திருவாட்டியின் கோயில்கள் மூவேந்தர் நாடுகளிலும் தோன்றிவிட்டன. கற்பெனப்படுவது ஒன்றற்கு கற்சிலை நியமம் எடுப்பது கடனுகும்; எனத் திருவள்ளுவர் தர்மத்தில் தோய்ந்த தமிழர் கருதினுர்கள்.

இவ்விடத்தில் கடல்சூழிலங்கைக் கயவாகு வேந்தனும் அழைக்கப்பட்டான். இவன் புத்த ஆலயங்களின் பகுதிகளில் பத்தினிகோயில்களை அமைத்து எங்கும் கண்ணகி வழிபாட்டைத் தொடக்கிவிட்டான்.

இப் பத்தினித் தெய்வத்தை இளங்கோ தமது நாட்டுச்சூழலில் வைத்துப் பாடும் போது அவளுடைய பெயரைக் கூருது பல அடைமொழிகளால் வியந்து ஓதுகின்ருர். தொடிவளைத்தோழி, சோணுட்டார் பாவை, தடம்பெருங்கண்ணி, தண்புகார்ப்பாவை, பொற்ருெடி நங்கை, பூம்புகார்ப்பாவை என்பன அவர் வாக்கு. இனி கண்ணகிக் கெடுத்த ஆலயங்களைப் பத்தினிக்கோட்டம், பத்தினிகோயில், பத்தினிக் கடவுள், பத்தினிக்கல் என்ற பெயர்களிட்டு அழைக்கின்ருர்.

மேலும் கண்ணகி தன் நாயகனேடு கானகவேங்கைக் கீழாள் வானவர் வாழ்க்கை எய்தின இடம் மங்கள தேவியூர் (மங்களூர்) என இன்றும் வழங்கப்படுகின்றது. இங்குள்ள கோயிலை மங்களதேவி கோட்டம் என்றும் மங்களதேவி கோயில் என்றும் கூறுவர். ஏனைய கோயில்களைக் கண்ணகியம்மன் கோயில் என்பர். நம் நாட்டில் உள்ள பிரபலமான அம்மன் கோயில்களைச் சுட்டிபுரம் அம்மன், வற்ருப்பளை அம்மன், பன்றித்தலைச்சி அம்மன், பூநகரி அம்மன், புளியங்கூடல் அம்மன் என்று அழைப்பினும் இவை யெல்லாம் கண்ணகியம்மன் கோயில்களே என்பதை மறக்கக்கூடாது. சிங்கள நாட்டில் இருக்கும் கோயில்களைப் பத்தினி கோயில் என்றழைப்பர்.

இக்கோயில்களெல்லாம் அறக் கற்பினை அறைகூவுகின்றன என்னலாம். அக்காலத்தில் தமிழ்நாட்டில் பெண்களும் சிறப்பாக மதுரைமாநகர்ப் பெண்களும் கண்ணகியின் அறக்கற்பின் வெற்றியை மகிழ்ந்திருக்கின்றனர்.

'' சிலம்பின் வென்ற சேயிழை மங்கை
கொங்கைப் பூசல் கொடிதோ அன்று''

என்கின்றனர். சிலம்போடு சென்ற இச் சேயிழை நங்கை தேவி முன்னர் செஞ் சிலம்பெறிந்து வஞ்சினஞ் சாற்றிய மாபெரும் பத்தினி ஆகின்ருள். வஞ்சினங் கூறினுலும் அவள், கண்முன் மாபெரும் பத்தினியாகக் காட்சியளிக்கின்ருள்.

இப்படி உதாரணங்கள் பலவற்றை நாம் எடுத்துக்காட்டலாம். இந்தக் கற்புக் கடம் பூண்ட கண்ணகித் தெய்வம் ஒரு மாமணியாய் உலகிற் கோங்கிய திருமாமணி யாவாள். இவளை வணங்கி நாம் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்வோமாக.

குறிப்பு :—

இக்கதையின் பிரபல்யம் காரணமாகக் கிழக்கு மாகாணத்திலும் யாழ்ப்பாணத்திலும் கோவலன் கதை, கோவலன் காதை, கண்ணகிகதை, பத்தினிக்காதை, கண்ணகி வழக்குரைத்தது, சிலம்பு கூறியது என்று பல சிறு நூல்கள் தோன்றியுள்ளன. இவைபோன்று சிங்களத்திலும் பத்தினித் தெவியோ, பத்தினி கதா என்றும் சிறு நூல்கள் உள. இவை விழாக்காலங்களில் கண்ணகி கோயில்களில் பாடப்பட்டு வருகின்றன.

**கோவைவாணன்**

# கோப்பாய்

யாழ்ப்பாணத்துடன் மன்னார் மாதோட்டம் வன்னி முதலிய இடங்களையும் உள்ளடக்கிய தமிழரசாட்சி கி. பி. 16ஆம் நூற்றுண்டில் ஆண்ட சங்கிலியன் காலம்வரை நீடித்திருந்தது. கி. பி. 1505இல் இலங்கையை யடைந்த போர்த்துக்கீசர் தென்னிலங்கையின் பல பகுதிகளைப் பிடித்துத் தமதாட்சிக் குட்படுத்தியபோதும் யாழ்ப்பாண மண்ணில் காலடியெடுத்து வைக்க முடியாததொரு வலுவுடைய இராச்சியமாக யாழ்ப்பாண அரசு விளங்கியது. சங்கிலியனது உற்ற நண்பன்போல விளங்கிய காக்கை வன்னியனது நயவஞ்சகச் சூழ்ச்சியால் பறங்கியர் இலேசாகச் சங்கிலியனுக்கு விலங்கிட்டுச் சிறைக்கூடத்திலடைத்தனர். சங்கிலியன் சிறைக்கூடச் சுரங்கவழியாகத் தப்பி கோப்பாய்க் கோட்டைக்கு ஓடியதாகவும், மேலும் காக்கைவன்னியனது உதவியுடன் பறங்கியர் பின்தொடர்ந்து பெரும் படையுடன் கோப்பாய்க் கோட்டைக்கு வரவே சங்கிலியன் அறிந்து அங்கிருந்து தப்பி வன்னிக் கோட்டைக்குச் செல்லும்போது காக்கைவன்னியனது உதவியுடன் மிகவும் ஒடுக்கமான ஆனையிறவுப் பூசந்தியில்வைத்து, சங்கிலியனை அகப்படுத்தியதாகவும் சரித்திரமுண்டு.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் கோப்பாய்ச் சந்திக்கு வடபுறமாய் கோப்பாய்க் கோட்டை அமைந்திருந்தது. இன்றும் அவ்விடம் பழைய கோட்டை (Old Castle), கோட்டைவளவு என்னும் பெயர்களாலேயே வழங்கப்படுகின்றது. அதன் அயலிலுள்ள கோட்டைப் பனையும் குறித்த வளவின் தெற்குப்புறமாகவுள்ள குதியடிக் குளத்துக்கு அருகாற் செல்லும் கோட்டை வாய்க்காலும் குறித்த இடங்களை அகழும்போது எங்கணும் பரந்து காணப்படும் செங்கற் குவியல்களும் இன்னும் தமிழரசின் கோப்பாய்க் கோட்டையை நினைவுபடுத்தும் சின்னங்களா யமைந்துள்ளன. நல்லூர்க் கோட்டைக்கு யமுனு ஏரி நீச்சல் தடாகமாக இருந்திருக்கவேண்டும். சில வருடங்களுக்கு முன்னர் திருத்திக் கட்டுவதற்கு உடைக்கப்பட்ட குதியடிக் குளத்தின் தென்மேற்குப் பக்கத்தில் அரைசாந்துறுதியான கட்டினுள் ஆறடிவரை நீளமும் இரண்டடி அகலமும் கொண்ட குழியொன்று காணப்பட்டது. அக் குழியினுள் உக்கிய சேதனப்பொருட்கள் காணப்பட்டன. குறித்த நீச்சல் தடாகத்தின் காவலுக்காக பழைய வழக்கப்படி பலிகொடுக்கப்பட்டவரின் அடக்கம் அக் குழியினுள் வைத்துக் கட்டப்பட்டிருக்கலாம். நல்லூர்க் கோட்டையிருந்த சங்கிலி தோப்பு கோப்பாய்க் கோட்டை பற்றிச் சரித்திர அகழ்வாரார்ய்ச்சிக்காரர்கள் யாராவது கவனஞ் செலுத்தி சரித்திர ஆதாரங்களை வெளிப்படுத்த முனையவேண்டும்.

## கண்ணகை அம்மன் கோயில்

கஜபாகு மன்னன் இலங்கைக்குத் திரும்பும்போது கண்ணகி விக்கிரகங்கள் பலவும் கொண்டு மாதகலுக்கு அணித்தாயுள்ள திருவடிநிலையிலிறங்கி அனுரதபுரிக்கு வழி கொண்டு செல்லும்போது பெரும் படைகளுடன் ஆங்காங்கே தங்கிய மரமடர் சோலைகளில் கண்ணகி விக்கிரகங்களைத் தாபித்து நிவந்தங்களுமிட்டுச் சென்றதாகவும் சேரன்செங்குட்டுவன் என்னும் வரலாற்று நூல் கூறுகின்றது. இவ்வாறமைத்துச் சென்ற ஆலயங்களில் சுழிபுரம், அங்கணாக்கடவை, கோப்பாய் முதலான இடங்களிலுள்ள ஆலயங்களில் உள்ள விக்கிரக அமைப்புகளும் அனுரதபுரி இசிறுமுனி விகாரைக்கு அருகாமையில் அமைந்துள்ள பத்தினித் தெய்யோ ஆலய விக்கிரக அமைப்பும் ஒரேவிதமாக இருப்பதும் கவனிக்கத்தக்கது. திருவடிநிலைக்கும் அனுரதபுரிக்கும் இடையில் 1850 வருடங்களுக்கு முன்னர் தாபிக்கப்பட்டு இன்றும் வழிபாட்டிலுள்ள கோப்பாய் பலானை கண்ணகையம்மன் ஆலயம் எமது கிராமத்தின் புராதனத்தைப் பகரும் சான்றுக அமைந்துள்ளது.

## வடகோவைச் சபாபதி நாவலர்

எமது கிராமத்திற்குப் பெருமையளிக்கக்கூடியதான பெரும் புலவர்களில் தலையாயவர் வடகோவைச் சபாபதி நாவலர் அவர்களாவர். 1766இல் பிறந்த இவர் ஆரம்பக் கல்வியின்பின் நீர்வேலி சங்கர பண்டிதரிடம் வட மொழி தென்மொழி இரண்டையும் நன்றாகப் பயின்றவர். பின்னர் திருவாவடுதுறை ஆதீனத்தை அடைந்து ஸ்ரீ சுப்பிரமணியதேசிக சுவாமிகளிடம் அருளுபதேசம் பெற்று 12 வருடங்கள் ஞான நூல்களையும் மரபாற் கற்று வித்துவசிகாமணியாய் விளங்கினார். நாவலர் பட்டமும் பெற்றார். திருவாவடுதுறை ஆதீன வித்துவானாகப் பல வருடங்கள் தொடர்ந்திருந்து பல நூல்களை இயற்றியும் தென்னிந்தியாவின் பலபாகங்கட்கும் சென்று சொன்மாரி பொழிந்தும் பெரும்புகழ்கொண்டார்;நாவலரேறுபோன்ற விருதுகளையும் பெற்றார். சிதம்பர சபாநாத புராணம், சிவகர்ணாமிதம், சதுர்வேத தாற்பரிய சங்கிரகம், ஞானசூடாமணி, மாவையந்தாதி, வடகோவைச் செல்வவிநாயகர் இரட்டைமணிமாலை, நல்லூர் சுப்பிரமணியக்கடவுள் பதிகம் முதலிய நூல்களுள் திராவிடப்பிரகாசிகை என்னும் நூல் மிக விசேடமானது. தமிழ் இலக்கண இலக்கிய சரித்திர வரலாறுகளை யெல்லாம் திறம்பட எடுத்துரைப்பது இந் நூல். பண்டித பரீட்சைக்கும், B. A. பரீட்சைக்கும் பாடப் புத்தகமாக இந்நூல் இருந்தது. தமிழில் வெளிவந்த முதல் வரலாற்று நூல் இதுவேயாகும். இந் நூலை ஆதாரமாகக்கொண்டே பிற்காலத்தில் தென்மொழி வரலாறு, தமிழ் வரலாறு முதலிய நூல்கள் எழுதப்பட்டன. 1960 ஐப்பசி ஆறும் ஏழாம் திகதிகளில் கோப்பாய் வடக்கு ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோயில் கிழக்குவீதியில் நாவலருக்கு எடுத்த பெருவிழாவிற்குப் பிரதம பேச்சாளராக வருகைதந்த திருவாவடுதுறையாதீன வித்துவான் உயர்திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் தலைமையுரையின்போது ''ஒருவன் தன் கொள்கையிலிருந்தும் குலத்தொன்மையிலிருந்தும் விலகக்கூடாது. அவ்வாறு கலங்காது நிற்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குவதே சபாபதி நாவலர் கடைப்பிடித்த வாழ்வாகும்.'' என்றும், சபாபதி நாவலர் பிறந்தது ஞானபூமியாகிய இந் நாடாகவிருந்தாலும் அவர் வளர்ந்து பயன் பட்டது தமிழ்நாட்டிற்கேயாகும்.''—என்று குறிப்பிட்டது எமக்கெல்லாம்பெருமையளிப்பதொன்றாகும்.

## இருபாலைச் சேனாதிராச முதலியார்

கோப்பாயைச் சேர்ந்த இருபாலைச் சேனாதிராச முதலியார் ஒரு பெரும் வித்தகக் கவிஞர். அவரியற்றிய நூல்களுள் சிலேடைக் கருத்தமைந்த ஒரு செய்யுள் வருமாறு.

**திருவாரும் நல்லைநகர்ச்செவ்வேற் பெருமானார்**
**இருவாலைக்குயத்தியரோடுஇன்புற்றார்அம்மானை**
**இருபாலைக் குயத்தியரோடுஇன்புற்றார்ஆமாயின்**
**தருவாரோ சட்டிகுடம் சாறுவைக்க அம்மானை**
**தருவார்காண் சட்டிகுடம் சாறுவைக்கஅம்மானை**

இருவாலைக் குயத்தியரோடு சம்பந்தம் வைத்திருக்கின்ற திருவாரும் நல்லை நகர்ச் செவ்வேற் பெருமானார் சாறுவைக்க சட்டியும் குடமும் தருவாரோ —என்பது வெளிப்படைக் கருத்து. சட்டித் திதியிலே கும்ப மாதத்திலே கும்பம் (மாசி மாதம்) தற்போது ஆடியில் நடைபெறும் கொடியேற்றவிழா முன்னர் மாசியில் நடைபெற்றது. இரண்டு வாலைப் பெண்களாகிய வள்ளி தெய்வானையுடன் தொடர்புடைய செவ்வேற் பெருமானார் திருவிழாவின்போது அருள்பாலிப்பார் என்பது மறு கருத்து.

சேனாதிராச முதலியார் ஆறுமுக நாவலரின் தமிழ் ஆசிரியர். சேனாதிராச முதலியாரின் தொடர்பினாலேயே ஆறுமுக நாவலர் அவர்களால் கோப்பாய் நாவலர் பாடசாலை ஆரம்பிக்கப் பெற்றது.

## குருமணி வே. சிதம்பரப்பிள்ளை

சரவணபவானந்த வித்தியாசாலை ஸ்தாபகர்களில் ஒருவரான குருமணி வே. சிதம்பரப்பிள்ளை ஓர் வரகவி. காளமேகம்போன்று வசை பாடுவதிலும் வல்லவர். கல்லடி வேலுப்பிள்ளை அவர்களுடன் சொல்லடி பட்டு வழக்காடியவர். 1926இல் பாடசாலை

ஸ்தாபிதத்தை யொட்டிக் கையெழுத்துப் போடாத விளம்பரமொன்று வெளியாகிய போது வெளியிட்ட கவிகளிலொன்று:

**உன்றன் பெயருமிலை உன்றகப்பன் நாமமிலை**
**துன்றுநரிக் குட்டிபோல் துள்ளுகிறாய்—உன்றன்**
**மரபு சமயமேது மாதாவின் தன்மை**
**கரவொழுக்க மோசொல் கனிந்து. — என்பது.**

இவர் இவ்வாறு வசை பாடுவது மாத்திர மல்ல வாழ்த்தியும் பாடத் தெரிந்தவர்.

## தென்கோவைப் பண்டிதர் கந்தையா

இலங்கை அரசினர் ஆசிரியர்பயிற்சிக் கலாசாலையில் தமிழ்ப்பண்டிதராயிருந்த இவர் நிரம்பிய தமிழறிவுடையவர். சமய சாத்திரங்களை நன்கு கற்றுத் தேர்ந்தவர். சுன்னாகம் குமாரசாமிப்புலவரது நன்மாணாக் கர். சுவாமி விபுலானந்த அடிகளாரின் ஆசிரியர். புதுச்சேரியிலிருந்து இவரால் வெளிப்படுத்தப்பட்ட வித்தகம் எனும் பத் திரிகை நீண்டகாலம் வெளிவந்தது, இவர் இந்தியாவின் பல பாகங்கட்கும் சென்று தமிழும் சைவமும் பரப்பியவர். இவரின் பெரிய அளவிலான படமொன்று இராமநாத புரம் சேதுபதி மகாராசா அரண்மனையில் திரைநீக்கஞ் செய்துவைக்கப்பட்டது. அண் மைக்காலத்தில் சமஸ்தானங்கள் ஒழிக்கப் பட்டபோது இப்படம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுத் தற்போது அவரது வழித்தோன்றல் ஒருவரது கந்தரோடையி லுள்ள இல்லத்தில் பேணப்பட்டு வருகிறது.

மேற்கொண்டு சிந்திப்பதற்குரியதொன்று.

எமது கிராமத்திலுள்ள அப்பிளானை, கிளுவானை, மாக்கம்பரை முதலிய குறிச்சிப் பெயர்களும் தலம்பத்தை, உந்துவத்தை, களனியவத்தை, பத்தக்கச்சி, அம்பியவலை ஆகிய தோட்டப் பெயர்கள் பலவும் கருத்து விளங்காதனவாக—அல்லது வேற்றுமொழிப் பெயர்களாகவுள்ளன. ஏன்? எப்படி? எப் போது? இப்பெயர்கள் அமையப் பெற்றன என்பது ஆராயப்பட வேண்டியதே.

ஈற்றில் ஒரு விஷயம். பன்மொழிவல்லு னர் வண. சா. ஞானப்பிரகாசர், O. M. I, அவர்கள் உதவியுடன் ஆராய்ந்து க. வேலுப் பிள்ளை அவர்களால் வெளிப்படுத்தப்பட்ட ''வடமாகாணத்திலுள்ள இடப்பெயர்களின் வரலாறு'' எனும் நூலில் எமது கோப்பாய் பற்றிய குறிப்பு பின்வருமாறு காணப்படு கிறது.

இதன் சிங்கள ரூபம் கொயிப்பாய போலும். கொயிப் அல்லது கொவிய என் பது வேளாளரை. வேளாண் குடியிருப்பு என்பது பொருள்.

(நன்றி அறிவொளி 2)

*

**பிரதட்சிணம் செய்யும்போது தூபியின் நிழலை மிதித்துச் செல்லுதல் கூடாது. அப்பாற் செல்ல வேண்டுமாயின், நிழலின் ஐந்து கூறில் மூன்று கூறு நீக்கி ஏனைய இருகூறு வழியாகச் செல்லலாம். சுவாமியோடு அல்லது கும்பத்தோடு செல்லும்போது நிழலை மிதித்தல் குற்றமாகாது.**

— சிவாகமம்

உ

# கண்ணகி தேவியின் முதற் சமையல்

கோவலனுங் கண்ணகியும் மதுரைமா நகரில் சிலம்புவிற்பதற்காகக் கால் நடையாக நடந்து, சமணத் துறவு பூண்ட கவுந்தி அடிகளார் துணையுடன் மதுரை மதிற்புறத்தை அடைந்து விட்டார்கள். அங்குவந்த இடைச்சியர் தலைவியாகிய மாதரியைக் கண்டு, அவளது நல்லொழுக்கத்தைக் கருத்திற் கொண்டு, இவளிடத்திற் கண்ணகியை அடைக்கலமாகக் கொடுக்கலாம் என்று நிச்சயித்து, கண்ணகியின் கற்புமேம்பாட்டையும் மென்மைத் தன்மையையும் விளக்கும் வகையில்,

'என்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்
கற்புக்கடம் பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்''

என்று கூறி மாதரியிடம் அடைக்கலம் கொடுக்கிறார் கவுந்தி அம்மையார்.

இடைக்குலத் தலைவி மாதரியும் கண்ணகியை அன்புடன் ஏற்றுத், தன் மகள் ஐயையை அவளுக்குக் குற்றேவல் செய்யவைத்துச், செம்மண்பூசிய புது இல்லத்தில் தங்க வைத்து, புத்தம்புதிய மட்கலங்களையும் செந்நெல் அரிசியையும் சமையலுக்குக்கொடுத்து ஊக்கிவிடுகிறாள். கண்ணகியோ முன்னொரு போதும் சமையல் செய்து அறியாள். பெருங்குடி வணிகர்குலத் தலைவன் மாநாய்கன் மகளாய்ப் பிறந்து, செல்வத்தில் தவழ்ந்து தளர் நடை பயின்று, இன்பமேயன்றித் துன்பமொன்றறியாத பெருவாழ்வில் வளர்ந்தவள். பார்ப்பனத் தோழி தேவந்தி தலைமையில் பல தோழியர் ஊழியம் செய்ய வாழ்ந்தவள். அட்டில் பக்கம் எட்டியும் பார்த்திராள். இன்று சமையல் ஆரம்பித்துவிட்டாள்

சமையலுக்கு மாதரிகொடுத்த காய்கறிப் பதார்த்தங்கள் எவை தெரியுமா? பலாக்காய், வெள்ளரிக்காய், மாதுளங்கனி, வாழைக்கனி, பால், நெய்—இவைதான். எப்படியோ பொறுமையோடு கடமையே கண்ணுகக்கொண்டு தொடங்கி விட்டாள். வைக்கோல்தான் விறகு. மாதரிமகள் ஐயையும் நெருப்பை மூட்டி எரித்து உதவிசெய்தாள். ஒருவாறு சமையலை முடித்துவிட்டாள். சமைக்கும்பொழுது, முன் அனுபவமில்லாமையால் மெய்விரல் சிவந்தன; திருமுகம் வியர்த்தது; செங்கண்கள் சிவந்து நீர் சிந்தின.

கண்ணகியின் சமையற் கஷ்டம் இத்தனையையும் கோவலன் பார்த்துக் கொண்டுதான் இருந்தான். அவள் அகப்பையால் அடிசிலைக் கிளறும் பொழுது அவன் உள்ளத்திலும் தான் அவளுக்கிழைத்த குற்றங்களும் கிளறப்பட்டன. அவள் நெருப்பைக் கண்ணீர் சிந்திச் சிந்தி ஊதியபொழுது அவன் உள்ளுணர்ச்சிகளும் ஊதப்பட்டன. அவள் ஊதிய அடுப்பிலிருந்து வைக்கோற் புகை கிளம்பிய பொழுது, அவன் உள்ளத்திருந்தும் பச்சாத்தாப வேதனைப்புகை கிளம்பியது. அதனுல் அவன் ஒரு புது மனிதனுக மாறினன். அவனை அப்படி மாற்றிய மந்திரமும் தந்திரமும் கண்ணகியின் சமையல் ஒன்றுதான்.

சமையல் முடிந்தது. பனை ஓலையால் செய்த புதுத் தடுக்கில் கோவலனை இருக்கச் செய்து, அவன் கால்களைத் தண்ணீரால் தெளித்து, தன்கையால் தடவித் துடைத்து விடுகிறாள். இச்சம்பவத்தை இளங்கோ அடிகள் எப்படிக் கற்பனை செய்கிறார் பாருங்கள். கண்ணகியின் சமையற் சிரமத்தைப் பார்த்த பூமாதேவியும் அதிர்ச்சியுற்று மயங்கினதாகவும், அவளது மயக்கத்தைத் தெளிவிக்க கண்ணகி தண்ணீர் தெளித்ததாகவும் கூறுகிறார்.

''மண்ணக மடந்தையை மயக்கொழிப்
பனள்போற்
தண்ணீர் தெளித்துத் தன்கையால் தடவி''

என்கிறது சிலப்பதிகாரம். மேலும் அவள் புதுவாழைக் குருத்தொன்றை விரித்து வைத்து, ''அமுதம் உண்க அடிகள் ஈங்கு'' என்று மென்சொல்லால் பண்போடும் பணி

வோடும் அழைக்கிறுள் கணவனே. சாப்பாடு நடக்கிறது.

மாதரியும் ஐயையும் ஏனைய இடைச் சேரிப் பெண்களும் ஒட்டிநின்று, கண்ணகி தன் கணவனுக்கு உணவு பரிமாறும் பண்பமை பாங்கையும், கோவலன் உணவு அருந்துவதையும் வேடிக்கை பார்க்கிருர்கள்.

''ஆயர் பாடியில் அசோதைபெற் றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ
நல்லமு துண்ணும் நம்பி.''

''யசோதா பிராட்டி அன்று பெற்றெடுத்த அந்த மாயக் கிருஷ்ணன் தானே, இன்று இங்கு இப்படி இருந்து உணவருந்தும் இந்தக் கோவலன்'' என்று கிசுகிசுக்கிருர்கள் சில ஆய்ச்சியர்.

''தொழுனை ஆற்றினுள் தூமணி வண்ணனை
விழுமந் தீர்த்த விளக்குக்கொல்''

''ஆகா, அந்த மாயக் கண்ணனை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி, இன்பம் ஊட்டிய நப்பின்னைப் பிராட்டிதானே இந்தக் கண்ணகி தேவி'' என்று வேறு சில பெண்கள் பேசிக் கொண்டனர்.

சாப்பாடு முடிந்ததும் வெற்றிலைச் சுருளைத் தன் கணவனுக்குக் கையளித்தாள் கண்ணகி. வெற்றிலையை மென்றுகொண்டே தான் விட்ட பழைய பிழைகளையும் மெல்ல மெல்ல மென்றுகொண்டான் கோவலன். தன் உள்ளத்தில் அலைமோதிக்கொண்டிருந்த உணர்ச்சிகளை அவனுல் அடக்கிக்கொள்ள முடியவில்லை. அதனுல், அவளை அருகணைத்து மனந்திறந்து,

''இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்
சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையுஞ் செய்தேன்''

என்று மன்னிப்புக் கோரும் வகையில் தன் குற்றத்தை ஒப்புக்கொள்கின்றுன். அத்துடன் நில்லாது, அவளின் கற்புக்கடம் பூண்ட திறத்தை உளமாரப் பாராட்டுகிருன். எப்படி என்பதையும் பார்ப்போம்.

எல்லாக் கணவன்மாரும் தங்கள் புது மண வாழ்வில் மனைவிமாரைப் பொன் என்றும், மணி என்றும், மலரென்றும், தேனென்றும், பாகென்றும், கனி என்றும், அமிழ்தென்றும், இன்னும் என்னென்னவோ சொல்லிப் பாராட்டுவது உலகவழக்கம். அதுபோலத்தான் கோவலனும் அன்ருெரு நாள் மணவறைப் பந்தலில் அவள் கைத்தலம் பற்றி மனையறம் படுத்தஞான்று,

''மாசறு பொன்னே, வலம்புரி முத்தே,
காசறு விரையே, கரும்பே, தேனே,
அரும்பெறற் பாவாய், ஆருயிர் மருந்தே,
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே,
மலையிடைப் பிறவா மணியே என்கோ,
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ,
யாழிடைப் பிறவா இசையே என்கோ,
தாழிருங் கூந்தல் தையால் நின்னை''

என்று கூறிய அதேவாயால், இன்று புது மனிதனுகிப் புத்துணர்வுடன்,

''நாணமும் மடனும் நல்லோ ரேத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக
என்னொடு போந்தீங் கென்துயர் களைந்த
பொன்னே, கொடியே, புனைபூங் கோதாய்,
நாணின் பாவாய், நீணில விளக்கே,
கற்பின் கொழுந்தே, பொற்பின் செல்வி!

என்று வாயார நாவார மனமாரப் புகழ்கிறுன் பாருங்கள்.

கணவன்மார் விடும் பிழைகளை எதிர்வாதத்தாலும் வன்சொல்லாலும் வன்செயலாலும் மாற்றலாம் என்ற விபரீத விளைவுகளைத் தரும் போக்குகளை விடுத்து, இன்சொல், இன்செயல், இன்ப அமுதூட்டல் ஆகிய சாலச் சிறந்த கருவிகளையே மகளிர் கையாண்டால் இல்லறம் சிறந்து செழிக்கும் என்பதைத் தாய்மாருக்கும் குடும்பப் பெண்களுக்கும் அகில உலகிற்கும் தன் முதற் சமையல் மூலம் காட்டிவைக்கிருள் கற்புக் கடம்பூண்ட இக் கண்ணகித் தெய்வம்.

இணுவைப்பதி
**சபா. ஆனந்தர்**

# சிவசக்தி வழிபாடு

" பூசனை புரிந்த பின்னர்ப்
புவனமீன் றுள்தன் கையைப்
பாசம தகன்ற தொல்சீர்ப்
பரஞ்சுடர் கரத்துள் வைத்து
நேசமொ டளித்தே னென்று
நெடுமறை மனுக்கள் கூறி
வாசநல் லுதக முய்த்தான்
மருகனென் றவனை யுன்னி "

என்ற பாடல் சுவாமி திருக்கலியாணத்தில் வருகிறது. இமயமலை அரசன், தன் புதல்வியாராகிய உமாதேவியாரின் கையைப் பரம் பொருளாகிய பரமசிவத்தின் கையுள் வைத்துத்தத்தம்செய்கின்றான். சுவாமி திருக் கலியாணத்துக்குத் தேவர்கள் முனிவர்கள் யாவரும் சென்று பார்த்துப் பரவசமுற்றனர். இத் திருமணத்தினால் வடதிசை சரியத் தென் திசை நோக்கிச் சென்று அசலத்தை அசையாமல் சரியாமல் நிலைப்படுத்தியவர் அகத்தியர்.

சுவாமி திருக்கலியாணம் சிவசக்தி சம்பந்தத்தை உலகுக்கு எடுத்துக் காட்டுகின்றது. திருவருட்சக்தி, உயிர்களுக்குச் சிவத்தைக் காட்டி ஆன்மாவை நல்வழி நோக்கச் செய்கின்றாள்.

"வாசி யருளியவை வாழ்விக்கும் மற்றதுவே
ஆசில் உருவமுமா மங்கு"

என்பது திருவருட்பயன்.

சக்தி என்றால் வல்லமை என்பது பொருள்.

"அருளது சக்தி யாகும்
அரன்றனக் கருளை யின்றித்
தெருள்சிவ மில்லை யந்தச்
சிவமின்றிச் சக்தி யில்லை
மருளினை யருளா லோட்டி
மன்னுயிர்க் களிப்பன் கண்கட்
கிருளினை யொளியா லோட்டு
மிரவியைப் போல வீசன்.''

திருவருள் சக்தி மயமானது. சிவமின்றிச் சக்தியில்லை. சக்தியின்றிச் சிவமில்லை' சூரியன் இருளைப் போக்கி ஒளியைக் கொடுப்பது போல இறைவனும் மல இருளைப் போக்கித் திருவருளாகிய ஒளியைக் கொடுக்கின்றான்.

சிவனின் வேறாகாத திருவருட்சக்தியின் தெய்வாம்சங்கள் பற்றித் தெய்வத் திருமூலர் திருமந்திரம் வாயிலாகக் கூறியிருப்பது வியக்கத்தக்க வகையில் அமைந்துள்ளது.

''திரிபுரை சுந்தரி அந்தரி சிந்துரப்
பரிபுரை நாரணி யாம்பல வன்னத்தி
இருள்புரை ஈசி மனோன்மணி யென்ன
வருபல வாய்நிற்கு மாமாது தானே.''

திருக்கடவூர் அபிராமி அம்மையின் அருள்பெற்ற தவசிரேட்டர் அபிராமிப் பட்டர். அபிராமிப்பட்டர் பொருட்டுப் பூர்வபக்கப் பிரதமையில் பூரணசந்திரனைப் பிரகாசிக்க வைத்தவர் சிவசக்தி. இதனால் அபிராமிப் பட்டரையும் அவர் சீர்மையையும் சரபோஜி மகாராசா உள்ளிட்ட பலரும் போற்றிப் புகழ்ந்தனர். அபிராமி அம்மையை மனமொழி மெய்யினால் வழிபடுகிறார் அபிராமிப்பட்டர்.

" ஆத்தாளை யெங்க ளபிராம
வல்லியை யண்டமெலாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத்
தாளைப் புவியடங்கக்
காத்தாளை யங்குச பாசாங்
குசமுங் கரும்புமங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு
வார்க்கொரு தீங்கில்லையே.''

அருள் கைவந்தவர்கள் மெய்ப்பொருளாகிய திருவருளை முன்னிட்டுக் கொண்டு திருவருளின் குறிப்பை அறிந்து அதன் வழியில் நடப்பார்கள். திருவருளின் குறிப்பை அறியாது ஒன்றும் செய்வதில்லை. அவர்கள் பேயொன்றுந்தன்மை பிறந்தவர்கள். திருவருட்சக்தியின் வழி நடப்பவர்கள்.

இறைவனின் வேறாகாத இறைவி புண்ணிய தலங்கள் தோறும் வெவ்வேறு பெயர்களைப் பெறுகின்றாள். சிதம்பரத்தில் நடராஜ மூர்த்தியோடு வீற்றிருக்கையில் சிவகாமி என்று பெயர் பெறுகிறார். காஞ்சியில் ஏகாம்பரநாதருக்குப் பக்கத்தில் காமாட்சி, காசியில் விசாலாட்சி, மதுரையில் மீனாட்சி, திருக்கேதீசுவரத்தில் கௌரியம்பாள், திருக்கோணேசுவரத்தில் மாதுமையாள், நகுலேசுவரத்தில் நகுலாம்பிகை, வண்ணை வைத்தீசுவரன் கோயிலில் தையல்நாயகி என்றெல்லாம் அம்மையின் திருநாமங்கள் வழங்கப்படுகின்றன.

சமய குரவர்களில் முதல்வரான ஞான சம்பந்தப் பெருமானை அபரசுப்பிரமணியர் என்று சான்றோர்கள் கூறுவர். மூன்று வயசிலேயே சிவசக்தியைத் தரிசிக்கும் பேறு பெற்றவர் சம்பந்தப்பெருமான். சிவபெருமான் இடபாரூடராகக் காட்சியளித்தபோது முதன் முதலிற் சம்பந்தப் பெருமான் தோட்டையே கண்டார். எனவேதான் "தோடுடைய செவியன்" என்று திருவாய்மலர்ந்தருளினார். தோடுடைய செவியன் உலகில் ஒரேயொருவர்தான். அவரே சிவபெருமான். வலது செவியில் குண்டலத்தையும் இடது செவியில் தோட்டையும் அணிந்த பெருமை சிவபெருமானுக்குண்டு. தோடு உமாதேவியார் பாகத்துக்கு–இடதுபாகத்துக்கு உரியது. தோடுடைய செவியன் என்று சம்பந்தப் பெருமான் அருளியதில் இருந்து உலக மாதாவாகிய சக்தியையே முதலிற் சம்பந்தப் பெருமான் தரிசித்திருத்தல் வேண்டும். முதலிற் குழந்தை தாயைத் தானே அறியும். திருவைந்தெழுத்தின் பெருமையை உலகு, சம்பந்தக் குழந்தைமூலம் அறியும் வண்ணமே சர்வலோக நாயகியாரான உமையம்மையார் திருமுலைப்பாலைத் திருஞான சம்பந்தருக்கு ஊட்டினார்.

பரந்தெழுந்த சமண்முதலாம்
பரசமய விருணீங்கச்
சிரந்தழுவு சைவநெறித்
திருநீற்றின் ஒளிவிளங்க
அரந்தைகெடப் புகலியர்கோன்
அமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம
சுந்தரிபூங் கழல்போற்றி.

ஞான சம்பந்தப் பெருமான் தமது திருவருட்பாடல்களில் சிவசக்தியைக் குறிப்பிடும் பாங்கே திருவருள்மயமானது.

"வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர்"
"பிடியன நடையாள் பெய்வளை மடந்தை"
"கனித்திளந் துவர்வாய்க் காரிகை"

என்றெல்லாம் கோணேசநாதரை வாழ்த்தி வழிபடும்போது சிவசக்தியின் உயர்வற உயர்ந்த நிலையைக் காட்டுகின்றார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கேதீசுவரப் பதிகத்தில்,

"படவேரிடை மடவாள்"
"பங்கஞ் செய்த மடவாள்"
"பானத்துறு மொழியாள்"
"பட்டவரி நுதலாள்"

என்று உமையின் சிறப்பை எடுத்து உரைக்கின்றார். திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாரூர் தியாகேசப் பெருமானை வழிபடும்போது,

"மலைவளர்த்த மடமங்கை பாகத்தான்"
என்கின்றார்.

அரிமர்த்தன பாண்டியன் வேண்டுகோளின்படி குதிரைகொள்ளச் சென்ற வாதவூரர் மதுரையில் மீனாட்சி சமேதரான சொக்கலிங்கப் பெருமானை வழிபட்டுப் பரிவாரம் புடைசூழத் திருப்பெருந்துறையை நோக்கி நடந்தார். வாசி வாங்கச் சென்றவருக்கு அச்செலவு வாசியாய் விட்டது.

நாற்பத்தொன்பது கோடி பொன்னையும் குதிரை வாங்குவதிற் செலவிடாது சிவதருமத்தின் பொருட்டே செலவிட்டார். அரிமர்த்தன பாண்டியனின் விருப்பப்படி மாணிக்கவாசகர் குதிரை வாங்கச் சென்றவராயினும் பூர்வ புண்ணியத் தொடர்பினால் சென்றவழி மாறியொரு தெய்வவழி செல்வாராயினர். மீனாக்ஷியம்மை திருவருட்குறிப்பு மாணிக்கவாசகரைத் தெய்வ வழிக்கு இட்டுச்

சென்றது. குருந்த மரநிழலில் மாணிக்கவாசகரை ஆள்தல் பார்த்திருந்தார் சிவபெருமான். ''ஒண்டொடி பங்கின னிருப்ப விருப்பாலெய்தி யுடனுரைத்துச் சிவஞான முணர்வார்'' என்கிறது வாதவூரடிகள் புராணம், ஒண்டொடி சிவசக்தி. 'அம்மையே அப்பா'. என்று மணிவாசகனாரும் முதலில் அம்மையைத்தானே அழைத்தார். மணிவாசகரை நெறிப்படுத்திய மீனாக்ஷியம்மையின் அருட்பிரபாவங்களைக் குமரகுருபரர் கூறும்பாங்கே தெய்வீகமானது.

தொடுக்கும் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்கும் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்ற பெரு
வாழ்வே வருக வருகவே.

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் வருகைப் பருவத்தில் குமரகுருபரர் அழகொழுகப் பாடிய இப்பாடலில் ''மலையத்துவசன் பெற்ற பெருவாழ்வு'' என்று ஒரு தொடர் வருகின்றது.

மலயத்துவசன் சிவதரிசனஞ் செய்பவன். மனைவி காஞ்சனமாலையும் அப்படியே. எல்லாச் செல்வங்களும் பெற்று இருந்தும் புத்திரப்பேறு இல்லாமையால், சிவன் உமையை வணங்கிப் பல யாகங்கள் செய்தனர். உமையம்மையார் ஓமகுண்டத்தில் மூன்று முலைகளோடு கூடிய பெண் குழந்தையாய்த் தோன்றினார். காஞ்சனமாலை கட்டியணைத்து முத்தமிட்டாள். தடாதகைப்பிராட்டி என்று குழந்தைக்கு நாமகரணமுஞ் சூட்டப்பட்டது. மதுரை மீனாக்ஷியம்மையாரே மலயத்துவசன் காஞ்சனமாலை தம்பதிகள் பொருட்டு தடாதகைப் பிராட்டியாராயவதரித்த செய்தியைத் திருவிளையாடல் செப்புகின்றது.

சிவனுக்குரிய விரதங்களுட் சிவராத்திரி விரதம் எவ்வாறு மகிமை வாய்ந்ததோ, அவ்வாறு சக்திக்கு உன்னதமான விரதம் நவராத்திரி விரதம். இவ்வுலக வாழ்க்கைக்கு வேண்டிய வீரம், செல்வம், கல்வி என்பன வற்றைத் துர்க்கை, இலக்குமி, சரசுவதி என்ற வடிவங்களில் சிவசக்தி தந்து அருளுகின்றார்.

நவராத்திரியைப் போலச் சக்திக்குரிய இன்னொரு விசேட தினம் ஆடிப்பூரமாகும். ஆடிப்பூர உற்சவம் அம்பாள் ஆலயங்களில் நடைபெறுவது வழக்கம். பூப்படைந்த ஒரு பெண்ணுக்கு நமது இல்லத்தில் மங்கல நீராட்டும் வைபவத்தை எவ்வாறு நடத்த வேண்டும் என்பதற்கு முன்மாதிரிகையாகவே ஆடிப்பூர உற்சவம் அம்பாள் திரு ஆலயங்களில் நிகழ்கின்றது. பூரத்துக்கு முதல் நாள் மகம். மகநட்சத்திரத்திலன்று ஆடிப்பூர விழாவின் ஆரம்பகிரியைகளைத் தொடங்கலாம் என்று காரணாகமம் செப்புகின்றது. பாலிகைகளைப் போட்டுக் கிரியைகளை ஆரம்பிக்கலாம். அம்பாளுக்குப் பலவித அபிஷேகங்களையுஞ் செய்து, வெண்மையான உடையை உடுத்தி, பலவர்ண மாலைகளால் அலங்கரித்து வழிபடலாம். அம்பிகைக்கு எடுக்கும் ஆடிப்பூரவிழா, பெண்கள் குலம் உய்ய-ஏன் ஆன்மவர்க்கமே உய்திபெற எடுக்கும் விழாவாகும். உற்சவங்கள் நடைபெறும் அம்பாள் ஆலயங்களில், ஆடிப்பூரத்திலன்று தீர்த்தம் இடம் பெறுவதும் உண்டு.

முருகப் பெருமானுக்குப் பால் கொடுத்த இயக்கப் பெண்கள் அறுவரும் விபூதி உருத்திராக்கம் தரித்து, திருக்கைலாசமலையில் ஆலமர நீழலில் அமர்ந்திருந்த சிவபெருமான் திருமுன் சென்று, அட்டமகா சித்திகளை உபதேசித்து அருளும்படி வேண்டினர். சிவபெருமான் தமது திருக்கரத்தினாலே உமாதேவியாரைச் சுட்டிக்காட்டி 'இப்பார்ப்பதி எங்கும் நிறைந்த பராசக்தியும் மகேசையுமாக உள்ளவர். இவளை நீங்கள் சிந்தித்தீர்களாயின் அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராப்தி,

பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்கின்ற அட்ட மகாசித்திகளையும் உங்களுக்குத் தந்தருளுவார் என்று திருவாய்மலர்ந்தருளினர். இயக்கியர்கள் ஆறுபேரும் ஆயிரம் வருடங்கள் கருங்கல்லாய்க் கிடந்து, சோமசுந்தரக்கடவுளின் திருக்காட்சியினல் சாபவிமோசனமும் பெற்று உமாதேவியாரைத் தியானிக்கும் தியான பலத்தினலே அட்டமகா சித்திகளையும் பயின்றனர் என்று கூறுகின்றது திருவிளையாடல்.

சிவசக்தியை மெய்யன்புடன் வழிபடுபவர்கள் சிவலோகம் அடைவார்கள் என்பதில் ஐயமேயில்லை.

## சக்தி தோத்திரம்

கரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
யுத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை யெடுத்தாண்ட
அங்கயற்க ணெம்பி ராட்டி
அரும்புமிள நகைபோற்றி யாரணநூ
புரஞ்சிலம்பு மடிகள் போற்றி.

## அருணசலம் பஞ்சாட்சரம்

"நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின் ; பாடிப் பணிமின் ; பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே."

— திருமந்திரம்

# புகழ்பெற்ற தலம் இது

நினக்குரிய வழிபாட்டுத் தலம்பலவும் இலங்கையினில்
நிறுவ வேண்டி
தனக்குரிய உரிமையுடன் கஜபாகு மன்னனவன்
எடுத்த கோயில்
அனைத்தினைப்போல் புகழ்பெற்ற தலமிதென அறிஞர்பலர்
அறைகின் றூரால்
நினைத்தொழுதோம் பவமகற்றி அருள்கவெனக் குடமுழுக்கின்
றெடுக்கின் றேமே.

## அருள்வீர் தாயே


சீரார்ந்த வடகோவை வளஞ்செறிந்த பதியதனிற்
கோயில் கொண்ட
ஏரார்ந்த கண்ணகையம் பாளருளை வேண்டியின்று
மக்கள் கூடி
பேரார்ந்த குடமுழுக்கு விழாவினையே எடுத்துள்ளார்
பெரியோர் அன்பு
நேரார்ந்த நன்னெறியில் நிலைபெறவே போற்றுகின்றூர்
அருள்வீர் தாயே.

ச. வேலாயுதம்பிள்ளை

காலையிற் செய்யும் பிரதட்சிணம் நோயை நீக்கும். பகற் பிரதட்சிணம் விருப்பத்தை நிறைவேற்றும். மாலைப் பிரதட்சிணம் பாவங்களை அகற்றும். அர்த்தசாமப் பிரதட்சிணம் முத்தியளிக்கும்.


—சிவாகமம்

## மூலஸ்தான ஸ்தூபியிற் சில காட்சிகள்





1. கோவலன், கண்ணகி தீவலஞ் செய்தல்.





2. இந்திர விழாவில் மாதவி யாழ் வாசித்தல்.

3. கண்ணகி கோவலனிடம் சிலம்பு கொடுத்தல்.

4. கண்ணகி மாதரியின்
வீடு செல்லுதல்

5. கோவலன் கொலையுண்டதை
மாதரி கண்ணகிக்குக் கூறுதல்.



6. கண்ணகி தன் கணவன் கள்வனல்லன் என்பதைப் பாண்டியன்முன்
சிலம்பை உடைத்து மாணிக்கப்பரல் காட்டி நிரூபித்தல்.

# கிழக்கிலங்கையில் கண்ணகை வழிபாடு

கயவாகுவேந்தன் காலந்தொட்டு கண்ணகை வழிபாடு இலங்கையின் எல்லாப் பகுதியிலும் பரம்பியிருந்தது. தமிழ்ப்பகுதிகளில் தனிப்பட்ட கண்ணகை கோயில்கள் போலச் சிங்களப் பகுதிகளில் இல்லாவிட்டாலும் ஏறத்தாழ எல்லாப் பன்சாலைகளிலும் பத்தினித் தெய்வத்திற்கு ஓர் சிறு கோயில் அமைக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கம் தொடர்ந்து வருகின்றது.

கிழக்கிலங்கையிலோ என்றால் கண்ணகைக்கு ஒவ்வொரு கிராமத்திலும் ஓர் தனிக் கோயில் இருக்கும். கற்பின் திறன் இங்கேதான் ஆதியிலிருந்து உணரப்பட்டு வருகின்றது. எனினும் துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி ஆகிய தெய்வங்களுக்கு மந்திரங்களிருப்பதுபோலக் கண்ணகைக்கெனப் பிரத்தியேகமான மந்திரங்கள் இல்லை. ஆயினும் இந்த மந்திரங்களை ஓதுவதுண்டு. கிழக்கிலங்கையில் கண்ணகைக்குக் கொடியேற்றிப் பெருந்திருவிழாக்கள் நடாத்துவதில்லை. யாழ்ப்பாணத்திலும் பெரும்பாலும் அப்படியேயாயினும் புறனடையாக நான்கு ஐந்து கோயில்களில் அப்படியும் நடக்கின்றது. வேறும் இரண்டொரு கோயில்களில் அலங்கார உற்சவம் நடக்கின்றது. மட்டக்களப்புப் பகுதியில் காரைதீவுக் கண்ணகையம்மன் கோயிலில் மட்டும் அலங்கார உற்சவம் நடக்கின்றது. இங்கேதான் சுவாமி விபுலானந்தர் தம் இளம்பராயத்தில் கண்ணகையைக் குல தெய்வமாகக்கொண்டு வழிபட்டுவந்தார்.

யாழ்ப்பாணம் மட்டுவில் கண்ணகையம்மன்கோயிலில் மட்டுமே சங்காபிஷேகமும் அதன்பின் தண்டிகைத் திருவிழாவும் நடப்பதுண்டு. கோயிற் பிரதிட்டைதின அபிஷேகங்கள் பன்றித்தலைச்சி அம்மன் உட்படப் பல கோயில்களில் வருடாவருடம் நடக்கின்றன.

இவற்றுளெல்லாம் கண்ணகைக்குச் சிறப்பானவை பொங்கலும் குளிர்ச்சியுமே. அதுவும் வைகாசி விசாக நாளில் பொங்குவதே அதிமேன்மையும் பலனும் தருவது. பொங்கலும் குளிர்ச்சியும் நடக்கும் கிழக்கிலங்கைக் கண்ணகை கோயில்கள்; வாழைச்சேனை, கோயிற்போறதீவு, அக்கரைப்பற்று, ஆரையம்பதி, புதுக்குடியிருப்பு, கோட்டைக் கல்லாறு, அமிர்தகழி, மகிழடித்தீவு, சத்துருகொண்டான், தாழங்குடா, கழுவன்கேணி, கற்குடா, வீரமுனை, தம்பிலுவில், சம்புக்களி, தம்பன்கடவை, வந்தாறுமூலை, ஈச்சந்தீவு, கன்னன்குடா, எருவில், செட்டிபாளையம், கல்முனை, மாவடிச்சேனை இவைபோன்று இன்னும் பல. இவை நாம் கிழக்கிலங்கையில் 1950—55இல் வாழும்போது கண்டவை.

கிழக்கிலங்கைக்கு அடுத்தபடியாக வன்னிப்பகுதியிலும் கண்ணகைக்குக் கோயிலெடுத்துப் பொங்கலுடன் வணக்கஞ் செலுத்தி வருகிறார்கள்.

தென்னிலங்கையில் நுவரெலி, கம்பளை, கறுப்பனை, முகத்துவாரமாகிய இடங்களில் கண்ணகைக்குக் கோயில்கள் உண்டு. கண்டிப் பெரகராவில் பங்குபற்றும் கண்டிப் பத்தினித் தெய்வம் அங்கே பெருங்கோயில் கொண்டிருக்கின்றது. இது வற்றாப்பளைக் கோயிலுக்குச் சமானமாகவும் கருதக்கூடியது. மலைப்பிரதேசமாக இருப்பதால் இடவசதி குன்றியபோதிலும் விசாலமாகவும், விலாசமாகவும் எழுந்தருளியிருக்கின்றது.

வன்னிநாட்டிலிருந்து தலைவர் அரிதிற் பெற்றுத்தந்த ஏட்டுப் பிரதியொன்றில் நமது கோயிலும் இடம்பெறுகின்றதனைக் காணலாம்.

உடுவிலில் வந்திருந்து
உத்தமியாள் வழிநடந்து
அச்செழுவில் வந்திருந்து
ஆயிழையாள் வழிநடந்து
இணுவிலில் வந்திருந்து
ஏந்திழையாள் வழிநடந்து
ஏழாலைதனில் வந்து
ஈஸ்பரியாள் வழிநடந்து
ஊரெழுவில் வந்திருந்து
உரும்பராய் தனில்வந்து
கற்புலமதனில் வந்து
களையாறி வீற்றிருந்து
**கோப்பாயில் வந்திருந்து**
கோவலனார் தேவியவள்
வாய்க்கால் தரவைவந்து
மாதுநல்லாள் அவளிருந்து
...... ... ....... .. ..........
என்று இப்படிச் செல்லும்.

அ. வி. ம.

பலாலி கண்ணகையம்மன் கோயிலில்
பிரதிவருடமும் பங்குனித் திங்கட்கிழமைகள் தோறும்
கோவலனார் கதை பாடிவந்தவர் வழிவந்த முதியவரான
நாகமுத்து கந்தர் அவர்களிடமிருந்து
வாய்மொழி மூலம் பெற்ற

**பழைய பாடலொன்று.**

*

அற்புதக் கலையோடு அங்கணு மெய்உடுவில்
ஆனந்த தெல்லி தோதறை
அச்செழு கோப்பாய்ப் பதிபன்றித் தலைச்சி
அறத்தி விளுவலை புதுக்குளம்
பொற்புறும் கச்சாய் புகழுறும் போக்கட்டி
பொறிக்கடவை திரியாய் கோயில்வயல்
வற்றுத பழைதன்னில் உறைபவளே
ஆச்சியரே காத்தருள் வாய்.

** ஆயுளையும் ஆரோக்கியத்தையும் வளர்ப்பதும்,
செல்வத்தையும் புகழையும் தருவதும், பெரும்
புண்ணியச் செயலுமாகிய, சங்காபிஷேகமானது,
மண்டலாபிஷேகத்தில் செய்யப்படவேண்டும்.**

— சிவாகமம்

௳

# சிலப்பதிகாரம் துன்பமாலை 47-53

## பாட்டும் உரையும்

''வாய்வதின் வந்த குரவையின் வந்தீண்டும்
ஆய மடமகளிர் எல்லீரும் கேண்மின்
ஆய மடமகளிர் எல்லீரும் கேட்டைக்க
பாய்திரை வேலிப் படுபொருள் நீயறிதி
காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என்கணவன்
கள்வனோ அல்லன் கருங்கயற்கண் மாதராய்
ஒள்ளெரி உண்ணுமிவ் வூரென்ற தொருகுரல்''.

### உரை

மேல்வரும் தீமை நீங்குதற்பொருட்டு எடுத்த குரவைக் கூத்தினுள் வந்து திரண்ட இடைக்குலப் பெண்டிர் யாவரும் கேட்க, காய்கின்ற கதிர்களையுடைய செல்வனே, பரந்த அலைகளையுடைய கடலை வேலியாகவுடைய இவ்வுலகத்துத் தோன்றும் பொருள்கள் யாவற்றையும் நீயறிவாய். ஆகலான் நீயறிய என் கணவன் கள்வனோ சொல்லென்றாள் ; என்றவட்கு ஓர் அசரீரி, கரிய கயல்போலும் கண்களையுடைய மாதே, நின்கணவன் கள்வன் அல்லன். அவனைக் கள்வனென்ற இவ்வூரினை விளக்கம் பொருந்திய தீயுண்ணும் என்று கூறிற்று என்க.

# சிலப்பதிகாரம் வழக்குரைகாதை 66-81

நற்றிறம் படராக் கொற்கை வேந்தே
என்காற்சிலம்பு மணியுடை அரியே, எனத்
தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி
யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே
தருகெனத் தந்து தான்முன் வைப்பக்
கண்ணகி அணிமணிக் காற்சிலம் புடைப்ப
மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே, மணிகண்டு
தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்
பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் ஆயுளென
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கி
கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்று
இணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி.

### உரை

அறநெறிச் செல்லாத கொற்கை நகரத்து அரசனே என்காற்கு அணியாம் பொன்னாலாகிய சிலம்பினுடைய பரல் மாணிக்கமே என்று கூற, இக்கண்ணகி கூறியது செவ்விதாய நல்ல மொழியே யாகும், எம்முடையது முத்தே எனத் தம்முட் கருதி, அச்சிலம்பினைக் கொண்டு வருக என ஏவலரிடைக் கூறி வருவித்துத் தானே அதனைக் கண்ணகியின் முன்பு வைத்தனனாக, கண்ணகி தானணியும் அழகிய அச்சிலம்பினை உடைத்தகாலை அதனின்றும் எழுந்த மாணிக்கப் பரல் பாண்டியனுடைய முகத்திடைத் தெறிந்து வீழ்ந்தது. தாழ்வுற்ற குடையனாய் சோர்வுற்ற செங்கோலனாய் பொற்றொழில் செய்யும் கொல்லனுடைய பொய்யுரை கேட்டு முறை பிழைத்த யான் ஓர் அரசனாவேனோ, ஆகேன்; யானே கள்வன். மக்கட் கூட்டத்தினைப் புரக்கிற பாண்டியனுடைய ஆட்சி என்னை முதலாகக் கொண்டு தவறுற்றது. என்வாழ்நாள் அழிவுறுவதாக, எனச் சொல்லி அரசன் மயக்கமுற்று வீழ்ந்து இறந்தான். பாண்டியனுடைய மனைவி கோப்பெருந்தேவி உள்ளம் குலைந்து உடல் நடுக்குற்று, தாய்தந்தை முதலானோரை இழந்தவர்க்கு அம்முறை சொல்லிப் பிறரைக் காட்டுதல் கூடும். ஆயின் கணவனை இழந்த மகளிர்க்கு அங்ஙனம் சொல்லிக் காட்டுவதொன்றில்லை; என்று கருதி அவள் தன் கணவனுடைய இரண்டு அடிகளையும் தொட்டு வணங்கி நிலத்துவீழ்ந்து இறந்தனள்.

## சிலப்பதிகாரம் வழக்குரைகாதை

**அல்லவை செய்தார்க்கு அறங்கூற்ற மாமென்னும்**
**பல்லவையோர் சொல்லும் பழுதன்றே**

### உரை

பாவச் செயல்களைச் செய்தவர்களுக்கு அறக் கடவுளே யமனாக இருந்து ஒறுக்கும் என்கின்ற பல அறிஞர்களின் கூற்றும் பயனிலதன்று.

கி. பி. 11ஆம் நூற்றாண்டிலே தமிழகம் முழுமையும் ஒரு குடைக்கொண்ட சோழர் குலப் பெருமன்னனாகிய இராசராசன் என்பான் இலங்கையினையும் அடிப்படுத்திச் சிங்கள மன்னனாகிய ஐந்தாம் மகிந்தனையும் மனைவியையும் சிறைப்பிடித்துச் சென்றனன். தஞ்சையில் அமைந்த மாளிகை ஒன்றிலே அவ்விருவரும் மரியாதையுடன் வைத்துக் காவல் செய்யப்பட்டார்கள். சிங்கள மன்னனின் மனைவி பத்தினிவழிபாடு குன்றாதவளாகையால் அவ்வழிபாடிழந்து உயிர்வாழ்வதற்காகப் பெரிதும் வருந்தினாள். பகைவர்மீதும் அருட்கண் செலுத்தும் பண்புடைத் தமிழ்ப்பெரு மன்னனாகிய இராசராச சோழன் இதனை யறிந்து அவள் விருப்பப்படியே கண்ணகி கோயில் ஒன்றை அமைத்துக் கொடுத்ததோடு பத்தினி விழாவும் அங்கு ஒழுங்குற நடந்துவரச் செய்தான். இச்சோழ மன்னனது புகழுக்கோர் சிகரம்போன்று விளங்கும் தஞ்சை இராசராசேசுவரப் பெரும்பள்ளி என்ற பிரகதீசுவரர் கோயிலுக்குச் சிறிது தூரத்தே இந்தக் கோயில் இன்றும் இருக்கின்றது.

***(பண்டிதர் வி. சீ. கந்தையா அவர்கள் எழுதிய மட்டக்களப்புத் தமிழகம் என்ற நூலில் இருந்து அநுவதிக்கப்பட்டது.)***

# கண்ணகைஅம்மன் தனிப்பாடல்கள்

1. **அங்கணுக்கடவை கண்ணகையம்மன் காவியத்திலிருந்து**

உன்றனைநெஞ் சாரவே நினையாத வாறே
ஓதுமறை யோனெழுது முழுவினை தானோ
என்னவினை யென்றறியேன் எனது சென்னிக்குள்
எய்திய பிணித்துயரம் நீகளைந் தருள்வாய்
தென்னவனை அன்றுபழி கொண்டதிரு மாதே
தேசிகர் குலத்திலே வந்ததெள் ளமுதே
அன்னநடை மாமயிலே தெய்வநா யகமே
அங்கணுக் கடவை மருவுகண் ணகையே.

2. **வற்ருப்பளை கண்ணகை காவியத்திலிருந்து**

அங்கத்துறு பருநோயெமை
அடையா வரமருளிப்
பங்கஞ்செய் கண்ணோய்முதல்
பலவும் எமைஅணுகா
செங்கணுடை மங்கையெங்கள்
திருவாகிய செல்வீ
எங்கும்புகழ் தங்கவரு
வற்ருப் பளையாளே.

3. **பட்டிருப்பு கண்ணகையம்மன் மழைக் காவியத்திலிருந்து**

கண்ணீரி னுல்வந்த கனகபத் தினியே
களனியுறு வேளாண்மை புன்செய்சே னைப்பயிர்கள்
உண்ணீர்மை குன்றிமிக வாடுதே யம்மா
ஒருநொடியில் மழைவெள்ள மோடிவரச் செய்வாய்
மண்ணீரி னுல்நுரை திவலையெழ வாருேடை
வாவிகுள மெங்குமே நீர்பெருக வேணும்
பெண்ணீர்மை தங்கிவளர் மாசற்ற செல்வியே
பேசரிய பட்டிநகர் வாழுமா தாயே.

4. **தம்பிலுவில் கண்ணகையம்மன் காவியத்திலிருந்து**

பொருள்வைத்த வணிகர்க்கு மகவுற்ற குயிலே
புகழ்பெற்ற மதுரைக்கு எரியிட்ட திருவே
தருவைத்த புகழ்சற்ப மலரிட்ட மயிலே
தயவுற்ற உனை நித்தம் மலரிட்டும் அறியேன்
திருவொத்த முகிலொத்த பதநித்தம் பணிவேன்
திகழ்பெற்ற பலபிணி நோயகற் றிடுவாய்
கருவுற்ற முகிலொத்த தனவெற்பு மயிலே
காசினி துதிக்கவரு கண்ணகைத் தாயே.

5 **தாண்டன்வெளி கண்ணகையம்மன் காவியத்திலிருந்து**

கோலமா மதகரிக் கோடொத்த கனதனக்
குலவணிகர் தன்குடிக் குகந்தகற் பரசியே
காலமழை பொய்க்கினுமுன் கருணைமழை பொய்யாது
காலிலணி நாகபணித் தரிசுச் சிலம்பால்
ஞாலமுழு தும்புகழ் படைத்தமா பத்தினி
தவளமொடு பவளநிரை தண்டிகையி லேறி
காலிவயல் சூழவுறும் வற்றுப் பழையில்வாழ்
கண்ணகையை யெண்ணவினை காதமோ டிடுமே.

6. தேவர்தொழு திரிபுரை யானாய் நமோநமோ
திரிபுவன ரீங்கார சக்தி நமோநமோ
மூவர்புகழ் முச்சக்தி யானாய் நமோநமோ
மூதறி வுணர்ந்திடு மங்காய் நமோநமோ
நாவதனி லோதவருள் தந்தாய் நமோநமோ
நாற்பத்து முக்கோண நாயகியே நமோநமோ
பாவவினை நோயகல வந்தாய் நமோநமோ
பாவையே திரையில்வரு பரமகண் ணகையே.

(நன்றி மகாமாரித்தேவி திவ்வியகரணி)

# கோப்பாய் பலாலே கண்ணகையம்மன் கோயில் தூபிகளில் காணப்படும் சிற்பங்கள்

மூலஸ்தானத்தின் மேலேயுள்ள விமானத்திலும் பரிவார தேவாலயங்களின் விமானங்களிலும் சுதை வேலையாக அழகிய சிற்பங்கள் உருவாக்கப்பெற்று தற்கால முறைப்படி அழகுக்கு அழகு செய்வனவாக ஏகவர்ணந் தீட்டப்பெற்று பார்ப்போர் கண்ணுக்கும் மனதுக்கும் பெருவிருந்தாக அமைந்துள்ளது.

விநாயகராலய விமானத்தின் நாற்புறங்களிலும் நான்கு விநாயகர் திருவுருவங்கள் வெவ்வேறு கோலங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

1. கிழக்கில் வாசற்படிக்கு மேற்புறத்தில் மூஷிகவாகனரான விநாயகப்பெருமான் பாசம், அங்குசம், முறிந்த கொம்பு, மோதகம் என்பனவற்றைத் தாங்கி அமர்ந்திருக்கின்ற திருக்கோலத்தில் காட்சிதருகின்ருர்.
2. வடக்குப் பக்கத்தில் வலம்புரி விநாயகர் காட்சி தருகின்ருர்.
3. மேற்கில் நிருத்த கணபதி, மேற்குறித்த ஆயுதங்கள் தாங்கிய நான்கு கரங்களும் துதிக்கையும் ஆட்டத்தின் வேகங் காரணமாக நீண்டு உயர்ந்து நிற்க நடனக் கோலத்தில் காட்சிதருகின்ருர்.
4. தெற்குப் பக்கத்தில் மகாகணபதி காட்சி கொடுக்கிருர்.

இவற்றைவிட, அப்பால்,

முருகப்பெருமானது ஆலய விமானத்தில் அமைக்கப்பட்டிருக்கும் நான்கு விதத் திருக்கோலங்கள் மிக மிகச் சிறந்தனவாகக் காட்சிதருகின்றன.

1. வாயிலுக்கு மேலே கிழக்கில் வள்ளி தேவயானே சமேதராக நான்கு கரங்களோடு முருகன் நின்ற கோலத்தில் காட்சி தருகின்ருர். இத்திருவுருவத்தை முத்துக்குமாரசுவாமி என்றுஞ் சொல்வார்கள்.
2. மேற்கே விமானத்தின் பின்புறத்தில் சக்திகளின்றி நான்கு திருக்கரங்களோடு மயிலுடன் காட்சி தருபவர் அந்த மயிலாற் பெயர்பெற்றவரான சிகிவாகனர். (சிகி—மயில்).
3. தெற்கில் இருகரங்களுடன் காட்சி தருபவர் பாலசுப்பிரமணியர்.
4. வடக்கில் ஆண்டிக் கோலத்தில் நிற்பவர் தண்டபாணி என வழங்கப்படும் பழனியாண்டியாவர்.

அப்பாற் செல்லும்போது,

ஆலயத்தைக் காக்கும் கடமையிலிருப்பவரான வைரவரது ஆலயவிமானத்தில் க்ஷேத்திரபாலர் சூலாயுதந்தாங்கி —சுவான (நாய்) வாகனத்தோடு தரிசனம் தருகின்ருர்.

மேற்கொண்டு,

பிரதான ஆலயத்தின் விமானத்திலுள்ள சிற்பங்களேப் பார்ப்போம். முதலாம் இரண்டாம் தளங்களில் மிக அழகுறச் செதுக்கப்பட்டுள்ள — வாயைப் பிளந்து கொண்டு கனல்கக்கும் கண்களோடு காணப்படும் சிங்கங்கள், கோபுரந்தாங்கிகளிடையே கண்ணகி கதை வரலாற்றினே யொட்டிய, சிலப்பதிகாரம் சம்பந்தப்பட்ட கதை வரலாறுகள் ஒன்றன்பின் ஒன்ருகக் காட்சிதருகின்றன.

முதலாந்தளத்தில் தெற்குப்புறத்தில்,

1. அர்த்த மண்டபத்தின்மேல் கோவலன் கண்ணகி திருமணம் சித்தரிக்கப்பட்டிருக்கின்றது. வாத்தியம் முழங்க, தாய் மலர்த் தட்டேந்திநிற்ப, மறைவழி நின்று தீவலஞ்செய்து, கோவல

னுக்குக் கண்ணகியை, மாநாய்க்கன் செட்டியார் தாரை வார்த்துக் கொடுக்கும் காட்சி அழகுறச் செதுக்கப்பட்டுள்ளது.

2. சேரன் செங்குட்டுவன் இமயத்தினின்றும் கொணர்ந்த பத்தினிக் கல்லை, தன்னுடன் செய்த போரில் தோல்விகண்ட கனகவிஜயருடைய முடிமீதேற்றி கங்கையில் முறைப்படி நீர்ப்படை செய்யக் கொணர்தலையும்,

3. கைப்பொருள் முழுவதையும் மாதவிக்குக் கொடுத்து வெறுங் கையனாய்த் திரும்பிய தனது கணவன் கோவலனது குறிப்பறிந்து, குறுநகை காட்டி ''என்னிடம் இரண்டு சிலம்புகள் உள்ளன; கொண்மின்''—என்று கொடுக்கப் போதலையும்,

4. ''நிலைக்களங் காணு நெடுங்கண் உகுப்ப முத்தார மார்பின் முலைமுகந் திருகி'' மதுரையை எரிக்க ஆவேசமுற்ற நிலையில் கண்ணகி நிற்றலையும் பார்க்கலாம்.

மேற்குப்புறத்தில்,

5. முதலாவதாக, கணவனையிழந்த நிலையில் நிற்கும் கண்ணகி முன் மதுராபுரித் தெய்வம் புறப்பட்டு அவளது பழம் பிறப்பு வாசனையைக் கூறல்.

6. கற்பரசி கண்ணகி — கண்ணகையம்மனாகி தெய்வவடிவு பெற்றுவிட்ட போதுள்ள சாந்தசொரூபநிலை.

7. பாண்டியன் முன்னிலையில், கோவலனிடமிருந்து பெற்ற சிலம்பை வரவழைத்து உடைத்து உள்ளேயிருப்பது மாணிக்கப் பரல்தான் என்பதனை நிரூபித்து ''தன் கணவன் கள்வனல்லன்;'' என்பதனை ஆதாரபூர்வமாகக் காட்டும் நிலை.

வடக்குப்புறத்தில்,

8. இடைச்சேரியில் இருக்கும்போது தாங் கண்ட தீக்கனக்கள் பற்றியும் துர்ச்சகுனங்கள் பற்றியும் உற்பாதங்கள் பற்றியும் கண்ணகியும் ஐயையும் உரையாடல்.

9. தலையில் முடியோடும் நான்கு திருக்கரங்களோடும் தோன்றிய சூரியபகவானைப் பார்த்து ''காய்கதிர்ச் செல்வனே! நீயறிய என் கணவன் கள்வனே?'' —என்று கண்ணகி கேட்ப, ''அவன் கள்வனல்லன்; அவனைக் கள்வனென்று கொலைசெய்த இவ்வூரை எரியுண்ணும்'' என்று சூரியன் கூறும் காட்சி.


10. மாதரி, கண்ணகிக்குக் கொலைப்புதினம் கூறல்.

11. வடக்குப்புறத்தில் கடைசியாக அர்த்த மண்டபத்தின் மேற்புறத்தில்; இந்திர விழாவின்போது மாதவி யாழ் வாசிப்பதும் கோவலன் அவதானித்துக் கேட்டுக் கொண்டிருப்பதும். (மாதவி வாசித்த யாழிசைமேல் ஊழ்வினை வந்து உருக்க, ''யான் கானல்வரிபாட இவள் வேறொன்றின்மேல் மனம் வைத்துப் பாடினுள்'' என்று நினைத்து அவளை அணைத்த கை நெகிழ்ந்தவனாய்ப் பிரிந்து போதற்குரிய நிலை உருவான இடம்).

விமானத்தின் மேல்தளத்தில் தெற்குப் புறத்தில் உடைந்த சிலம்பை பாண்டியன் முன் காட்டி வாதாடும் நிலையும், மேற்குப் புறத்தில் கையில் சிலம்பைத் தாங்கியுள்ள சாந்தநிலையும், வடக்குப்புறத்தில் கோபக் கனல் தெறிக்கும் கண்களோடு ஆவேச முற்று மதுரையை எரிக்க முற்படும் நிலையும் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன.

ஸ்நபன மண்டப முகப்பில் தடைச்சுவரில்; பாண்டியன் கொலுமண்டபத்தின்முன்; தன் கணவன் கோவலனை இழந்த நிலையில் தலைவிரி கோலமாய்த் தோன்றிய கண்ணகி ''தேரா மன்னு செப்புவ துடையேன்'' என்று கூறி வழக்குரைக்கும் காட்சி கண்களைக் கவரும் நிலையில் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அழகுக்கு அழகுசெய்யும் அம்சங்கள் கோப்பாய் பலானை அம்மன் திருவாலயத்தில் பொலிந்து விளங்குவதற்குத் திருவருள் சுரந்துவரும் கண்ணகை அம்மன் திருவடிகளை மனசில் இருத்திப் பிரார்த்திப்போமாக.



7. "இவ்வூரை எரிஉண்ணும்" சூரியக்கடவுன் கண்ணகிக்குக் கூறுதல்.

8. கண்ணகியின் ஆவேச நிலை.

9. மதுராபுரித் தெய்வம் கண்ணகிக்குப் பழம் பிறப்பினை உணர்த்துதல்.

10. இமயத்திலிருந்து பத்தினிக் கல்லை கனகவிஜயனுடைய முடிமீது ஏற்றிக் கொணர்தல்.

# கோப்பாய் பலானை கண்ணகை அம்மன்கோயில், பரிபாலன சபையிலிருந்து தொண்டாற்றி அமரத்துவம் அடைந்த பெரியார்கள்.



திரு. வ. முத்துக்குமாரசாமி



திரு. மு. பரமலிங்கம்



திரு. பொ. கந்தையா



திரு. வ. சோமசுந்தரம்

உ

சிவமயம்

தேவிதுணை

# கண்ணகைபேரி லூஞ்சல்

## விருத்தம்

பூமேவு திசைமுகன்மா லரிவிண் ணேர்கள்
போற்றவெழில் வழுதியெனப் புவியை யாளும்
மாமேவு மதுரைமீ னுட்சி கண்ணில்
வளர்சோதி மாங்கனியாய் வடிவ மாகித்
தேமேவு கோவைநகர்க் கோவில் கொண்ட
தேவிமகி ழூஞ்சலிசைச் செய்யுள் பாட
நாமாது நலந்தரநல் லருள்கூ ரங்கை
நாதனடி யிணைமலர்கள் நயத்தல் செய்வாம். 1

சுந்தரஞ்சே ரரவரசு கால தாகத்
துய்யபல புவனங்கள் பலகை யாகச்
சந்தவிசைப் பலகலைநா லிளைய தாகத்
தனிவேத நாலுமணிக் கயிற தாக
உந்துகட ராதவன்ரு ராக ணங்கள்
ஒளிருமுடு பதியும்பர் விதான மாகக்
கொந்தண்மலர் மலர்மலிபூஞ் சோலை சூழுங்
கோவைநகர்க் கண்ணகையே யாட ரூஞ்சல். 2

அருணநகை முத்தமுத மதுர வாணி
யாம்பலர விந்தமிசைக் குயிலை நேரும்
தருணநகை வாணிபல கலையின் செல்வி
சகிமார்க ளுடன்சாம கீதம் பாடக்
கிரணமலி யிரணியநன் னகரை யாளுங்
கிருதுபதி மனமகிழுந் துணைவி யான
விரணவயில் விழிமாது வடந்தொட் டாட்ட
வெழிற்கோவைக் கண்ணகையே யாட ரூஞ்சல். 3

பரதவிர சதசபையிற் பயிலு மாதி
பாண்டியனே யாகிமணி மௌலி சூடும்
வரதனரு ளுருவமா யொருபான் மேவும்
மாதுமைகண் ணினிலவளே யென்ன வந்து
அரதனநா புரம்பகரும் வணிகற் காக
வளமாற னுயிருடனே பழியும் வாங்கிச்
சரதமுல குய்யவெழிற் கோவை வாழுந்
தாயாகுங் கண்ணகையே யாட ரூஞ்சல். 4

கங்கைபகீ ரதிதருவெண் டிரையை மானுங்
கவரிமலர்க் காந்தளங்கை பற்றி வீசத்
துங்கமலி காளிகள்வெண் குடைநி ழற்றத்
துவரிதண்மே னகையரம்பை யடைப்பை யேந்தப்
பங்கயமா தர்களிருவர் பலாண்டு சொல்லப்
பாகுமொழிக் கவினிரதி புளகங் கொள்ளக்
கொங்கைமது கரவிசைதேர்ந் துதவும் பொய்கைக்
கோவைநகர்க் கண்ணகையே யாட ரூஞ்சல். 5

சததளவா ரிசபதியிந் திரைசேர் மார்பன்
சகத்திரலோ சனனமரர் சனக ராதி
கதிபெறுமா முனிவர்கட லாடை சூழுங்
காசினியா னவர்பிறருங் கசிந்து கூடி
மதுரைவளம் பதியுமைகண் மணியாய் வந்த
மங்கலைநீ யெனமுறையால் வழுத்தி நிற்பக்
குதிகொள்வரிக் கயல்பாயக் குமுதம் விள்ளுங்
கோவைநகர்க் கண்ணகையே யாட ரூஞ்சல். 6

கனகநவ ரத்னமணி மௌலி மின்னக்
கவின்கொணெற்றிச் சுட்டியிளங் கதிர்கள் காலப்
பனகமணிக் குண்டலங்கள் பகலை வெல்லப்
பனித்தரளத் தொடைநிலவின் பரப்பை யெள்ள
அனகவிடைக் கிரங்கியமே கலைக ளார்ப்ப
அடியவரை யஞ்சலெனச் சிலம்பு மார்ப்பத்
தினகரமண் டலமளவு மதில்சூழ் கோவைத்
தேவிதிருக் கண்ணகையே யாட ரூஞ்சல். 7

சங்குமுழ வந்துடிதண் ணுமையெக் காளந்
    தாரைமுதற் பல்லியங்க டழுங்கி யார்ப்ப
மங்கலவே ழிசைபயிறும் புருவி னேடு
    மகரவியா ழரதர்கீ தங்கள் பாடச்
செங்கயற்க ணரமகளிர் நடனஞ் செய்யத்
    தேவர்மறை வாணர்ஜய ஜயவென் றேத்தக்
குங்குமசந் தனங்கள்பல வாசம் வீசுங்
    கோவைநகர்க் கண்ணகையே யாட லூஞ்சல். 8

சிவன்றருமா கமநூலு மிருதி யாதி
    சிறந்தபல கலைகள்சதுர் வேதந் தானு
முவந்துகட னஞ்சமுது கொண்ட கண்ட
    னொருவனே யுயிர்க்குயிராம் பதியே யென்ன
அவந்தனிலே பலசமயங் கொள்வார் தம்பா
    லணுகாம லடியவருக் கருளை நல்குந்
தவந்தருகா ரனிகவுரி யுமையே கோவை
    தழைக்கவரு கண்ணகையே யாட லூஞ்சல். 9

பலபுவன நாயகியே யாட லூஞ்சல்
    பழமறையி னுட்பொருளே யாட லூஞ்சல்
மலைமடந்தை கண்மணியே யாட லூஞ்சல்
    வணங்கினர்க்கு வரந்தருவோ யாட லூஞ்சல்
சலசமலர் வதனியே யாட லூஞ்சல்
    தமிழ்வாணர்க் கருள்பவளே யாட லூஞ்சல்
குலவுமர கதமயிலே யாட லூஞ்சல்
    கோவைநகர்க் கண்ணகையே யாட லூஞ்சல். 10

ஆதிமறை வாழியா னினங்கள் வாழி
    யந்தணர்கள் வாழியருண் முகில்கள் வாழி
நீதிநெறி நிலம்புரக்கு மன்னர் வாழி
    நிலமாது வாழிமலர் மாது வாழி
பாதிமதி யணிந்தபிரா னடியர் வாழி
    பல்வளமுஞ் சுரந்தீழ நாடும் வாழி
மாதிரமும் புகழ்கோவைச் சனங்கள் வாழி
    மாதுமைகண் ணகைகௌரி வாழி வாழி. 11

(மேற்குறிப்பிட்ட பாடல்களைப் பாடியவர்
இருபாலைச் சேனாதிராச முதலியார்)

# இல. 2321 பராபரிப்புத் தத்துவ உறுதியின்படி முதன்முதல் 1926 வைகாசி 12ஆந் திகதி தெரிவாகிய

# நிர்வாகசபையினர்

கோப்பாய் தெற்கு

1. வைத்திலிங்கம் தாமோதரம்பிள்ளை
2. அம்பலவாணர் விசுவநாதர்
3. சண்முகம் சுப்பிரமணியம்
4. சுவாமிநாதர் சுப்பிரமணியம்
5. வேலு பொன்னையா
6. வேதவனம் வேலுப்பிள்ளை

இருபாலை

7. மூத்ததம்பி சேனுதிராசா
8. சண்முகம் வேலாயுதபிள்ளை
9. வயித்திலிங்கம் முத்துக்குமாரு
10. இளையப்பு பொன்னையா

கோப்பாய் வடக்கு

11. அம்பலவாணர் கார்த்திகேசு
12. சின்னத்தம்பி நாகலிங்கம்
13. முருகேசர் நாகலிங்கம்
14. சின்னத்தம்பி முருகேசு
15. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை
16. கணபதியார் காசிப்பிள்ளை
17. கார்த்திகேசு சடையர்
18. பூதத்தம்பி சின்னப்பு
19. சின்னப்பு பொன்னையா
20. கதிரேசு வைத்திலிங்கம்
21. கதிரவேலு இளையதம்பி
22. அப்பாக்குட்டி காசிலிங்கம்
23. குமாரசூரியர் சதாசிவம்

குமாரசூரியர்
(நல்லூர்)

ஐவர் குழு

24. முருகேசு பொன்னம்பலம்
25. வயித்திலிங்கம் சுப்பிரமணியம்
66. ஆறுமுகம் கதிரேசர்
27. முருகேசு வயிரமுத்து
28. கணபதிப்பிள்ளை கந்தையா

# தற்போதைய பரிபாலனசபை உறுப்பினர்கள்

1. திரு. க. இ. குமாரசாமி, தலைவர்
2. ,, அ. வி. மயில்வாகனம், உப தலைவர்
3. ,, க. கனகலிங்கம், ,, ,,
4. ,, பொ. கந்தையா, செயலாளர்
5. ,, க. மார்க்கண்டு, உப செயலாளர்
6. ,, மா. நடராசா, தனதிகாரி
7. திரு. த. கந்தையா
8. ,, த. சுப்பிரமணியம்
9. ,, அ. சங்கரப்பிள்ளை
10. ,, பொ. பிறைசூடி
11. ,, வீ. க. செல்லத்துரை
12. ,, பூ. சி. சுப்பிரமணியம்
13. ,, தி. சுப்பிரமணியம்
14. ,, நா. மாணிக்கம்
15. ,, செ. முருகேசு

சிவமயம்

## கடவுள்

உலகமாவது சித்தும் அசித்துமென இருவகைப்படும் பிரபஞ்சமாம். சித்து அறிவுடைய பொருள். அசித்து அறிவில்லாத பொருள். அசித்தென்றாலும், சடமென்றாலும் பொருந்தும். உலகம் தோன்றி நின்று அழியுங் காரியமாய் உள்ளது. ஆதலினால், உலகத்தைப் படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் மூன்று தொழில்களையுஞ் செய்தற்கு ஒரு கடவுள் இருக்கிறார் என்பது, நன்றாக நிச்சயிக்கப்படும்.

கடவுள் என்றும் உள்ளவர், அவருக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை. அவர் எங்கும் நிறைந்தவர், அவர் இல்லாத இடம் இல்லை. அவர் எல்லாம் அறிபவர், அவர் அறியாதது ஒன்றுமில்லை. அவருடைய அறிவு இயற்கையறிவு, ஒருவர் அறிவிக்க அறிபவரல்லர். அவர் எல்லாம் வல்லவர், அவரால் இயலாத கருமம் ஒன்றுமில்லை. அவர் அளவிடப்படாத ஆனந்த முடையவர், தம்முடைய அநுபவத்தின் பொருட்டு வேறொன்றையும் வேண்டுபவரல்லர். அவர் தம்வயமுடையவர், பிறர்வயமுடையவரல்லர். அவர் உயர்வும் ஒப்பும் இல்லாதவர்; அவரின் மேலானவரும் இல்லை; அவருக்குச் சமமானவரும் இல்லை. அவர் சகல லோகத்துக்கும் ஒரே நாயகர். அவர் செய்யுந் தொழில்களுள் ஒன்றாயினும் அவருடைய பிரயோசனத்தைக் குறித்ததன்று. எல்லாம் ஆன்மாக்களுடைய பிரயோசனத்தைக் குறித்தவைகள். அவர் ஆன்மாக்களிடத்திலுள்ள கைம்மாறில்லாத அளவுகடந்த திருவருளே திருமேனியாக உடையவர்.

கடவுள் ஆன்மாக்கள்பொருட்டு வேதம் ஆகமம் என்னும் முதனூல்களை அருளிச்செய்தார். அவைகளிலே விதிக்கப்பட்டவைகளெல்லாம் புண்ணியங்கள். விலக்கப்பட்டவைகளெல்லாம் பாவங்கள். அவர் புண்ணியத்தைச் செய்த ஆன்மாக்களுக்கு இன்பத்தையும், பாவத்தைச் செய்த ஆன்மாக்களுக்குத் துன்பத்தையும் கொடுப்பார். துன்பத்தைக் கொடுத்தலினால் அவரை வன்கண்ணரென்று கொள்ளலாகாது. தீமை செய்த பிள்ளைகளைப் பிதா மாதாக்கள் தண்டித்தலும், சில வியாதியாளர்களுக்கு வைத்தியர்கள் சத்திரமிட்டறுத்தலும், இருப்புக்கோல் காய்ச்சிச் சுடுதலும், கண்ணிற்படலத்தை உரித்தலும் அவர்களிடத்துள்ள இரக்கத்தினாலன்றி வன்கண்மையினாலல்லவே. அதுபோலக் கடவுள் பாவஞ் செய்த ஆன்மாக்களைத் தண்டித்தல், அப்பாவத்தை ஒழித்து மேலே பாவஞ் செய்யாவண்ணம் தடுத்து அவர்களை நல்வழியிலே செலுத்தி உய்வித்தற்கு ஏதுவாதலினால், அதுவும் கருணையேயாம்.

## ஆன்மா

இவ்வருமையாகிய மனிதப்பிறப்பை உண்டாக்கியது உயிர்க்குயிராகிய கடவுளை மனம் வாக்குக் காயங்களினாலே வழிபட்டு அழிவில்லாத முத்தியின்பத்தைப்பெற்று உய்யும் பொருட்டேயாம். சரீரம் கருப்பையில் அழியினும் அழியும். பத்துமாதத்திற் பிறந்தவுடனே அழியினும் அழியும். மூன்று வயசுக்குமேற் பதினாறு வயசுவரையிலுள்ள பாலாவத்தையின் அழியினும் அழியும். அதற்குமேல் நாற்பது வயசுவரையிலுள்ள தருணாவத்தையின் அழியினும் அழியும். அதற்கு மேற்பட்ட விருத்தாவத்தையின் அழியினும் அழியும். எப்படியும் இந்தச் சரீரம் நிலை

யின்றி அழிவது உண்மையாமே. அழியுங்காலமோ தெரியாதே. இப்பிறவி தப்பினல் எப்பிறவி வாய்க்குமோ, யாதுவருமோ, அதுவும் தெரியாதே. ஆதலால், இந்தச் சரீரம் உள்ளபொழுதே இதனது நிலையாமையை அறிந்து பெருங்கருணைக்கடலாகிய கடவுளை வழிபட்டு உய்யவேண்டும்.

## கடவுள் வழிபாடு

கருணைநிதியாகிய கடவுள், புறத்திலே திருக்கோயிலுள்ளிருக்கும் இலிங்கம் முதலிய திருமேனியும், தமது மெய்யடியாருடைய திருவேடமும் ஆதாரமாகக்கொண்டு நின்றும், அகத்திலே உயிர் இடமாகக் கொண்டு நின்றும், இங்குள்ளவர் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவர். ஆதலால், அவரை வழிபடும் இடங்கள் இவைகளேயாம்.

கடவுள் அங்கிங்கெனதபடி எங்கும் வியாபகமாய் நிற்பினும், இவ்விடங்களின் மாத்திரம் தயிரில் நெய்போல விளங்கி நிற்பர். மற்றையிடங்களெல்லாவற்றினும் பாலில் நெய்போல விளங்காது நிற்பர்.

கடவுளுக்குச் செய்யும் வழிபாடுகளாவன, அவரை மனசினலே தியானித்தலும், வாக்கினலே துதித்தலும், கைகளினலே பூசித்தலும், கால்களினலே வலம்வருதலும், தலையினலே வணங்குதலும், செவிகளினலே அவருடைய புகழைக் கேட்டலும், கண்களினலே அவருடைய திருமேனியைத் தரிசித்தலுமாம்.

அன்பில்லாத வழிபாடு உயிரில்லாத உடம்புபோலும். அன்பாவது தன்னல் விரும்பப்பட்டவரிடத்தே தோன்றும் உள்ளநெகிழ்ச்சி. கடவுளிடத்தே அன்புடைமைக்கு அடையாளங்களாவன, அவருடைய உண்மையை நினைக்குந்தோறும் கேட்குந்தோறும் காணுந்தோறும் தன்வசமழிதலும், மயிர்க்கால்தோறுந் திவலை உண்டாகப் புளகங்கொள்ளலும், ஆனந்தவருவி பொழிதலும், விம்மலும், நாத்தழுதழுத்தலும், உரை தடுமாறலும், அவரால் விரும்பப்படுபவைகளைச் செய்தலும், வெறுக்கப்படுபவைகளைச் செய்யாதொழிதலும், அவருடைய மெய்யடியார்களைக் காணும்பொழுது கூசாது வணங்குதலும், பிறவுமாம்.

கடவுளால் விரும்பப்படுபவைகளாவன இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய் தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாம். கடவுளால் வெறுக்கப் படுபவைகளாவன கொலை, புலாலுணல், களவு, கள்ளுணல், வியபிசாரம், பொய், செய்ந்நன்றி மறத்தல் முதலிய தீமைகளாம்.

ஆன்மாக்களாகிய நாம், பிறர்வயமுடையவர்களும், சிற்றறிவு சிறுதொழிலுடையவர்களுமாய் இருத்தலினலே, நன்மை தீமைகளை உள்ளபடி அறியவும், தீமைகளை ஒழித்து நன்மைகளையே செய்யவும் வல்லேமல்லேம். ஆதலால், தம்வயமுடையவரும் முற்றறிவு முற்றுத்தொழிலுடையவரும் ஆகிய கடவுளை வணங்கி, அவருடைய திருவருள் வசப்பட்டு ஒழுகுவோமானல், நாம் தீமைகளினின்று நீங்கி நன்மைகளைச் செய்து தம்மை வழிபட்டு உய்யும்படி அவர் நமக்கு அருள்செய்வார்.

**ஆறுமுகநாவலர்**

உ

வடகோவை பலானை கண்ணகை அம்பாளின்
மஹா கும்பாபிஷேகத் திருநாளில்
எமது உளம்நிறைந்த
மங்கள வாழ்த்துக்கள்

❋

மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கவேண்டுமா?
வாருங்கள் இங்கே

↓

## செல்வன் டீசல் எஞ்ஜினியேர்ஸ்

கோப்பாய்ச் சந்தி

தொழிலகத்தில் குறைந்த செலவில்
நிறைந்த சேவையை
உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்.

ஒருமுறை வாகனங்களுடன் தரிசித்துப் பாருங்கள்

❋

## செல்வன் டீசல் எஞ்ஜினியேர்ஸ்

கோப்பாய்ச் சந்தி, கோப்பாய்

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்